
www.tamilarangam.net

# எரிமலை

செப்டெம்பர் 2000



"இலக்கு வெகுதுல்லியம்!"
எறிகணை உசுப்பும்
ஏவுபொறிச் சுடுதிறன் மேலாண்மை,
தமிழர் சேனையின் "மரபுப்போர்"
முதிர்ச்சியில் ஒரு மைல்கல்!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கறைப் பூக்கள்

எரிமலையின் நீண்டகால வாசகர்களில் நானும் ஒருவன். இதுவே எனது முதல் மடல். இவ்வளவு காலமும் கடிதம் எழுதத் தோன்றவில்லை. ஒகஸ்ட் இதழ் கண்டதும் எழுதுகிறேன். கொன்கோட் விமானம் எரிந்தபடி வானில் பறந்ததை பார்த்தபோதும் அதிசயிக்கவில்லை. அப்பாவித் தமிழனின் தலையை கையில் வைத்திருந்தபடி சிங்களச் சிப்பாய் நின்றிருந்தானே இதைப் பார்த்ததும் நான் விறைத்துவிட்டேன். இவர்கள் எல்லாம் "மனிதஇனம்தானா" என்றுகூட யோசிக்க வேண்டியுள்ளது. என்னுடைய சிறார்கள்கூட அந்தப் படத்தை பல நாட்களாகவே திரும்பத் திரும்பப் பார்க்கிறார்கள். அவர்களுக்குக்கூட புரிந்திருக்கும் இவர்கள் மனிதர்களே அல்ல என்று... மேலும் எரிமலையின் வடிவம் மிகவும் தரமாகவே வளர்ந்து கொண்டிருக்கின்றது. இதன் விலையை விடத் தரம் மேலோங்கியே நிற்கின்றது மேலும் வளர என் வாழ்த்துக்கள்

பூ.கருணாநிதி
ஜேர்மனி

✉ ✉ ✉

எரிமலை மே மற்றும் ஜுன் இதழ்கள் கிடைக்கப் பெற்றேன். பல்வேறு உணர்வுச் சிதறல்களைப் பெற்றேன்.

பெண் புலிகளின் சாதனை, யாழ் நூலகம், வியட்நாமின் உலகை உலுக்கிய செய்தியும் படமும், அத்துடன் கவிதைகள், சிறுகதைகள் அனைத்தும் சிறப்பாக இருந்தது. தமிழீழத் தேசியத் தலைவரவர்களின் சிந்தனை சிந்திக்க வைத்தது. மாணவர் சமூகத்திற்கு அவர் இட்ட கட்டளையும் கண்டேன்.

ஓயாத அலைகள்-3 பற்றிய செய்தி கண்டேன். பூமிப் பந்தில் புரட்சிகரமான அதே நேரத்தில் தமிழனின் மரபு வழித் தமிழீழ தேசம் உருவாகும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பது தெரிகிறது.

நாக இரகுபதி
மயிலாடுதுறை
தமிழ்நாடு

✉ ✉ ✉

எரிமலை படிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தமிழ்நாட்டில், ஈழத்தில் நடைபெறும் உண்மை நிகழ்வுகளை பொய்ச்செய்திகளாக வெளியிட்டுக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் பத்திரிகைக்கு மத்தியில் உண்மை நிகழ்வுகளை மட்டுமே தாங்கிவரும் எரிமலையை நாங்கள் வரவேற்கிறோம். உங்களின் முயற்சிகள் மென்மேலும் தொடர எங்களின் நல் வாழ்த்துக்கள் என்றும் உண்டு.

மே.கா.கிட்டு
மேட்டூர் அணை
தமிழ்நாடு

✉ ✉ ✉

கடந்த ஜுன் 2000 எரிமலை இதழ் எனது நண்பர் மூலம் கிடைத்தது. முற்றிலும் படித்து மிக மிகப் பிரமிப்புடன் இம்மடலினை எழுதுகின்றேன். உண்மையில் இது போன்ற தமிழீழ ஆதரவாளர்களுக்கென தனியொரு மாதசஞ்சிகை தெள்ளத்தெளிவான படங்களுடன், உண்மைச் சேதிகளையும் புள்ளிவிபரங்களுடன் வருவது என் போன்ற தமிழுணர்வாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இது போன்று இன்னும் நிறையச் செய்திகளையும் பயனுள்ள விடயங்களையும் தந்து தமிழீழ விடுதலைப் பரப்புரைக் கருவியாக எரிமலை திகழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

மு.பா.தினகரன்
திருச்சி
தமிழ்நாடு

✉ ✉ ✉

இலங்கையில் கடுமையான பத்திரிகைத் தணிக்கையை அமுலாக்கியதோடு, சில பத்திரிகைகளையும் தடைசெய்துள்ளது உலக பாசிஸ்ட் என்று சொல்லக்கூடிய ஹிட்லரைவிடவும் மோசமான கொடுங்கோல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் சிங்கள அரசு. அங்கே நடக்கும் வரலாற்று முக்கியத்துவமான போரின் உண்மைச் செய்திகளை மூடிமறைக்க இலங்கை இராணுவம் வெளியிடும் செய்தியே இங்கே பரப்பப்பட்டு வருகின்றது. இவ்வேளையில் எம்மின மக்கள் படும் அவலத்தையும், எம்மினப் போராளிகள் அடைந்து வரும் வெற்றிகளையும் அறிய எரிமலை இதழ் தமிழக மக்களாகிய எங்களுக்கு பேருதவியாக விளங்குகின்றது.

த.இலங்கேஸ்வரன்
விழுப்புரம்
தமிழ்நாடு

✉ ✉ ✉

ஜுன் மாத இதழ் கண்டேன். தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்ற கட்டுரை மூலம் சிங்கள அரசுகளின் சூழ்ச்சிகளையும், சில எட்டப்பர்களின் எத்து வேலைகளையும் அறியும்போது மனதில் ஒரு ஆதங்கம் ஏற்படுகிறது. தமிழகத்தில் தமிழன் செய்யவேண்டிய வேலைத்திட்டங்களை அறைந்து கூறுமாற்போல எழுச்சி விழாக்கள் நடைபெற்ற செய்திகள் அமைந்திருந்தன. வண்ணப்படங்களில் வந்த புலம்பெயர்ந்த தமிழர்களின் இன உணர்வு வெளிப்பாட்டினை கண்டு மனம் மகிழ்ந்தேன்.

வெ.நாராயணசாமி
நகரச்செயலாளர், திராவிடர் கழகம்
அருப்புக்கோட்டை
தமிழ்நாடு

✉ ✉ ✉

தமிழீழ விடுதலைப் போராட்டம், இரண்டு தளங்களில் கடுமையாகப் போராடி வருகின்றது. ஒன்று ஆயுத ரீதியாக, மற்றையது கருத்தியல் ரீதியாக. ஆயுத ரீதியாக விடுதலைப் புலிகள் தாய்த்தமிழீழத்திலே எதிரியை முறியடித்து மாபெரும் வெற்றிகளைச் சந்தித்து வருகின்றனர். அதேவேளையில் கருத்தியல் ரீதியில் தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் எரிமலை முக்கிய பங்கு வகிக்கின்றது.

எரிமலை இதழ் வடிவமைப்பில் மிகுந்த தரத்தோடு வருகின்றது. இந்தியாவில் இவ்வளவு தரமான இதழை நாங்கள் நினைத்துப் பார்க்க முடியாது. எரிமலையில் வெளிவரும் கட்டுரைகளின் கனதியைக் கூட்டலாம்.

இருபத்தைந்து வருடகாலத் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தில் சாதனைகள், சோதனைகள் பற்றிய ஆய்வுபூர்வமான கட்டுரைகள், தமிழர் பண்பாட்டு கலாச்சார மரபுகள் பற்றிய கட்டுரைகள், மூன்றாம் உலக தேசிய விடுதலைப் போராட்டங்கள் பற்றிய கட்டுரைகள், சமகால நவீன இலக்கியப் போக்குகள், விவாதங்கள் இன்னும் இவைபோன்ற பல்வேறு ஆய்வுக்கட்டுரைகள் எரிமலையில் இடம்பெற்றால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

எரிமலையின் வாசகர் தளத்தை விரிவுபடுத்த வேண்டும். அப்போதுதான் அதனூடாக தமிழக மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராட்டம் சம்மந்தமான உண்மைச் செய்திகளை அறியக்கூடியதாக இருக்கும்.

இ.சி.இராமச்சந்திரன்
ஈரோடு,தமிழ்நாடு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...

எரிமலை
செப்டெம்பர் 2000


**கட்டுரை**

| | |
|---|---|
| பாரிய அளவிலான தயாரிப்புடன் தொடங்கி பெயர் சொல்ல இயலாது முடிந்த 'ரிவிகிரண' | பக்கம் - 04 |
| சிங்கள தேசமும் குடாநாட்டுப் போரும் | பக்கம் - 06 |
| இராணுவப் பதவி நிலை மாற்றங்களும் அதிகரிக்கும் அரசியற் தலையீடும் | பக்கம் - 10 |
| எதிர்காலத்தையே மிதிப்பதை அறியாது மிதிக்கும் காலடிகள் | பக்கம் - 12 |
| வெடிப்பொருட்களுடன் வேண்டாம் விளையாட்டு | பக்கம் - 14 |
| திலீபன் வளர்த்த தியாக வேள்வி | பக்கம் - 16 |
| சிங்களத்தால் ஏமாற்றப்பட்ட உலக சமூகம் | பக்கம் - 22 |
| இலங்கைத் தமிழர் வரலாறு மிக நீண்டது ஆரியர் வருகை என்பது அர்த்தமற்றது! | பக்கம் - 26 |
| எல்லோரும் கைகொடுத்தா களநிலவரம் சாதகந்தான் | பக்கம் - 28 |
| சிப்பாய்களும் மன்னர்களே | பக்கம் - 30 |
| ஒரு முடிவுக்கான தவிப்பு | பக்கம் - 32 |
| புதிய தளபதியின் கனவு | பக்கம் - 34 |
| சுயரூபம் | பக்கம் - 34 |
| தென் சூடானிய மக்களின் விடியலுக்கான போராட்டம் | பக்கம் - 36 |
| இறுதி அத்தியாயங்களை நோக்கி | பக்கம் - 38 |
| இராணுவச் சிப்பாய்கள் தப்பியோடுவதேன் | பக்கம் - 44 |

**அணையாத தீபங்கள்**

| | |
|---|---|
| லெப்.கேணல் அருணன் | பக்கம் - 45 |

**சிறுகதை**

| | |
|---|---|
| ராக்குருவி –காண்டீபன் | பக்கம் - 40 |

**கவிதை**

| | |
|---|---|
| வாழும் நாடுகளில் நின்று வல்லமை தருவீர்- வியாசன் | பக்கம் - 08 |
| கல்லறைக்குள் கதிரவன்- கப்டன் கஸ்தூரி | பக்கம் - 17 |
| பாசறை அழைக்கிறது- மிருசுவிலூரான் | பக்கம் - 23 |
| உனது பெண் குழந்தையின் வரவுக்காக -ஆகாசா | பக்கம் - 43 |

**தொகுப்பு**

| | |
|---|---|
| தமிழர் வரலாற்றில் புரட்டாதியில் நடந்தேறியவை | பக்கம் - 07 |
| நீங்காத நினைவுகள் | பக்கம் - 39 |
| நிலவரம் | பக்கம் - 46 |
| மீள்பார்வை ஒகஸ்ட் | பக்கம் - 47 |
| கண்கள் கூறும் வார்த்தைகள் | பக்கம் - 48 |

**18** "அதிர்ச்சி நோய் எமக்கல்ல"




**20** அரசின் நடவடிக்கையில் தலையீடு செய்யும் பௌத்த பீடங்கள்



**24** தேர்தல்க் காலக் கூக்குரலாக "சமாதானம்"





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்று இரத்தம் வழிந்தோடும் எமது மண் நாளை ஒரு சுதந்திர பூமியாக மாறும்

வரலாற்று ரீதியாக ஈழத்தமிழினம் ஒரு அப்பட்டமான இன அழிப்பை எதிர்நோக்கி நிற்கின்றது. தமிழரின் தேசிய அடையாளத்தைச் சிதைத்துவிடும் நோக்கில் மிகவும் நுட்பமாகத் திட்டமிடப்பட்டு இந்த இன அழிப்பு நிகழ்கின்றது. இதன் உண்மையான முகம் பிரச்சாரப் பொய்களால் மூடிமறைக்கப்பட்டிருக்கின்றது. இதனை சர்வதேச சமூகம் இன்னும் புரிந்து கொள்ளாதது எமக்கு வேதனையையும், கவலையையும் தருகின்றது.

தமிழின அழிப்பை அடிப்படையாகக் கொண்ட சிங்கள இனவாதத்தின் அடக்குமுறைக்கு எதிராகவே தமிழீழ மக்கள் அன்று தொட்டு இன்று வரை போராட்டங்கள் நடத்தி வருகின்றார்கள். எமக்கு முந்திய பரம்பரையினர் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக காந்தியடிகளின் அகிம்சைத் தத்துவத்தின் அடிப்படையில் அறவழிப் போராட்டங்களை நிகழ்த்தினர். அறவழிப் போரின் ஆன்மீகப் பண்பியல்பை சிங்கள அரசு உணர்ந்து கொள்ளவில்லை.

அதற்கு மதிப்பும் அளிக்கவில்லை அகிம்சைப் போராட்டங்களை ஆயுத வன்முறையால் மிருகத்தனமாக நசுக்கியது. அறவழியில், சனநாயக வழியில் தொடங்கப்பட்ட போராட்டங்கள் ஆயுத வன்முறையால் நசுக்கப்பட்ட நிலையில், இன அழிப்பு மேலும் தீவிரமடைந்து தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை என்ற இக்கட்டான வரலாற்றுக் காலகட்டத்தில்தான் விடுதலைப் புலிகள் இயக்கமும் தமிழரின் ஆயுதப் போராட்டமும் தோற்றம் கொண்டது.

தன்னாட்சி உரிமைகோரி தமிழீழத்தில் தோற்றம் கொண்ட ஆயுதப் போராட்ட வடிவத்தைப் பயங்கரவாதம் என்றும் பிரிவினைவாதம் என்றும் சித்தரித்துவிட சிங்கள அரசு பகீரத முயற்சி செய்கிறது. இத்தகைய தவறான கருத்து இந்திய மக்கள் மத்தியிலும் உலக அரங்கிலும் பரப்பப்பட்டு வருகிறது. இந்தச் சித்தரிப்பில் எவ்வித உண்மையும் இல்லை. ஈழத்தமிழரின் போராட்ட வடிவத்தை திரிபுபடுத்தி கொச்சைப்படுத்தும் நோக்கில் இவ்விதம் பொய்ப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

நாம் பயங்கரவாதிகளும் அல்லர், பிரிவினைவாதிகளும் அல்லர், ஆயுதக் கலாச்சாரத்தை வழிப்படுத்தும் வன்முறையாளரும் அல்லர். நாம் ஒரு இலட்சியத்திற்காக, ஒரு உயரிய குறிக்கோளுக்காகப் போராடுகின்றோம். இன அழிவிலிருந்து எமது இனத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே நாம் போராடுகின்றோம்.

இனக்கொலை வடிவம் எடுத்துள்ள ஆயுத வன்முறைக்கெதிராகவே நாம் ஆயுதமேந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். உயிர் வாழும் உரிமைக்காக உயிரைக் கொடுத்துப் போராட வேண்டிய ஒரு சிக்கலான, நெருக்கடியான ஒரு வரலாற்றுச் சூழலை நாம் எதிர்கொண்டு நிற்கின்றோம்.

இலங்கைத்தீவில் சுதந்திரம் பெற்றதிலிருந்து மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களப் பௌத்த பேரினவாத அரசுகள் தமிழரை அரவணைத்து வாழ விரும்பாது அடிமைகொண்டு ஆளவிரும்பியதால் தமிழ் மக்கள் தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ள விரும்பினர். ஒரு தேசியக் கட்டமைப்பைக் கொண்ட இனம் என்ற ரீதியில் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். அதுவும் அரச ஒடுக்குமுறையானது இனஅழிப்பு வடிவமெடுத்த சூழ்நிலையில்தான் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்காகப் போராடத்துணிந்தார்கள்.



நாம் விடுதலையில் பற்றுக்கொண்டு ஒன்றுபட்டு உறுதி கொண்டு நிற்கின்றோம். இன்றைய பின்னடைவுகளை நாளைய வெற்றிகளாக மாற்றிவிடத் திடசங்கற்பம்பூண்டு நிற்கின்றோம். இன்று இரத்தம் வழிந்தோடும் எமது மண் நாளை ஒரு சுதந்திர பூமியாக மாறும் நம்பிக்கை எமக்கு உண்டு.


**-தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன் அவர்கள்**

(28.12.1995 அன்று வெளியிட்ட அறிக்கையில் இருந்து)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பத்தொன்பதாம் ஆண்டு

செப்டெம்பர்

*2000*

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 01 - 43 58 11 42

Fax: 01 - 43 58 11 91

e.mail: erimalai@freesurf.fr

# தலைவாசல்

## மீண்டும் ஒரு தேர்தல்

சிங்கள நாடானது தான் ஒரு சனநாயக நாடு என்ற கவர்ச்சிகரமான பெயர்ப்பலகையை உலக அரங்கின் முன் மாட்டிவைத்துள்ளது. அதனை நிரூபிப்பதற்கான மற்றுமொரு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இரு சிங்களப் பேரினவாதக் கட்சிகளும், புதிதாக உருவாகிவரும் சிஹல உறுமய, ஜே.வி.பி போன்றனவும் தமக்கேயுரிய இனவெறி - மதவெறி கோட்பாடுகளுடன் தேர்தல்களுக்கு வாக்குகளை கேட்கின்றன. மறுபுறம், கொழும்பு தமிழ்க் குழுக்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தம்மைத் தாமே நியமித்துக் கொள்வதற்கென முண்டியடிக்கின்றன. தமிழ் மக்களின் துன்பங்கள் நிறைந்த வாழ்வும், சாவும் இந்த கோலாகலமான தேர்தல் ஓலங்களுக்கு மத்தியில் மறைக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

ஆனால், யாழ் குடாவில் நிலைகொண்டுள்ள ஓயாத அலைகள் படையணியும், அப் படையணியின் வீச்சால் அச்சம் கொண்டுள்ள சிங்களப் படைகளும் இலங்கைத்தீவின் இரு தேசியங்களுக்கும் இடையேயான போரைப் பிரதான விடயமாகப் பாதுகாக்கின்றன. சிங்கள நாட்டின் அரசியல் - பொருளாதார - பண்பாட்டு வாழ்வை பிடித்து உலுக்கும் பலத்துடன் தமிழர்களின் சுதந்திரப் போர் விரிவடைந்து வருகையில் சிங்களத்தின் சனநாயகம் வெறுமனே ரணில் மீதான சந்திரிகாவின் கிசுகிசு விவகாரமாகச் சிறுமைப்பட்டுவிட்டது. தினசரி வன்முறைகள், கொலைகள் என்பன சந்திரிகா - ரணில் தேர்வின் குறியீடாக மாறிவிட்டது. வலதுசாரி சிஹல உறுமயவும், இடதுசாரி ஜே.வி.பியும் இந்த தேர்தல் நாடகத்தில் ஒரேபக்கத்தில் நிற்கின்றன.

சிங்களத்தை சனநாயக நாடு என தமது வருடாந்த அறிக்கைகளில் குறிப்பிடும் அமெரிக்கா போன்ற நாடுகள் தமது நாட்டுப் பிரசைகளை சிங்கள நாட்டிற்குச் செல்ல வேண்டாம் என்ற வெறும் அறிவிப்புடன் தமது கருத்துக்களை மட்டுப்படுத்திவிட்டனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, சிங்களத்தின் தேர்தல்கள் வெறுமனே அன்னியமான விடயமாகும். சிங்களப் பேரினவாதத்தின் பெரும் ஏமாற்றுவித்தையும்கூட. அது எந்தவித சாதக மாற்றங்களையும் தமிழர்களுக்குக் கொடுத்துவிடப் போவதில்லை. தமது இராணுவத்தைப் பலப்படுத்த போர்நிறுத்தங்களைச் சிங்களம் செய்வது போன்று தமது அனைத்துலகத் தோற்றத்தைச் சீர்செய்ய தேர்தல்களைச் சிங்களம் பயன்படுத்துகின்றது.

மறுபுறம் சிங்களத்தின் தேர்தல் முயற்சிகள் தமிழர் தாயகம் மீதான சிங்களத்தின் ஆதிக்கத்தை நிரூபிக்கும் விடயமாக அமைகின்றது. உலக உடன்பாடுகளுக்கு விளக்கம் கொடுத்து தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு இராஜதந்திர ரீதியிலான மழுங்கடிப்புக்களை மேற்கொள்ளச் சிங்களம் தேர்தல்களை பயன்படுத்து கின்றது. அண்மைய அதிர்ச்சியூட்டும் ஆய்வுகளின் பிரகாரம் திருமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிற்கு சிங்களப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அதிகரித்து, சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் நிலங்களைத் துண்டாடும் திட்டத்தை முழுவெற்றிக்கு இட்டுச்செல்ல சந்திரிகா சூழ்ச்சி செய்கின்றமை வெளிவந்துள்ளது.

இதனால் இன்று போரை வெல்வதே தமிழர்களின் வாழ்வுக்கான ஒரே தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ளது. சிஹல உறுமய முதல் சந்திரிகாவரை அதனைத்தான் தேர்தல் பிரகடனமாக முன்வைத்துள்ளனர்.

இந்தச் சவாலை வெல்வதற்கான தமிழர் ஆதாரமாக ஓயாத அலைகள் படையணி திகழ்கின்றது. யாழ் குடாநாட்டைவிட்டுச் சிங்களப் படைகளை விரட்டிடும் புனிதப் பணிக்காக அளப்பரிய ஈகங்களைச் செய்து தயாராகும் தமிழர் படை, போரின் மூலம் தமிழர்களை அடக்கிவிடலாம் என்ற சிங்களத்தின் பகிரங்கத் தேர்தல் பிரகடனங்களுக்கு நேரடிச் சவால்விட்டுள்ளது.

தமிழர்கள் தமது தலைமையைத் தேர்வு செய்வதற்கான உரிமையைக்கூடப் பறித்து இராணுவ உதவியுடன் எமக்கு தலைமை வழங்க முற்படும் சிங்கள சனநாயகத்தின் கொடுரத்தை உலகம் பகிரங்கமாகக் கண்டிக்கும் என்ற எதிர்பார்ப்புடன் ஓயாத அலைகள் வெல்ல உழைப்பதே புகலிடத் தமிழர்களுக்குத் தரப்பட்ட தீர்வாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பாரிய அளவில தொடங்கி இயலாது முடி

## ஜெயராஜ்

**"மோதல் மூலம் சாதித்ததைவிட இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புகள் அதிகமானவை"**

**-இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணரட்ன-**

* * *

**"ரிவிகிரண" எனப்பெயரிட்டுப் பெரும் எடுப்பில் தொடங்கப்பட்ட இப்படை நடவடிக்கையின் பெயரைக் கூட வெளியிடாது, மட்டுப்படுத்தப் பட்ட நடவடிக்கை எனக்கூறி இராணுவம் நடவடிக்கையை முடித்துக் கொண்டுவிட்டது.**

**-இராணுவ ஆய்வாளர் தராகி-**

* * *

யாழ் குடாநாட்டில் கடந்த 03.09.00 ஞாயிற்றுக்கிழமை அன்று சிறீலங்கா இராணுவம் தொடங்கிய பாரிய அளவிலான படை நடவடிக்கை அதற்குப் பெரும் "செலவீடானதாக" அமைந்ததினால் நடவடிக்கை ஒரு நாளுடன் நிறுத்தப்பட்டுவிட்டது. இராணுவ அவதானிகளின் பொதுவான அபிப்பிராயப்படி 200க்கும் மேற்பட்ட துருப்புக்கள் கொல்லப்பட்டும், சுமார் ஆயிரம் வரையிலான துருப்புக்கள் காயமுற்றதுமே இப்படை நடவடிக்கை நிறுத்தத்திற்குக் காரணமாகும். அன்றைய மோதலை பெரும் செலவீடான யுத்தம் எனக் கூறுவதற்கு இராணுவத்திற்கு ஆளணி ரீதியிலும், ஆயுததளபாட ரீதியில் ஏற்பட்ட பொருள் விரயமும் அடிப்படையான தாகும். அதாவது, இராணுவத் தரப்புத் தகவலின்படியே வரவைவிட செலவு அதிகம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. அதிலும் குறிப்பாக இராணுவ ஆளணிக்கு ஏற்பட்ட இழப்பீடானது சிறீலங்கா இராணுவத்தின் அண்மைக்கால நம்பிக்கைகளை சிதறடிப்பவையாகவும் அமைந்தன.

சிறீலங்கா இராணுவத்தரப்பிற்கும் அரச தரப்பிற்கும் இவ் இழப்பீடானது நிச்சயமாக பெரும் ஏமாற்றம் அளிப்பதாகவே இருந்திருக்கும். ஏனெனில், பாரிய நவடிக்கைக்கு சிறீலங்கா ஆட்சியாளர்களும், இராணுவத் தலைமைப்பீடமும் மிகப் பெரும் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அதாவது, அரசியல் இராணுவ ரீதியிலான கூட்டு நோக்கங்கள் இருந்தன.

பொ.ஐ.முன்னணியின் தலைமையைப் பொறுத்து இவ் இராணுவ நடவடிக்கையானது தனது அரசியல் எதிர்காலத்தை நிலை நிறுத்துவதற்கு அவசியமானதாக இருந்தது. அதாவது, 11வது பாராளுமன்றத்திற்கான தேர்தல் களத்தில் இந்நடவடிக்கை மூலம் கிடைக்கப்பெறும் வெற்றியானது வாக்கு வங்கியினை தக்கவைத்துக் கொள்வதற்கு உதவும் என அது கருதியது.

ஏனெனில், வன்னியிலும் அதைத் தொடர்ந்து யாழ் குடாநாட்டில், குறிப்பாக ஆனையிறவிலும் ஏற்பட்ட பாரிய இராணுவப் பின்னடைவின் பின்னர் ஆட்சியாளர் தமது பெரும் வெற்றியெனப் பேசிவந்த யாழ் குடாநாடு மீதான இராணுவ வெற்றியானது கேள்விக் குரியதாகியது. இதன்உச்சமாக தற்பொழுது யாழ் குடாநாட்டில் இராணுவத்தினர் இருப்புக் குறித்துக் கேள்வி எழும் நிலைஉருவாகி உள்ளது.

இந்நிலையில், யாழ் குடாநாட்டில் குறிப்பிடத்தக்கதொரு இராணுவ வெற்றி ஈட்டப்படும் பட்சத்தில் எதிர்கால இராணுவ வெற்றிகள் குறித்த புதிய நம்பிக்கை அமையும். இதன்மூலம் தமது வாக்குவங்கியில் சரிவுஏற்படாது பார்த்துக்கொள்ள முடியும் என்பது ஆளும்கட்சியின் மதிப்பீடாகும். அதிலும் அரசியல்யாப்பு திருத்தத்தைக் கொண்டுவர எத்தனித்த விடயத்தில் ஆளும்கட்சியானது பௌத்த பீடங்களின் பலமான கண்டனத்திற்கு உள்ளாகி இருந்தது. இந்நிலையில், பாரிய நடவடிக்கை ஒன்றின் மூலம் சில இராணுவ வெற்றிகளை ஈட்டுவதன் மூலம் பௌத்தபீடங்களை ஓரளவேனும் திருப்திப்படுத்தலாம் என ஆளும்தரப்பு திட்டமிட்டதில் வியப்பு எதுவுமில்லை.

இவ்வாறான ஆளும்கட்சியின் நிலைப்பாடானது இராணுவத் தலைமைப் பீடத்தைப் பொறுத்தும் விரும்பத்தக்கதொன்றாகவே அன்றைய சூழ்நிலையில் இருந்தது. ஏனெனில் புதிய இராணுவத் தளபதிக்கும் ஒரு பாரிய இராணுவ வெற்றியொன்று ஆட்சியாளர்களுக்குத் தேவையானது போன்று அவசியமானதாகவே இருந்தது.

ஒருபுறம் சிறீலங்கா இராணுவம் கடந்த ஆண்டு இறுதியிலும், இவ்வாண்டின் முற்பகுதியிலும் சந்தித்திருந்த படுதோல்விகள் அதன் தொழில்சார் திறமையினைக் கேள்விக் குள்ளாக்குவதாக இருந்தது. யாழ். குடாநாட்டை 1996இல் இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் சிறீலங்கா இராணுவத்தரப்பும் சரி, அரசியற் தரப்பும் சரி சிறீலங்கா இராணுவத்தின் தொழில் சார் திறமையினை சர்வதேச தரத்துடன் ஒப்பிட்டுப் பேசியது மட்டுமல்ல, அவற்றின் முன்னணியிலுள்ள நாடுகள் சிலவற்றுள் சிறீலங்கா இராணுவமும் ஒன்று எனக் குறிப்பிட்டு பெருமை பேசிக்கொண்டனர்.

ஆனால் வன்னி, ஆனையிறவுத் தோல்விகள் சிறீலங்கா இராணுவத்தின் போரிடும் ஆற்றலைக் கேள்விக்குள்ளாக்கியிருந்தன. இந்நிலையில் இராணுவத்தினர் தொழில் சார்தகைமையை உயர்த்துவது இராணுவத் தலைமைக்கு அவசியமானதொன்றாகியது.

அடுத்ததாக புதிதாக தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பல்லேகல தனது தகுதியை நிரூபிப்பதற்கெனவும் ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு இருந்தது. இதற்கு சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் நடவடிக்கைகளும், அரசியற் சூழ் நிலைகளும் உந்து சக்தியாகவும், ஊக்கம் அளிப்பதாகவே தென்பட்டன.

ஆனையிறவுப் பெரும் தோல்வியின் பின்னர் சிறீலங்கா ஆயுதப் படைக்கெனப் பெரும்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ...ன தயாரிப்புடன் ...யர் சொல்ல ...த 'ரிவிகிரண'



தொகை அளவில் நவீன ஆயுததளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது சிறீலங்கா ஆயுதப்படையினரின் சுடுதிறனை அதிகரிப்ப வையாக இருந்தன என்பது மட்டுமல்ல, வீழ்ச்சி கண்டுள்ள இராணுவத்தின் மனோபலத்தையும் அதிகரித்து போரிடும் ஆற்றலை அதிகரிக்கும் என்றே நம்பப்பட்டது. இதனை புதிய இராணு வத் தளபதியும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

"கடந்த காலத்தில் இராணுவத்தினரின் மனோபலம் வீழ்ச்சியடைந்துவிட்டதாகக் கூறப் பட்டது. நவீனரக ஆயுததளபாடங்களைக் கண்ட தும் நிலைமை முற்றிலும் மாறுபட்டுள்ளது. நவீனரக ஆயுதங்களைக் கண்ட எமது வீரர்கள் மனோதிடம் அதிகரித்துள்ளது" எனத் தனது பதவி ஏற்பு வைபவத்தில் பேசிய புதிய தளபதி லெப். ஜெனரல் லயனல் பல்லேகல குறிப்பிட்டார்.

அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டவற் றில் விமானப் படைக்கான மிக்-27 ரகத் தாக்கு தல் விமானங்களும் மற்றும் இராணுவத்திற் கான பல்குழல் எறிகணைச் செலுத்திகள் என் பன குறித்து பரபரப்பாகப் பேசப்பட்டன. சில செக்கன்களில் தொடர்ச்சியாக 40 ரொக்கட்டு களைச் செலுத்தக்கூடிய பல்குழல் எறிகணைச் செலுத்திகள் ஒருபகுதியிலும் நிலைகொண் டுள்ளன. விடுதலைப் புலிகளை அல்லது முன் னேறும் முயற்சியில் உள்ள புலிகளின் படை யணிகளைத் துடைத்தழித்துவிடும் எனக் கருதப்பட்டது. இதே போன்றே கடலிலும் தரையிலும் முறையே விடுதலைப் புலிகளின் தளங்களையும் நகரும் இலக்குகளையும் துல்லி யமாகத் தாக்கி அழிக்கும் சக்திமிக்கவை எனவும் நம்பப்பட்டன. இவற்றால் சிறீலங்கா இராணுவம் இறுதியான பலம் பெற்றுள்ளது எனவும் கூறப்பட்டது.




இவ் ஆயுததளபாடங்கள் சிறீலங்கா அர சின் சக்திக்கு மீறிய கொள்வனவு என ஒரு புறம் விமர்சனம் இருக்கையில் மறுபுறம் இது தேவைக்கு மீறியதெனவும் ஒருவகை அபிப் பிராயம் உருவாகியிருந்தது. எடுத்துக்காட்டாக மிக்-27 ரக தாக்குதல் விமானம் அணுவாயு தத்தை எடுத்துச் செல்லும் வல்லமை கொண் டுள்ளது என்பதோடு நீர்மூழ்கிக் கப்பல்களைக் கூடத் தாக்கும் ஆற்றலையும் கொண்டதாகும். அதாவது இலங்கைக் களமுனைக்கு தேவைக்கு மீறிய ஏற்பாடுகளுடன் கூடியதாகும். ஆயினும் சிறீலங்கா அரசு மிக்-27 ரக தாக்குதல் விமா னங்கள் போன்ற ஆயுததளபாடங்களை கொள் வனவு செய்துள்ளமை இராணுவத்தினருக்கு உயரிய மனோநிலை அளிப்பதற்காகவுமே ஆகும். இதேசமயம் புதிய தாக்குதல் நடவடிக் கைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தாகவோ அன்றி சிறிய அளவிலானதாகவோ இருப்பின் அதனால் பயன் ஏதும் ஏற்படுவதற் கான வாய்ப்பு இல்லை எனவும் கருதப்பட்டது.

ஏனெனில் கடந்த ஓரிரு ஆண்டுகளில் யுத் தத்தின் பரிமாணம் பெரும் மாற்றம் கண்டிருந் தது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் நில மீட்புப் போர் என்ற தெளிவான கட்டத்தை எட்டியிருந்தது. புலிகளின் ஓயாத அலைகள்-03 நடவடிக்கை பெரும் நிலப்பரப்புக்களை மீட்டெடுத்ததோடு பெரும் படைத்தளங்களைத் தகர்த்தெறிந்ததாகவும் இருந்தது. இந்நிலை யில் இராணுவம் மேற்கொள்ளும் புதிய நட வடிக்கையானது புலிகளின் நடவடிக்கைகளுக்கு மாற்றான அளவில் ஆக்கிரமிப்பு யுத்தமாகவும், அழிப்பு நடவடிக்கையாகவும் இருத்தல் என் பது ஒருவகை நிர்ப்பந்தமாகவுமே இராணுவத் தரப்பிற்கு இருந்தது எனலாம்.

இந்நிலையில் புதிய நடவடிக்கை பாரிய அளவினதாகவே நன்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்நடவடிக்கைக்குச் சூட்டப்பட்ட 'ரிவிகிரண' என்ற பெயரானது ஏற்கனவே யாழ் குடாநாட்டு ஆக்கிரமிப்பிற்குச் சூட்டப்பட்ட 'ரிவிரச' என்ற பெயரினை ஒத்த கருத்துடையதாகவே (சூரியக் கதிர்) இருந்ததில் இருந்தே அதை ஒத்த நடவடிக்கையாகவும், அதனை ஒத்த நோக்கம் - யாழ் குடாநாட்டை கைப்பற்றுதல் கொண்டதாகவும் இருந்ததைப் புரிந்து கொள்ளமுடியும்.

ஆனால், இந்நடவடிக்கையானது எதிர் பார்த்த வெற்றியைக் கொடுக்காதது மட்டு மல்ல, சிறீலங்கா இராணுவத்திற்குப் பெரும் ஆளணி இழப்பையும் ஏற்படுத்தியது. ஆகை யினால் இந்நடவடிக்கையானது சிறீலங்கா இராணுவம் எதிர்பார்த்த விளைவுகளுக்கு மாறான தாக்கத்தையே கொடுப்பதாக இருந் தது. இல்லாதுவிடில், இந்நடவடிக்கையில் ஏற்பட்ட இழப்பினை விருப்பிற்கு மாறாக வெளிப்படுத்த வேண்டிய நிலை இராணுவத் தரப்பிற்கு ஏற்பட்டிருக்கமாட்டாது.

அதாவது நவீன ஆயுததளபாடங்கள் இராணுவத்தினரின் மனோநிலையை மேம் படுத்தும் என எதிர்பார்த்ததிற்கு மாறாக விடுத லைப் புலிகள் எத்தகைய தாக்குதல்களையும் எதிர்கொண்டு தடுத்து நிறுத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளதோடு பெரும் சேதத்தையும் விளை விக்கும் சக்தி கொண்டுள்ளனர் என்ற அபிப் பிராயத்தை இராணுவத்தினர் மத்தியில் உரு வாக்குவதாகவே இருந்துள்ளது. இது இரா ணுவத்தரப்பிற்கு உளச்சோர்வை அதிகரிப் பதாகவே நிச்சயம் இருந்திருக்கும்.

இந்த ரீதியில் கடந்த 03.09.00 ஞாயிறு யாழ் குடாநாட்டில் இராணுவம் மேற்கொண்ட பாரிய படை நடவடிக்கை தோல்வியில் முடிவுற் றமையானது சில இராணுவ யதார்த்தங்களை வெளிப்படுத்தியுள்ளது என்றே கூறலாம்.

1. நவீன ஆயுத தளபாடங்களினால் புலி களுக்கு எதிரான யுத்தத்தை வென்றுவிட முடியாது.

2. சிறீலங்கா இராணுவத்தின் மனோ பலத்தை நவீன ஆயுத தளபாடங்களினால் பாதுகாத்து விடமுடியாது.

இவ்விரண்டு அம்சங்களும் ஆளும் சந்தி ரிகா குமாரதுங்காவின் எதிர்பார்க்கைக்கும் புதிய இராணுவத் தலைமையின் எதிர்பார்க் கைக்கும் மாறானவையே ஆகும். அத்தோடு, இவை தற்போதைய நோக்கங்களை மட்டும் சிதறடிப்பவையாக இருக்கவில்லை. சிறீ லங்காவின் எதிர்கால இராணுவ நோக்கங் களையும், திட்டங்களையும் சிதறடிப்பவையா கவும் உள்ளன.


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோதல் பலிக்கடாக்கள்

# சிங்கள தேசமும் குடாநாட்டுப் போரும்

-சுப்பு-

பொதுசன ஐக்கிய முன்னணி, தன் தேர்தல் பரப்புரைகளை ஆரம்பிப்பதற்கு முன்னராகவே யாழ் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது. செப்டெம்பர் மாதம், நான்காம் திகதி பொதுசன ஐக்கிய முன்னணி தன் தேர்தல் பரப்புரைகளை ஆரம்பிப்பதற்கு முன்னராக, முதல் நாளே தனது இராணுவ நடவடிக்கையை குடாநாட்டில் ஆரம்பித்தது. முதலாம் இரண்டாம் திகதிகளில் மிகமோசமான குண்டுவீச்சுக்களையும் எறிகணை வீச்சுக்களையும் நடத்தி விடுதலைப் புலிகளின் எதிர்ப்பைத் தணித்துவிட்டு விடுதலைப் புலிகளின் எதிர்ச்சமராடும் சக்தியை அழித்து விட்டு அல்லது விடுதலைப் புலிகளைக் களைப்படையச் செய்துவிட்டு, தமது புதிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளச் சிங்களப்படையினர் திட்டமிட்டு செயலில் இறங்கினர்.

சிங்கள வான்படையின் புதிய வரவான சக்திமிக்க மிக்-27 போர் விமானங்களின் மிடுக்கும், நாற்பது எறிகணைகளை இருபது செக்கன்களுக்குள் ஏவி, ஒரு பெரும் பகுதியையே துவம்சம் செய்யவல்ல பல்குழல் எறிகணைச் செலுத்திகளின் கவர்ச்சிகரமான தோற்றமும் சிங்களத்திற்கு புதிய நம்பிக்கையை கொடுத்திருக்கும் என்பது இயல்பானது. அவற்றின் பயன்பாடுகள் குறித்து, சிங்களம் அதீத கற்பனைகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் என்பதும் இயல்பானதே.

தேர்தலை இலக்குவைத்து அதன் கால அட்டவணைக்கேற்ப வரையப்பட்ட இராணுவ நடவடிக்கை, செப்டெம்பர் மூன்றாம் திகதி உரிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. றிவிகிரண-1 என்ற குறியீட்டுப்பெயருடன் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டு யாழ் குடாநாட்டை சிங்களப்படை ஆக்கிரமித்துக் கொண்ட படை நடவடிக்கைகளுக்குச் சூட்டப்பட்ட றிவிரச என்ற பெயரோடு, நெருக்கமாகப் பொருள்படும் வகையில், அதையொத்த பெயர்சூட்டல் ஒன்றைச் சூட்டி சிங்களப்படையினர், அன்றைய நினைவுகளோடு, இந்த நடவடிக்கையை கற்பனையோடு ஆரம்பித்தனர்.

சிறீலங்காவின் புதிய இராணுவத்தளபதியாக லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர், யாழ் குடாநாட்டில் இருந்து, யாழ் குடாநாட்டுக்கான இராணுவ நடவடிக்கைகளை திட்டமிட்டு நடத்தும் பொறுப்பை வகித்திருந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மற்றும் யாழ் குடாநாட்டுத் தளபதியாக இருந்த பிரிகேடியர் சரத் பொன்சேகாவும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்கள் என்று கூறி கொழும்புக்குக்கு அவசரஅவசரமாக அழைக்கப்பட்டு, யாழ் குடாநாட்டின் புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா நியமிக்கப்பட்டதன் பின்பு நடத்தப்பட்ட பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கை என்பதில் றிவிகிரண-1 முக்கியத்துவம் பெறுகின்றது. அத்துடன், புதிய தளபதிகளோடு புதிய போர்க்கலங்களின் பலம் குறித்த நம்பிக்கையோடும் இப்புதிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

முதல்நாள் சண்டையில் நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு, ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். தமது மிக்-27 போர்விமானங்களின் கடுமையான குண்டுவீச்சுக்களாலும், பல்குழல் ஏவுகணைச் செலுத்திகளின் தொடர்ச்சியான தாக்குதல்களும் விடுதலைப் புலிகள் மத்தியில் பேரழிவை ஏற்படுத்தியிருக்கும் எனவும், முன்னணிக் காவல் நிலைகளை இழந்து அவர்கள் பின்வாங்கியிருப்பர் என்றெல்லாம் கருதிக்கொண்டு, நம்பிக்கையுடன் முன்னோக்கி நகர்ந்த சிங்களப்படையினரை, நகரவிட்டு விடுதலைப் புலிகள் தாக்க ஆரம்பித்ததும்தான், நிலைமையின் சிக்கலை சிங்களப்படையினர் உணர்ந்திருப்பர்.




பல்குழல் ஏவுகணைச் செலுத்திகளின் தாக்குதல் எல்லைக்குள் முன்னேறிச்சென்று, சிங்களப்படைக்கு மிக நெருக்கமாக விரைந்து விடுதலைப் புலிகள் நேருக்கு நேர் நின்று சமராடியது சிங்களப்படையினரை கிலிகொள்ளவைத்தது.

றிவிகிரண -1 தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து, சிங்களப்படையினர் ஓய்ந்திருக்க முடியாதபடிக்கு, தேர்தல் களம் இவர்களை நெருக்கியது. எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னராக, இராணுவ வெற்றியொன்றைப் பெற்றாக வேண்டும் என்பது முப்படைகளின் தலைமைத் தளபதியான சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகாவின் உத்தரவு. அந்த இராணுவ வெற்றியை எத்தனை உயிர்விலை கொடுத்தாவது, எத்தனை அழிவுகளைச் செய்தாவது அடையவேண்டும் என்பது கட்டளையாய் இருக்கையில், அதனைச் செய்து முடிக்கவேண்டிய பொறுப்பு படைத் தளபதிகளுக்கு.

மறுநாளும் மறுநாளுமாக சிங்களப் படை முயன்று, இருநூற்றி ஐம்பது படையினரை இழந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரை களமுனையில் இருந்து அகற்ற வேண்டிய துன்ப அனுபவத்துடன், சிங்களப்படை அப்படைநடத்துகையை நிறுத்திக்கொண்டது.

மீண்டும் செப்டெம்பர் பத்தாம் திகதி ஒரு படைநடத்துகையை மேற்கொண்ட சிங்களப்படையினர் பெரும் தோல்வியைச் சந்தித்து, தமது படைநடத்துகையை பரிதாபகரமாக நிறுத்திக்கொண்டனர்.

றிவிகிரண-1 இராணுவ நடவடிக்கை படுமோசமாகத் தோற்றுப்போனதையடுத்து, ஒரு வார இடைவெளியில் றிவிகிரண-2 இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டும் அதிலும் தோற்றுப்போனது சிங்களப்படை.

றிவிகிரண குறியீட்டுப் பெயர், றிவிரச போன்று, மகிழ்ச்சியழிப்பதாய் சிறீலங்காப் படையினருக்கு இருக்கவில்லை. அத்துடன், சந்திரிகாவின் தேர்தல் வெற்றிக்காக திட்டமிடப்பட்ட இராணுவ நடவடிக்கை, மோச



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழீழ வரலாற்றில் புரட்டாதியில் நடந்தேறியவை

### அவ்ரோ விமானம் குண்டு வைத்துத் தகர்ப்பு


ஜே.ஆர் ஜெயவர்த்தனாவால் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகமும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்பதை வெளிக்காட்டு முகமாக இரத்மலானை சர்வதேச விமான நிலையத்தில் சிறீலங்காவிற்கு சொந்தமான அவ்ரோ விமானம் விடுதலைப் புலிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இச்சம்பவம் 07.09.1978இல் இடம்பெற்றது.

### தியாக தீபம்

அந்நிய ஆதிக்கத்தின் கபடத்தனத்தினை உலகிற்கு வெளிக்காட்டுமுகமாக யாழ்மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் உண்ணாவிரதமிருக்கத் தீர்மானித்தார். பாரத அரசிற்கு ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து 15.09.1987 மதியம் 12 மணியிலிருந்து 26.09.1987 மு.ப 10.48 வரைக்குமான 265 மணித்தியாலங்கள் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாது ஈகச் சாவு அடைந்தார்.

### ஒப்பரேசன் மின்னல் முறியடிப்புத் தாக்குதல்

சிறீலங்கா இராணுவத்தின் மணலாற்றைக் கைப்பற்றும் நோக்கிலான ஒப்பரேசன் மின்னல் நடவடிக்கை 29.08.1991 தொடக்கம் 26.09.1991 வரை 28 நாட்கள் இடம்பெற்றது. சிறீலங்கா இராணுவத்தின் பெருமெடுப்பிலான இந்நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீரமாகப் போராடினர். விடுதலைப் புலிகளின் பதிலடிகளை அடுத்து இராணுவம் பழைய நிலைகளுக்கே திரும்பியது. இதன்போது 300 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்தனர்.



### ஒப்பரேசன் யாழ்தேவி முறியடிப்புச் சமர்

29.09.1993 அன்று ஆனையிறவுப் பெருந் தளத்திலிருந்து யாழ் குடாநாட்டிற்கான விநியோக மார்க்கமாக விளங்கிய கிளாலி இறங்கு துறையை கைப்பற்றுவதற்காக கனரக வாகனங்கள் சகிதம் 5000ற்கு மேற்பட்ட சிங்களப் படையினர் முன்னேறினர். புலோப்பளையில் வைத்துப் படையினரை வழிமறித்த விடுதலைப் புலிகள் ஆக்ரோசமான முறியடிப்புத் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது இடம்பெற்ற 4 மணித்தியால முறியடிப்புத் தாக்குதலில் 125 சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர். இப்படை நடவடிக்கையில் சிங்கள இராணுவத்தினரை வழிநடத்திய கட்டளை அதிகாரி கேணல் சரத் பொன்சேகா உட்பட 284 படையினர் படுகாயமடைந்தனர். ரி-55 தாங்கிகள் இரண்டும், பவள்கவச வாகனம் ஒன்றும் முற்றாகச் சிதைக்கப்பட்டன. வேறு இரண்டு கவசவாகனங்கள் சேதமடைந்தன.

### சாகரவர்த்தனா மூழ்கடிப்பு

19.09.1994 அன்று ஏ-602 இலக்க கடலரசன் எனும் அர்த்தப்படும் சிறீலங்காக் கடற்படையின் சாகரவர்த்தனா கட்டளைக் கப்பல், கடற்கரும்புலிகள் மகளிர் படையணிச் சிறப்புத் தளபதி லெப்.கேணல் நளாயினி தலைமையிலான கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. இச்சம்பவம் தமிழீழத்தின் மேற்குக் கடற்பகுதியான கற்பிட்டிக் கடற்பரப்பில் இடம்பெற்றது. இவ்வெற்றிகர கடற் தாக்குதல் சமரின்போது சாகரவர்த்தனா கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் அஜித் போயாகொட மற்றும் உதவிக் கட்டளை அதிகாரியும் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டனர்.

### தமிழீழ மணக்கொடைத் தடைச்சட்டம்

தமிழீழத் தனியரசிற்கான கட்டமைப்புக்களில் ஒன்றான நீதி நிர்வாகத் துறையில் தமிழீழத் தேசியத் தலைவரவர்களால் புதிய மாற்றம் ஒன்று புகுத்தப்பட்டது. எமது சமூகத்தில் புரையோடிப் போன சீதனத்தை இல்லாதொழிப்பதற்காக தமிழீழ மணக்கொடைத் தடைச்சட்டம் 01.09.1995 அன்று அமுல்ப்படுத்தப்பட்டது.

### நாகர்கோவில் பள்ளிச்சிறுவர் படுகொலை

22.09.1995 அன்று நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் மீது சிங்கள வான்படையின் புக்காரா விமானங்கள் வீசிய குண்டுகளால் 21 மாணவர்கள் கணப்பொழுதில் உடல் சிதறிப் பலியாகினர். நாகர்கோவில் பகுதியில் புக்காரா மேற்கொண்ட இந்த நீசத்தனமான தாக்குதலில் எல்லாமாக பள்ளி மாணவர்கள் உட்பட 24 பேர் படுகொலை செய்யப்பட்டனர். 35 பள்ளி மாணவர்கள் உட்பட 57 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

### ஓயாத அலைகள்-02 நடவடிக்கை

8 கிலோமீற்றர் நீளமான இராணுவ வலயங்களைக் கொண்டதான சிறீலங்கா இராணுவத்தின் கிளிநொச்சிப் பெருந்தளம் 27.09.1998 அன்று தமிழீழத் தேசியத் தலைவரின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஓயாத அலைகள்-02 நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. இதன் மூலம் வன்னிப் பெருநிலப்பரப்பில் உயிர்த்துடிப்புள்ள நகர்களில் ஒன்றான கிளிநொச்சி மீட்கப்பட்டது. இவ்வெற்றிகர தாக்குதல் சமரில் 1500ற்கு மேற்பட்ட சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர். இரு தாங்கிகள் உட்பட பெருந்தொகை ஆயுததளபாடங்கள் கைப்பற்றப்பட்ட, இவ் வெற்றிகரச் சமரில் 405 மாவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

---

மான தோல்விகளால் தேர்தல் களத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடுமோ என சிறீலங்காப் பாதுகாப்பு உயர் பீடம் அஞ்சுகிறது.

முன்னைய தோல்விகளையடுத்து, கினிகீர-1 என்ற புதிய குறியீட்டுப் பெயருடன் அடுத்த ஆறாம் நாள் புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை சிங்களப்படையினர் மீண்டும் ஆரம்பித்தனர். தென்மராட்சிப் பகுதியில், பெருமெடுப்பில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட சிங்களப்படையினர், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சில பகுதிகளை மீளக்கைப் பற்றியிருப்பதாக அறிவித்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கை, விரைவில் முற்றுப் பெறப்போவதில்லை எனத் தெரிவிக்கின்றார், யாழ் குடாநாட்டுத் தளபதி அன்ரன் விஜேந்திரா. தேர்தல் முடியும் வரை இராணுவ நடவடிக்கையை நிறுத்திக்கொள்ளும் திட்டமில்லை என்கிறார் அவர். விடுதலைப் புலிகளின் ஆட்லறிப் பீரங்கித் தாக்குதலின் அச்சுறுத்தலில் இருந்து, சிறீலங்காப் படையினருக்கான கடல் வான்மார்க்க விநியோகங்களை தடுக்கமுடியாதவாறு களநிலைமையை மாற்றியிருப்பதாக அவர் பீற்றிக் கொள்ளுகின்றார். பலாலி விமானத்தளத்தினதும், காங்கேசன்துறை துறைமுகத்தினதும் பாதுகாப்பு தற்போது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் பெருமூச்சுவிடுகின்றார்.

யாழ் குடாநாட்டில், சந்திரிகாவின் தேர்தல் வெற்றிக்காக, பலநூற்றுக்கணக்கான சிங்களப்படையினர் உயிரிழப்பைச் சந்தித்தும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அங்கஅவயவங்களை இழந்தும் இருக்க, குடாநாட்டுக்கு வெளியே தொடரும் விடுதலைப் புலிகளின் தாக்குதலாலும், சிங்களப்படையினர் பெரும் இழப்புக்களைச் சந்திக்கவேண்டிய சூழ்நிலை. வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு எனத் தொடரும் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களால், நூற்றுக் கணக்கான சிங்களப்படையினர் செப்டெம்பர் மாதத்தில் மட்டும் கொல்லப்பட்டுள்ளனர்.

தமது இராணுவ நடவடிக்கையை தேர்தலுக்கு முன்னராக நிறுத்திக்கொள்ளும் திட்டம் தம்மிடம் இல்லை என, சிறீலங்காவின் யாழ் குடாநாட்டுக்கான தளபதி விஜேந்திரா வெளியில் தெரிவித்துக்கொள்வது சரிதான், ஆனால் அதற்கு முன்னராக விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கையை ஆரம்பித்துவிடக்கூடாது என்பது சந்திரிகாவினதும் ரத்வத்தையினதும் பிரார்த்தனையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழும் நாடுகள்

வைகறையில் முதுவுறும் வாசல் மரமாய்
சௌந்தர்யம் தழுவி
எம் வாழ்விருந்தது அன்று.
கையணைப்பில் கசிந்தது உறவு.
சொந்தம் முழுமையும் சந்தித்துத் திரும்ப
ஒருபகலும், ஒருசைக்கிளும் போதும்.
அடைக்கோழி மடியாய் ஜீவிதம் அருகிருந்தது.
இழவு வீட்டினில் ஊரேகூடியிருந்து இரங்கும்
உறவுகள் கதறும்.
செத்தது பாவனையற்றிருந்த பழசெனினும்
கத்தியழுது கண்ணீர்விடும் இரத்த நூலிழை.
மச்சாளின் கொலுசுச் சத்தத்தையே
செவிக்குள் பொத்தி
உயிரிழை பின்னுவான் மச்சான்.
மச்சானின் கைபட்ட மண்வெட்டியை
கைதொட்டுக் கண்ணிலொற்றுவாள் மச்சாள்.
ஒன்றுக்குள் ஒன்றான உறவுக்குள்ளே
ஊரெங்கும் ஆனந்தம் பூத்துக் கிடந்தது.
எல்லாமுமின்று மாயக்கண்ணாடிபோல
மறைந்துவிட்டது.
ஒட்டிக்கொள்ளும் பசையற்ற உறவாக
திசைக்கொன்றாய் சிலும்பிப்போனது வாழ்வு.
யாழ்ப்பாணம் வேரிழுத்துக் கொண்டு
வெளியேறி விட்டது.
சில அல்லிவேர்கள் மட்டும் அங்கு ஆடுகின்றன.
வன்னியில் மட்டும் என்னவாம்?
அவலமும், அந்தரிப்புமாக ஆசுவாசமற்ற அகாலம்.
பேருக்கு மட்டும் புரங்களும், குளங்களும்
ஊரெதுவும் ஊராக இல்லை.
மன்னாரென்ன?
மட்டக்களப்பென்ன?
திருமலையென்ன? தீவகமென்ன?
எல்லாமே சாக்குருவிப் பாடலுடன்தான் சயனம்.
சரியான வடிவத்தில் எந்தச் சரீரமுமில்லை.
தலையிருக்குமிடத்தில் காலும்
காலிருக்குமிடத்தில் தலையுமாக
கண்டதுண்டமாகக் கிடக்கிறது தேசத்தின்
நாளாந்தம்.
வயல் வரம்பில் நடந்த வாழ்வும்,
நிலவொளியில் கிடந்த மகிழ்வும்,
எம்மைப் பிரிந்து எத்தனை வருடங்கள்?
உறவுகள் ஒவ்வொன்றாய் வற்றிக் காய்ந்து
கிடக்கின்றது
எங்கள் விழுதெறிந்த கொடியின்வாய்க்கால்
ஆலமரமும், ஐயனார் கோயிலும்
கோல உடையும் கூத்துமாக கிடந்த வாழ்வை
வேரறுத்து வீசியெறிந்து விட்டனர்.
தொன்மக்குடிகளின் தொண்டையிற் சுருக்கிட்டு
லாலாநாட்டு இராசாக்களின் வம்சம்
சந்தோஷிக்கிறது.
இந்த மண்ணின் புழுதிபடிந்த சொந்தமக்களை
வந்த குடியின் வம்சம் வறுத்தெடுக்கிறது.
இரவு வந்தேறி ஊரைவளைத்து,
அதிகாலையானதும் குரல்வளை நெரித்து,
கொண்டேகிய மரநாய்களுக்கு அஞ்சி
குஞ்சுகளைத் தூரமரங்களுக்குத் துரத்தினோம்.
குண்டதிர்வில் குடல் கிழிந்தன போக
எஞ்சினவும் எங்கெங்கோ போயிறங்கின;
தாய்மடியின் சூடின்னும் அகலாச் சந்ததியே!
புலம் பெயர்ந்து போன பிள்ளைகளே!
சமுத்திரங்களைக் கடந்து,
நீண்ட நிலப்பரப்புக்களைக் கடந்து,
தாண்டிப்போய் எங்கெங்கோ
தஞ்சமடைந்துள்ளீர்
ஆணிவேரை நீங்கள் அறுத்தவரல்லர்.
நாங்கள் தான் உம்மை அனுப்பிவைத்தோம்.
நீங்கள் சிறகெடுக்க விருப்பமற்றிருந்தீர்
நாங்கள் தான் தாலி விற்று
தாய்க்காணி ஈடுவைத்து
போவீரென உலுப்பிப் போக வைத்தோம்.
“அன்னைமடிவிட்டு அகலேன்” என
நீங்கள் அடம்பிடித்த போதும்
“சென்னதைக் கேள்மகனே” என்று
துரத்தி வைத்தவர் நாங்கள் தான்.
கையசைத்துப் படலை தாண்டிய போது
கண்ணீர் வடித்தீர்.
“விருப்பமில்லையம்மா போக” என
விம்மினீர்.
அந்தரித்துப் போவோமென



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ...ரில் நின்றவாறு ...ல்லமை தருவீர்

அறிந்தும்
அவர்களாவது வாழட்டுமென்றுதான்
அனுப்பினோம்.
நீங்கள் போன பின்பும் ஊர்கள் எரிந்தன.
உறவுகள் பிரிந்தன.
மண்கொள்ளையாக மரணங்கள் நிகழ்ந்தன.
எமனுடனான யுத்தம் இன்னும் தொடர்கிறது.




- வியாசன் -

எம்மைக் காக்கவும்,
எமக்காகப் போரிடவும் இந்திரஜித்துக்கள்
பிறக்கின்றனர்.
அபிமன்யூக்கள் அவதரிக்கின்றனர்.
கொல்லவருவோரைக் கொல்வோமென
சடாயுவின் சந்ததி சத்தியம் செய்துளது.
அர்ச்சுனன் அவதரித்துள்ளான்.
எதுவரினும் தளரேனென
பீஷ்மன் காலத்தைக் கடந்தும்
காத்திருக்கின்றான்.
சதுரங்கக் காய்களை நகர்த்தியவாறு
மீண்டும் இளமைமிடுக்கோடு பிரம்மஞானி.
சங்கிலி மன்னனது தலைப்பாகை கிடைத்துளது.
பண்டாரவன்னியனின் பட்டுக்குடையும்,
பாதக்குறடும்
கண்டெடுத்து விட்டோம்.
நந்திக் கடலில் குருவிச்சிநாச்சியாரின்
காற்சிலம்பு கிட்டிற்று.
ஆனையடக்கிய அரியாத்தை மீண்டும்
பிறந்துள்ளாள்.
இழந்ததனைத்தும் எமக்காகுமெனும்
நம்பிக்கையில் இன்றெம் நாட்கள்.
புலம் பெயர்ந்து போன பிள்ளைகளே
நலம் பெறுவீர்.
பனிவிழும் தேசமோ? பாலைவனமோ?
எங்குள்ளீரென்றும் எமக்குத்தெரியாது?
கனிதருமரமாய் காய்த்துள்ளீரோ?
காய்ந்து கிடக்கின்றீரோ?
யாதுமறியோம் யாம்.
எனினும்
உமக்கொரு கடனுண்டென மட்டும்
உரைத்தல் நம்கடன்.
இது உம் தாய்மடி.
இங்கு பெறும் வெற்றி உமதே.
தோல்விவரின் அதுவும் உம் தோள்களுக்கே.
எங்கெங்கு சிறகெடுத்துப் பறக்கினும்
திரும்பும்கூடு இங்குள மரத்திலெனத் தெரிக.
தாயின் சுகத்துக்கு ஈடேது?
விடுதலைக்காக வெந்து கொண்டிருக்கின்றோம்.
எதிரி எல்லாவழிகளையும் அடைத்துள்ளான்.
மூச்சுத்திணறுகிறது.
வாழும் நாடுகளில் நின்றவாறு வல்லமைதருவீர்.
வீதிகளிலிறங்கி விடுதலைக்குக் குரலிடுவீர்.
அள்ளித்தருவீர்.
ஆயிரம் கரங்கொண்டெம்மை அணைப்பீர்.
நாளை உமக்கான தேசம்
உருவாகும் நேரம்
கவசகுண்டலங்களாயினும் கழட்டித்தருக.
நாளை உம் நாமமுரைத்தே
எம் தேசக்கொடி ஏறும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறீலங்காவின் புதிய இராணுவத் தளபதியுடன், மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா



லெப் ஜெனரல் லயனல் பல்லேகல



மேஜர் ஜெனரல் நீல் டயஸ்

# இராணுவ பதவி நிலை மாற்றங்களும் அதிகரிக்கும் அரசியற் தலையீடும்!

– ஜெயராஜ் –

மேஜர் ஜெனரல் பல்லேகல, லெப். ஜெனரல் என்னும் தரநிலை உயர்வுடன் கடந்த மாதம் இராணுவத் தளபதியாய் பொறுப் பேற்றுக் கொண்டுள்ளார்.

சிறீலங்காவின் "புகழ்பெற்ற" முன்னாள் இராணுவப் பேச்சாள ரும், யாழ் மாவட்ட இராணுவத் தளபதியுமாக இருந்த மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆளும்கட்சியின் சார் பில் போட்டியிடலாம்.

இவ்விரு விடயங்களும் ஒன்றிற்கு ஒன்று தொடர்பற்றவை. எனினும், இவை இரண்டும் சிறீலங்காவின் இராணுவக் கட்டமைப் பிற்குள் அரசியல் தலையீடு என்பது எத்தனை தூரம் செல்வாக்குச் செலுத்துவதாக மாறியுள்ளது என்பதும் இராணுவத் தரப்பின் அபிலா சைகள் அரசியலுக்குள் பரவுவதை வெளிக்காட்டுவதற்குமான குறிகாட்டியாகும்.

புதிய தளபதி பல்லேகலவின் நியமனமானது எந்தவிதமான கேள்விக்கும் இடமற்ற ரீதியிலானதொரு அரசியல் நியமனமாகும். ஏனெனில் இராணுவக் கட்டமைப்பின் ஒழுங்கிற்கமைய இப் பதவி யானது அவருக்குக் கிடைப்பதற்குரிய வாய்ப்பு ஏற்கனவே அற்றுப் போயிருந்தது. அதாவது மேஜர் ஜெனரல் பல்லேகல கடந்த யூன் 14ஆம் திகதியுடன் தனது சேவைக் காலத்தை நிறைவு செய்து ஓய்வில் செல்ல வேண்டியவராக இருந்தார்.

ஆனால் அவரின் அரசியல் செல்வாக்கு அன்றி அரசியல் தலை மைக்கு அவர் வேண்டியவராக இருந்தமை அவருக்கென புதுப்பதவி ஒன்றை உருவாக்கவும், பதவி நீடிப்பிற்கு அங்கீகாரம் வழங்கவும் காரணமாகியது. இவ்வாறு உருவாக்கப்பட்ட பிரதித் தளபதி என்ற பதவியானது அவரை இராணுவத் தளபதி என்ற நிலைக்குக் கொண்டு வர வழி செய்தது.

அதிலும் ஓய்வுபெற்றுச் செல்லும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிறீலால் வீரசூரியாவின் பதவிக்காலம் முடிவடைய இன்னமும் நான்கு மாதங்கள் இருக்கையில், அவர் பதவிவிலகிச் செல்லவும், புதிய இராணுவத் தளபதி பதவி ஏற்கவும் ஏற்பாடாகியுள்ளமை பல்லேகலவின் வருகையில் அரசியல் தலைமை காட்டிய அவசரத்தினையே வெளிக்காட்டுவதாக உள்ளது.

இவ்வாறு அரசியல் தலைமை அவசரமும், அக்கறையும் காட்டியமைக்கு மேஜர் ஜெனரல் பல்லேகலவின் திறமைக்காக லெப். ஜெனரலாகத் தரமுயர்த் தப்பட வேண்டும் என்பதோ அன்றி அவரின் சேவைக்குக் கைமாறாக இராணு வத் தளபதியாக பதவி வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவோ அல்ல. பல் லேகலவிற்கு இப்பதவி வழங்கப்படாத பட்சத்தில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவிற்கு இப்பதவி வழங்கப்படுதல் வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உரு வாகிவிடும் என்ற காரணத்தினாலேயே ஆகும்.

பொ. ஐ. முன்னணி அரசாங்கத்தின் பார்வையில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவைப் பொறுத்து அவரின் ஏனைய தகைமைகள் எதனையும்விட அவர் ஐ.தே.க. சார்புநிலை உடையவர் என்பதே முக்கியமானதாக இருந்தது. ஆகை யினால் ஜானக பெரேராவிற்கு இராணுவத் தளபதி பதவி சென்றடைவதை ஆளும் கட்சியினர் விரும்பவில்லை.

இதனை அண்மைக்காலச் சம்பவங்கள் சில வெளிப்படுத்தியும் இருந் தன. ஆனையிறவு வீழ்ச்சியின் பின்னான அமைச்சரவைக் கூட்டமொன்றில் யாழ் குடாநாட்டில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா திறம்படச் செயற்படுவதாக அமைச்சர்களில் ஒரு சிலர் அவரைப் பாராட்ட முயன்றபோது ஜனாதிபதி சந் திரிகா குறுக்கீடு செய்து "இராணுவத் தளபதியிடம் உள்ள ஒலி நாடாவை கேட்ட பின்னர் அவரைப் பற்றிப் பேசுங்கள்" எனத் தெரிவித்தார். இவ் ஒலி நாடாவில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஜானக பெரேராவிற்கும் இடையிலான அரசிற்கெதிரான உரையாடல் பதிவுசெய்யப் பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இது ஒருபுறம் இருக்க கடந்த யூலை மாதத்தில் யாழ் மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, தமக்கு மேலதி காரியாக இருந்த அதாவது வடபகுதிக்கான நடவடிக்கைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவிற்குத் தெரிவிக்காமலும், அவர் யாழ் குடாநாட்டில் இல்லாத வேளையிலும் அரியாலைப் பகுதியில் ஓர் நடவடிகையை மேற்கொண்டார். இந் நடவடிக்கையில் இராணுவத்தில் 40க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும், நூற்றிற்கு மேற்பட்டோர் படுகாயங்களுக்கும் உள்ளாகி இருந்தனர். தோல்வியில் முடிவடைந்த இந்நடவடிக்கை குறித்து பின்னர் ஜானக



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரேரா உத்தியோக பூர்வமாக விளக்கம் கோரியபோது சரத் பொன்சேகா அதற்கு விளக்கம் அளிக்கவில்லை.

ஆனால், இது குறித்து இராணுவத் தலைமைப்பீடமோ, முப்படைகளின் தளபதியோ மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மீது நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. மாறாக இருவரையும் இடமாற்றம் செய்தமையே நிகழ்ந்தது. அதாவது இராணுவ விதிகளுக்குத் தெளிவாக மாறுபட்டதெனத் தெரிந்த பின்னரும், அரசியல் காரணங்களின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுப்பது தவிர்க்கப்பட்டது.

மாறாக, இராணுவத் தோல்விகளுக்கு அரசியல் சாயம் பூசப்படுவதும் அண்மைக் காலத்தில் நிகழ்ந்தேறுவதாகவுள்ளது. ஓயாத அலைகள்-03 இன் ஆரம்பத்தில் இராணுவம் வன்னிப் பெரு நிலப்பரப்பில் பெரும் தோல்வி ஒன்றைச் சந்தித்தபோது இதுவே நடந்தேறியது. இராணுவம் சந்தித்த அத்தோல்விக்கு அரசியல் சாயம் பூச முயன்ற ஆட்சியாளர்கள் இத்தோல்விக்கு ஐ.தே. கட்சி சார்புடைய அதிகாரிகளின் நடவடிக்கைகளே காரணம் என்றும், அரசிற்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயல்வோரின் செயற்பாடு என்றுமே அபிப்பிராயத்தை உருவாக்கினர். இதன்பின்னர் இத் தோல்விக்கான இரு மேஜர் ஜெனரல்கள், இரு பிரிகேடியர்கள், ஒரு மேஜர் உட்பட ஏழு உயர் அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யவும்பட்டனர்.

ஆனால் வன்னியில் பெரும் தோல்வி ஒன்றை இராணுவம் சந்தித்தமைக்கு அரசியற் தலைமையின் தவறான வழிநடத்தலே காரணம் என்பது பொதுவான அபிப்பிராயம் ஆகும். அதாவது இராணுவ ரீதியில் "ஜெயசிக்குறு" நடவடிக்கை குறித்து பலமான விமர்சனங்கள் இருந்தபோதும் அரசியல் நோக்கிலேயே ஆட்சியாளர்களின் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் நடவடிக்கை தோல்விகளைச் சந்தித்தபோது அதற்கு இராணுவ அதிகாரிகள் பலியிடப்பட்டனர் என்பதே இராணுவ விமர்சனங்களின் அபிப்பிராயம் ஆகும்.

சிறீலங்கா இராணுவ கட்டளைப் பீடத்தில் பதவி நிலை மாற்றங்களும் பதவி உயர்வுகளும் அரசியல் காரணங்களின் அடிப்படையில் தற்பொழுதுதான் மேற்கொள்ளப்படுகின்றன என்பது இல்லைத்தான். கடந்த ஐ.தே.க. காலத்திலும் அதன் செல்வாக்கு இருக்கவே செய்தது. ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா இராணுவத் தளபதியாகவும் கூட்டுப்படைத் தளபதியாகவும் நீண்டகாலம் பதவி வகித்தமையும், மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ சில அரசியல் காரணிகளுக்காக சில அசௌகரியங்களை அனுபவித்ததாகவும் தகவல்கள் உண்டு.

இருப்பினும் சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது போன்று அரசியல் காரணிகளுக்காகவும், தனிப்பட்ட காரணிகளுக்காவும் இராணுவக் கட்டளைப் பீடத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டமையும், அதிகாரிகள் ஓரம் கட்டப்படுகின்றமையும் நிகழ்ந்ததில்லை என்றே கூறலாம். இதனால் தற்போது சேவையில் உள்ள இராணுவ அதிகாரிகள் மட்டமல்ல, ஐ.தே.க.காலத்தில் சேவையிலிருந்த இராணுவ அதிகாரிகள் கூட அரசியல் காரணிகளினால் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த வகையில் லெப்.ஜெனரல் சிசில் வைத்தியரெட்ண, யாஎல குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர போன்ற பலர் அரசியல் காரணிகளால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். இதே சமயம் மேஜர் ஜெனரல் செனவிரத்ன, மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்கா போன்றவர்கள் தனிப்பட்ட காரணங்களினால் பாதிப்பிற்கு உள்ளாகினர். அதாவது இராணுவ நடவடிக்கை தொடர்பாக அரசியல் வாதிகளின் தலையீட்டை அங்கீகரிக்க மறுத்ததினால் ஓரங்கட்டப்பட்டனர்.

இந்த வகையில் சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பு இன்று அரசியற் தலையீட்டினால் நேரடியாகப் பாதிப்பிற்கு உள்ளாவதாக மாறியுள்ளது. இதன் விளைவானது இராணுவத் தலைமைப் பீடமும் சரி இராணுவமும் சரி சிறீலங்கா அரசிற்கு விசுவாசமாக இருப்பது என்பதற்குப் பதில் ஆட்சியாளர்களுக்கு விசுவாசமாக இருத்தல் என்பதன் அடிப்படையில் செயற்படவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறு அரசியல் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றமையானது படிப்படியாக இராணுவத்திற்கு அரசியலில் ஈடுபாட்டை ஏற்படுத்துவதாகவும் மாறியுள்ளது. இதன் விளைவே மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க போன்றவர்கள் தமது ஓய்வு காலத்தை அரசியலில் கழிக்க முற்பட்டு நிற்பதாகும்.

இதற்கு முன்னர் மேஜர் ஜெனரல் லக்கி அல்கம நேரடியாக அரசியலில் இறங்கிய ஓய்வு பெற்ற இராணுவ உயர் அதிகாரி ஆகும். அவர் அரசியல் ரீதியான இன்றைய ஆளும் கட்சியினரால் பழி வாங்கப்பட்டமையினால் அரசியலில் தீவிரமாக இறங்கியிருத்தல் வேண்டும். அவர் கொல்லப்படாமல் இருந்திருந்தால் ஐ.தே.கட்சியில் முக்கிய பாத்திரம் ஒன்றை வகித்திருப்பார் என்பது பொதுவான மதிப்பீடாகும்.

ஆனால் தற்பொழுது மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க தமக்கு ஆட்சியாளர்கள் வழங்கிய பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு தேர்தலில் போட்டியிட முனைவதானது எதிர்கால அரசியலில் காத்திரமானதொரு பங்கை அவர் வகிக்க முற்படுவதே காரணமாகும். ஆனால் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்காவிற்கு தேர்தலில் போட்டியிட பொ.ஐ. முன்னணி இடம் வழங்குமா அன்றி அவர் எதிர்பார்ப்பது போன்று தேர்தலில் வெற்றிபெறுவாரா? என்பவை எல்லாம் எதிர்காலத்தைப் பொறுத்தே தீர்மானிக்கப்படத் தக்கவையாகும். ஆனால் கடந்த காலத்தை வைத்து ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறிவிடலாம். அரசியல் வாதியாவதற்கான தகுதி சரத் முனசிங்கவிற்கு உண்டு என்பதே அதுவாகும். ஏனெனில் அவர் பெரும் தோல்விகளையும் வெற்றியெனப் பேசும் வல்லமை படைத்தவர்.

இவ்வாறாக இராணுவக் கட்டமைப்பிற்குள் அரசியல் தலையீடு அதிகரித்த அளவில் செயற்படுவதாகிலும் சரி, அன்றி அரசியலில் இராணுவத்தினர் பெரும் ஆர்வம் காட்டுவதாகிலும் சரி ஒரு கட்டத்திற்கு அப்பால் அரசியலில் இராணுவத்தின் தலையீடு தவிர்க்கப்பட முடியாததொன்றாகிவிடும். ஒருபுறம் இராணுவம் அரசியற் கட்சிகள் சார்புடையவையாக பிளவுபடுவதற்கும் மறுபுறம் இராணுவம் தனது செல்வாக்கை உறுதி செய்து கொள்வதற்கும் விளையக்கூடும்.

இதன் வளர்ச்சிப் போக்கில் சிறீலங்காவில் தமது ஆட்சி ஒன்றை நிலைநிறுத்துவதற்கு இராணுவம் விளையினும் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக இருக்கமாட்டாது என்றே கூறலாம். இதற்குச் சாதகமான சூழ்நிலையும் இல்லாமல் இல்லை.



லெப்.ஜெனரல் ஜெரி டி சில்வா

ஒருபுறம் சிறீலங்கா இராணுவம் இன்று "நாட்டின்" பருமன், அதன் குடித்தொகை, பெருளாதாரம் எனச் சகலவற்றிலும் அளவிற்கு மீறியதான தாகவே இருக்கின்றது. ஆகையினால் இதைப் போன்றே இராணுவம் தனது கடமைக்கு அப்பாற்பட்ட விதத்திலும் செயற்பட வாய்ப்புண்டு.

இவற்றைவிட இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் சிங்கள அரசும்சரி, பௌத்த-சிங்களப் பேரினவாத அமைப்புகளும்சரி, இராணுவத்தை முதன்மைப்படுத்துபவையாகவும் தமது கொள்கை கோட்பாடுகளை நிறைவு செய்ய இராணுவத்தில் தங்கியுள்ளவையாகவே உள்ளன. ஆகையினால் இராணுவத்திற்கு இவர்கள் வழங்கி வரும் கண்மூடித்தனமான ஆதரவு மறுவளமாக இராணுவத்திற்கு ஆட்சி அதிகார அபிலாசைகளைத் தோற்றுவிப்பதாகவே அமையக் கூடியவை. அத்தோடு இராணுவத்தைக் கண்மூடித்தனமாக ஆட்சியாளர்கள் பலியிடமுனைவதும், தமது குறிக்கோள்களுக்காக இராணுவத்தைப் பயன்படுத்திவிட்டு தோல்வி ஏற்படும் பட்சத்தில் இராணுவ அதிகாரிகளைப் பலியிடுவதும் இராணுவத்திற்கு ஆட்சியாளர் மீது சீற்றத்தைத் தோற்றுவிப்பதாகக்கூட அமையலாம்.

இவை தம்மில் அரசியல்வாதிகள் குளிர்காய்வதாக இராணுவம் கருதும் பட்சத்தில் தாமே ஆட்சி அதிகாரத்தை மேற்கொண்டால் என்ன? என்ற சிந்தனையை இராணுவத்திற்கு வளர்த்தெடுத்து விடுதலும்கூடும்.

இந்த வகையில் அரசியற் தலையீடுகள் இராணுவக் கட்டமைப்பிற்குள் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் இராணுவக் கட்டமைப்பிற்குள் குழப்பங்களை விளைவிப்பதாக மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் இராணுவம் அரசியலில் முக்கியத்துவம் பெறவும், நேரடித் தலையீடு செய்யவும் சந்தர்ப்பத்தை உருவாக்குவதாகக்கூட அமையலாம். ஆகையினால் இராணுவத்தை தமது பகடைகள் ஆக்கியுள்ள அரசியல் எதிர்காலத்தில் இதற்காக வருந்துவது மட்டுமல்ல பெரும் விலை கொடுக்க வேண்டிவரினும் ஆச்சரியத்திற்குரியதாக அது இருக்கமாட்டாது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# எதிர்காலத்தையே மிதி
# அறியாது மிதிக்கும் கா

கண்ணிவெடி விழிப்புணர்வு வாரத்தையொட்டி அது தொடர்பாக அறிந்துவர புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் வீதியால் MD-90ஐ முடுக்கினோம்.

புளியம்பொக்கணைச் சந்திக்கப்பால் பரந்தன் வீதி தன்னுடைய குண்டுகுழிகளிற்கு மண் பூசிப் "புதுப்பொலிவு" பெற்றிருந்தது. அதற்கப்பால் மக்கள் நடமாட்டம், குடியமர்வு நடைபெறத் தொடங்கி விட்டதன் அடையாளமே. அது மனதுக்கு இதத்தையும் மலர்வையுந் தந்தாலும் அவ்வாறு குடியமர்பவர்களில் சிலரோ, பலரோ அக்கராயன் வைத்தியசாலைக்கு சைரன் அலறும் அம்புலனஸ்களில் அடிக்கடி செல்வதுதான் வேதனை தருவது.

முரசுமோட்டைக் கிராமம் மெல்ல உயிர் பெற்றுக் கொண்டிருக்கிறது. முருகானந்தா வித்தியாலயத்துக்கான கூரை வேலைகள் நடைபெறுகின்றன. வீதியால் சென்ற பெரியவர் ஒருவரைக் கேட்டோம்.

"ஐயா இங்கால மிதிவெடி இதுகளால பிரச்சனையில்லையோ?"

"இது அவன்ர பண்டுக்கு வெளியால இருந்ததால பெரிய பிரச்சனை இல்லை. ஆனா பள்ளிக்கூட வளவை கூட்டி எரிக்கேக்க ஏதோ றவுண்ஸ் கிடந்து வெடிச்சது. இதவிட இங்க இதுவரை ஒண்டும் நடக்கயில்ல" என்றார்.

பூங்காவனம் சந்திக்கும் YMCA க்கும் இடையே வீதியின் இருபுறமும் நீளமாக மஞ்சள் நிறப்பட்டிகள் கட்டப்பட்டிருந்தன. பட்டிகளில் மண்டையோடு பொறித்த அபாயச் சின்னம். அது இராணுவத்தின் முன்னணிக் காவலரண் இருந்த பகுதி. மிதிவெடிகள் வயலாக விதைக்கப்பட்டிருக்கின்றன என்பதன் அடையாளம் அது.

பரந்தன் சந்தியை அண்மிக்கும்போது அரை கிலோ மீற்றருக்கப்பாலே தெரிவது இந்த மஞ்சள் பட்டிதான். சந்திக்கு வந்தால் சுற்றுவட்டத்தில் சிவப்பு நிறத்தில் அபாய அறிவிப்பு! மிதிவெடிகள் கவனம்.

"இதென்ன கரச்சல்? முந்தியெண்டா பரந்தன் வரவேற்கிறது எண்டுதான் இருக்கும். இப்ப இதில் வரவே ஒரு மாதிரிக் கிடக்கல்லோ?"

அங்கிருந்த சர்பத் கடையொன்றினுள் புகுந்தோம். கடை உரிமையாளரான அண்ணன் சொன்னார், "ஒரு பதினாலு வயதுப் பொடியன் பிப்ரி-50 கலிபர் றவுண்சை குறட்டால் பிடிச்சு அடிச்சுப் பாத்தவன் துடைக்குள்ளால போட்டுது. இவடத்துக்குள்ள வேறை ஒண்டும் இப்போதைக்கு நடக்கேல்ல" என்றார். மீனாட்சி என்ற அம்மா "அவனுக்கு பேர் றஜீபன்" என்றார்.

கிளிநொச்சியை நோக்கித் திரும்பினோம். கரடிப்போக்கிற்கு அண்மையில் ஒரு நிலையம் மீட்கப்பட்ட சில வெடிபொருட்களுடன் இருந்தது. அது கண்ணிவெடி மீட்கும் தொண்டர்களின் தொடர்பகம்; அங்கு வந்து தமது காணிகளிற்குச் செல்பவர்கள் அறிவித்தால், தொண்டர்கள் அங்கு சென்று மிதிவெடி, பொறிவெடிகளை அகற்றுவார்கள். இதைவிட தமது காணிகளில் ஏதாவது வெடி பொருட்களை அவதானிப்பர்களும் இவர்களையே அணுகுகிறார்கள்.

தபால் நிலையம் கடந்து சந்தை வீதியால் திரும்பினோம், தேனீர்க் கடையொன்றில் சிலர் நின்றார்கள். மோட்டார் சைக்கிளுக்கு ஒரு மரத்தின் கீழ் ஓய்வு கொடுத்தோம். மிதிவெடிகளால் "பின்னப்படும்" பிரதேசத்தின் மையம் அங்கிருந்தவர்களுடன் பேச்சுக்கொடுத்தோம்.

"ஐயாவின்ர பேர்?"

"ஜெகன்"

"இங்கால இந்த மிதிவெடி நிலமை என்னமாதிரி?"

"பரவலா மிதிவெடியும் புள்சுவிச்சும் இருக்கு. திருநகர் சந்தை புல்லா மைன்ஸ். காணிகளிலயும், கடையளிலயும் அப்படித்தான். இந்தப் பகுதியாலயே 10,20 புள்சுவிச் எடுத்தாச்சு.

ஒரு 15,20 நாளைக்கு முதல் நாகதம்பிரான்வீதியால ஒரு பொடியன் மிதிவெடியில காலக் குடுத்திற்றான். சகோதரங்களை போகச்சொல்லிப்போட்டு கல்லெறிஞ்சிருக்கிறான். வெடிக்கேல்ல, பிறகு காலால அமத்தி தேச்சிருக்கிறான், கால் போட்டுது"

"சின்னராணிஅக்கா தன்ர காணியில காமதேனுவுக்குப் பின்புறமாக பெருக்கிக் கொண்டிருந்தவ. "டக்" கெண்டு சத்தம் கேட்டு வந்து சொன்னா, போய்ப் பாத்தா கிரனைற் ஒண்ட பச்சை நூல்லை கட்டி வைச்சிருக்கிறான். கண்ணிவெடி எடுக்கிற பொடியளிட்டப் போய்ச் சொல்லி அவை வந்து எடுத்தது"

> 1ஆம் திகதி தொடக்கம் நாங்கள் யுனிசெப், வெண்புறா நிறுவனம் ஆகியோரால் பயிற்றப்பட்ட கண்ணிவெடியகற்றும் தொண்டர்கள் கிளிநொச்சி பிரதேசத்தை வந்தடைந்த பிறகு இங்கு எவ்விதமான வெடிப்புகளும் நிகழவில்லை என்றார் திரு. றஜித் அவர்கள்.
>
> இவரும் இவரது சகாவான உதயன் என்பவரும் [17.08.2000] வியாழன் காலை எம்முடன் உரையாடும் முன் திருவையாறு 5/1ஆம் இலக்க காணியில் இரண்டு கிளைமோர்களையும் ஒரு கிரனைற்றையும் அகற்றிவிட்டு வந்திருந்தார்கள். றஜித்தின் மிதிவண்டியின் கரியரில் இரண்டு கிளைமோர்களும் சாதுவாக இருந்தன. "முழங்கினாத்தான் தெரியும்"என்றார் றஜித்.

பரவிப்பாஞ்சான் வீதி தகரத்தால் தடுக்கப்பட்டிருந்தது.

கந்தசாமி கோவில் வளாகம் துப்புரவு செய்யப்பட்டிருந்தது. அதன் கிணற்றில் தான் நூற்றுக்கும் மேற்பட்ட எறிகணைகளை இராணுவம் போட்டிருந்தது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ப்பகைத் வடிகள்!

"வளவை துப்பரவாக்கப் போகேக்க கண்ணிவெடி எடுக்கிற பொடியளிட்டச் சொல்லிக் கூட்டிக்கொண்டு வந்து அவை கிளியர் பண்ணித்தந்த பிறகு மாடுகளைக் கலைச்சு விடுறம்; அதுகளுக்கு ஒண்டும் நடக்காட்டிப் பிறகு நாங்கள் காணிக்கை இறங்கிறம்."

பாருங்கள் எங்கள் சொந்த வளவுக்குள் இறங்க எத்தனை முன்னாயத்தங்கள்?"

ஆனால் அசட்டுத் துணிச்சல் வறட்டுக் கௌரவத்துக்காக இவற்றைக் கடைப்பிடிக் காவிட்டால் காலம் முழுவதும் ஊன்று கோலுடன்தான் சீவிக்க வேண்டியிருக்கும். இல்லாவிடில் கொஞ்சம் பெரிய பொறிவெடி யாக இருந்தால் ஆளே காலியாகவும் நேரலாம்.

இவர்களுடன் கதைத்துக் கொண்டிருக் கையில் இளைஞனொருவர் கடையினுள் பிரவேசித்தார். அவர் ஏற்கனவே திரு. ஜெகன் அவர்களிற்கு அறிமுகமான றஜித் என்ற கண்ணிவெடி அகற்றும் தொண்டர்.

"காணி துப்பரவாக்க வரேக்கை முதல்ல சின்னப் பிள்ளையளக் கொண்டுவர வேண்டா மெண்டு சொல்லியிருக்கிறம். ஏனெண்டால் அதுகள் வடிவாயிருக்கெண்டு, புதுசாயிருக் கெண்டு குண்டுகள், றவுண்சை எடுத்து அடிச்சுக்குத்தி விபரீதத்தை விலைக்கு வாங்கலாமெண்டுதான். அதால நாங்கள் இங்க வந்தவுடனே ஸ்பீக்கர் கட்டி வாகனத் தில திரிஞ்சு அறிவிச்சனாங்கள்" என்றார்.

"என்னமாதிரியா அண்ணை இதுகளை வைச்சிருக்கிறான்?"

"அனேகமா ஒரு 5 இஞ்சி ஷெல்லுக்கு மூண்டு டப்பி மைன்சை "∴" வடிவத்தில இணைச்சிருக்கிறான். ஒண்டில் மிதிச் சாலும் ஷெல் வெடிக்கும் ஆப்பிடுறவர் புக்கைதான்.

அடுத்தது கிரனேற்றின்ர கிளிப்பை கழட்டிப்போட்டு லிவரில நூலைக்கட்டி போறவாற பாதையில் அங்கங்க கட்டிவிட்டி ருப்பான். நூல் தட்டுப்பட்டா கிரனைற் வெடிக்கும். இதைவிடக் கிளைமோரையும் இப்படி வைச்சிருப்பான்.

"அவன்ர பொயின்ற் லைனுக்கு வெளி யில மிதிவெடிய அடர்த்தியா விதைச்சிருப் பான். இந்த கனகபுரம் பக்கத்தில புள்சுவிச் விளையாட்டுத்தான் கனக்க."

இவர்களிடம் விடைபெற்று டிப்போச் சந்தி யால் ஸ்கந்தபுரத்துக்குத் திரும்பினோம். கனகபுரத்தில் இராணுவத்தின் மண் அணை இருந்த பகுதியில் மீண்டும் மஞ்சள் நிறப் பட்டியும் அருகே ஒரு சிறு கொட்டில்; அதில் மிதிவெடிகள் தொடர்பான படங்களும் வைக்கப்பட்டிருந்தன. நிறுத்தி இறங்கிக் கொண்டோம். அங்கே நின்றவர் தன்னை உதயன் என அறிமுகப் படுத்திக் கொண் டார். இவரும் ஒரு கண்ணிவெடி அகற்றும் தொண்டர்.

"எங்கெங்கை அண்ணை இதுகளை வைச்சிருக்கிறான்?"

"பழமரங்கள், தென்னைமரம், வீட்டு வாசல், பாதை, மலசலகூடவாசல் இப்பிடி அடிக்கடி பிழங்கிறஇடம் பார்த்துத்தான் வீட்டு வளவுகளுக்குள்ள வைச்சிருப்பான். கவனிக்காமப் போனால் அவ்வளவுதான்."

அவரிடமிருந்த பதிவுப் புத்தகத்தைப் பார்த்தோம். 14.08இல் கிருஸ்ணன்கோவில் வீதி, ச.செல்வநாதன் வீட்டிலும்.

16.08இல் கனகபுரம் பாடசாலை வீதி யில் பாலச்சந்திரன் வீட்டிலும்

17.08இல் 5/1 திருவையாறில் இராசரத் தினம் வீட்டிலும் மிதிவெடி, பொறிவெடி, கிளைமோர் என்பவற்றை அகற்றியமைக் கான பதிவுகள் இருந்தன.

"நாங்கள் இப்பிடி "சென்ரர்களில்" நிற் பம். ஆக்கள் வந்து சொன்னாப் போய் எடுப் பம். இது உடனுதவும் சேவை.

இதைவிட கண்ணிவெடி அகற்றும் பிரிவு பரந்தனில் தொடங்கி முன்னணிக் காவல ரண் பிரதேசத்தில் கண்ணிவெடி எடுத்துக் கொண்டு வருகுது. இதுவரையும் 45,000 க்கும் மேல எடுத்திட்டினம்" என்றார் உதயன்.

அத்தோடு "நாங்கள் இங்கால வந்தாப் பிறகு இன்னமும் ஒரு விபத்தும் நடக் கேல்ல" என்றார் மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

அடுத்தது அக்கராயன் மருத்துவமனை. மாவட்ட வைத்திய அதிகாரியுடன் கதைத் தபின் விடுதிக்குள் நுழைந்தோம்.

கட்டிலில் தனது வலது காலை முழங் காலுக்கு கீழ் இழந்து படுத்திருந்தான் 17 வயதுடைய சுதன்ராஜ். கடந்த மாதம் 26ஆம் திகதி திருநகரிலுள்ள தனது வீட்டு வளவில் மாமரத்தின் கீழ் கிடந்தவட்டமான பொருளை மிதித்ததினால் அவனுக்கு இந்தநிலை. கனகபுரம் மகாவித்தியாலய மாணவனான சுதன்ராஜ் தற்போது வசிப்பது அம்பலப் பெருமாள் சந்தியில்.

"எனக்கு அது என்னெண்டு தெரியாது. அதாலதான் மிதிச்சிட்டன்" என்றான் சுதன்.

தெரியாது மிதித்த மிதி அவனது எதிர்காலத்தையுமல்லவா மிதித்துவிட்டது?

சராசரியாக வாரத்துக்கு ஒன்று என்ற அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் இந்த நிலைமையை எங்களால் ஓரளவுக்குச் சமாளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால், இதைவிட அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் [காயமடைபவர்கள்] வந்தால் எம்மால் அதை சமாளிப்பது கடினமாக இருக்கும். ஏனென்றால்

1. மயக்க மருந்துக்கு இருக்கின்ற தட்டுப்பாடு: எம்மிடம் போதியளவு மயக்க மருந்து இல்லை. சில சந்தர்ப்பங்களில் வெளியிலிருந்து மயக்க மருந்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியும் ஏற்பட்டது.

2. போதியளவு இரத்தத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றமை : பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றவர்கள் பொருளாதார வசதி குறைந்தவர்களாகவே இருக்கின்றனர். இதனால் அவர்களால் இரத்தத்தைப் பெற்றுத்தர முடியாமலே இருக்கிறது. எனவே 50, 60 தொண்டர்களை வைத்தே குருதித்தேவையைப் பூர்த்தி செய்ய முயற்சித்து வருகின்றோம். ஆனால், இவர்களிற்கு மலேரியா போன்ற நோய்கள் ஏதாவது வந்துவிட்டால் எமது பாடு திண்டாட்டமாகிவிடும்.

3. சத்திரசிகிச்சை நிபுணர்களின் பற்றாக்குறை: இரண்டு பேரே தற்போது சத்திர சிகிச்சைகளைச் செய்கின்றோம். காயமடைந்து வருபவர்களின் தொகை அதிகரித்தால் எம்மால் அதை எதிர்கொள்வது சிரமமாக இருக்கும்.

சாதாரணமாக ஒரு வாகன அமுக்கக்கண்ணிவெடி – 'வெய்க்கிள் மைன்ஸ்' வெடித்தால் நிலைமை கவலைக்கிடமாகத்தான் இருக்கும்.

எனவே தற்போது பத்திரிகையில் வெளிவருவதைப் போலவும் இன்னும் பிற வழிகளிலும் மக்களிற்கு மிதிவெடி, கண்ணிவெடி, பொறிவெடி தொடர்பாக போதியளவு அறிவூட்டப் படுவதோடு எச்சரிக்கையும் விடுக்கப்படுதல் வேண்டும்.

இவ்வாறு கூறுகிறார் கிளி. மாவட்ட வைத்திய அதிகாரி விக்கினேஸ்வரன் அவர்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெடிப்பொருட்களுடன் வேண்டாம் விளையாட்டு

**தமிழீழம் ஒரு கொடூரமான எதிரியின் ஆக்கிரமிப்பைச் சந்திக்கிறது. இன்று தனது அர்ப்பணிப்பு மிக்கப் போராட்டத்தினால் படிப்படியாக ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டு வருகின்றது. ஆனால் எதிரி ஆக்கிரமித்த ஒவ்வொரு அங்குலத்திலும் விதைத்துவிட்டுச் சென்ற விபரீதங்கள் அவனது வேலையை செய்து கொண்டிருக்கின்றது.**

வேலவன்

இராணுவ முகாம் ஒன்றின் எல்லைக்கு அருகிலிருந்த அந்த வீடு அடிக்கடி எறிகணைத் தாக்குதல் அபாயத்தைக் கொண்டிருந்ததால் அந்தக் குடும்பம் நெருக்கமான குடியிருப்புக்களை கொண்ட இடம்பெயர்ந்தோர் முகாமொன்றில் தங்கியிருந்தது.

சில நாட்கள் இராணுவத்தின் எறிகணை வீச்சு சற்றுத் தணிந்திருந்ததால், வளவில் நின்ற தென்னைகளில் தேங்காய் பறித்து வரலாமென்று அக்குடும்பத்தின் தலைவர் சென்றிருந்தார்.

வளவுக்குள் சென்று தேங்காய் பிடுங்குவதற்கு நீளமான தடியொன்றைத் தேடிய போது, கிணற்றடியில் மோட்டார் எறிகணையொன்று அரைவாசி புதைந்த நிலையில் இருப்பதை அவர் கண்டார்.

முதலில் அதைக்கண்டவுடன் திடுக் காட்டமாய்த்தான் இருந்தது. பின்னர் முன்னரே விழுந்த ஷெல்தானே இனி வெடிக்காது என்று நினைத்து தன்னை ஆசுவாசப் படுத்திகொண்டார்.

வந்த அலுவலை முடித்துக் கொண்டு திரும்புவோம் என்று நினைத்தபோது முன்னர் கண்ட மோட்டார் ஷெல்லின் ஞாபகம் அவருக்கு வந்தது.

அதனை கையில் வைத்திருந்த நீண்ட தடியால் தூர நின்று தட்டிப்பார்த்தார் அது சரிந்து வீழ்ந்து விட்டது. முதலில் ஒரு கரையில் வைத்துவிட்டுப் போகத்தான் நினைத்தார். ஆனால் அதனைக் கொண்டு போனால் தனது வளவுக்குள் ஷெல் விழுந்த சங்கதியை ஏனையோருக்கும் சூறலாமென நினைத்து அதனை கையோடு கொண்டு போக முடிவு செய்தார்.

குடும்பத்தினர், குடியிருப்பில் இருந்தவர்கள் தெரிந்தவர்கள் எல்லோருக்கும் காட்டியாயிற்று புதினம் பார்த்த சிலர் தற்செயலாக அது வெடித்து விட்டால் ஆபத்து என எச்சரிக்கவும் செய்தனர்.

ஆனால் அவர் வெகுநேரமாக அதை வைத்திருந்தபோது வெடிக்கவில்லையே ஆனபடியால் வெடிக்காது என்பது அவரது முடிவு.

அவரது கடைக்குட்டி இரண்டொரு தடவை அதைக் கீழை தவறவிட்டபோதும் அது வெடிக்கவில்லை. அது வெடிக்கவே வெடிக்காது என்ற முடிவுக்கே அவரால் வரமுடிந்தது.

சில நாட்களில் அனைவரும் அதைப் பற்றிமறந்து அது ஒரு மூலையில் கவனிப்பாரற்றுக் கிடந்தது. ஒருநாள் அவரின் மூத்த பையனின் கண்ணில் மீண்டும் ஏனோ அது பட்டுவிட்டது. அதனை எடுத்துக் கொண்டு வானொலியை இயக்குவதற்காக வைத்திருந்த டைனமோ பொருத்திய சைக்கிளை நோக்கிச் செல்வதை அவரின் மைத்துனர் கண்டார். அவரும் அதனைப் பொருட்படுத்தவில்லை. சிறிது நேரத்தில் பாரிய வெடியோசை. குடியிருப்பைச் சூழ உள்ள பகுதிகளும் பரபரப்படைந்தது, இராணுவம் ஏவிய எறிகணைகள்தான் அப்பகுதியில் விழுகின்றதோ என்ற அச்சத்தில் பதுங்குகுழிகளை நோக்கி பலர் ஓடினர். பின்னர் குண்டு வெடிப்பு ஓசை கேட்ட இடத்திற்கு வந்து பார்த்தபோது பையன் உருத்தெரியாது சிதறிக்கிடந்தான் அந்த வீட்டில் இருந்தவர்களும் அயல் வீட்டில் சிலரும் காயமடைந்தனர்.

இராணுவம் நிலை கொண்டிருந்துவிட்டு கைவிட்டுச் சென்ற பகுதியில் சில மாதங்களுக்கு முன்னர்தான் அக்குடும்பம் குடியேறியிருந்தது. அன்று அக்குடும்பத்திலிருந்த இரு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது வளவுக்குள் இருந்த கைக்குண்டு ஒன்றைக் கண்டெடுத்தனர். பாதுகாப்பாக பதுங்கியிருந்து கொண்டு அதனை பல முறை எறிந்து பார்த்தனர் வெடிக்கவில்லை.

இப்படியே இவர்கள் பரீட்சித்துக் கொண்டிருக்கும்போது அவர்களின் தாயார்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களின் விபரீத விளையாட்டைக் கண்டு திடுக்குற்றார். “வெடிக்கப் போகுது” என எச்சரித்தார். தங்கள் கண்டுபிடிப்பைத் தாயாருக்கு வெளிப்படுத்த முயன்ற சிறுவர்கள் “அது வெடிக்காதம்மா” என்று கூறி வீசியெறிய நிகழ்ந்தது விபரீதம். சிறுவர்கள் தங்கள் தாயாரை இழந்ததுடன் அவர்களும் காயமடைந்தனர்.

இராணுவம் அப்பகுதியை ஆக்கிரமித்திருந்ததால் அந்த விளைநிலங்கள் மூன்று வருடங்களாகப் பயிர்ச் செய்கைக் குட்படுத்தப்பட வில்லை இப்போது இராணும் அப்பகுதியிலிருந்து விரட்டப்பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன சூளவுள்ள மக்கள் குடியேறத் தொடங்கிவிட்டனர் அந்தக் குடும்பம் தனது விளைநிலத்தை சீர்படுத்தி பயிர் செய்ய எண்ணியது.

காணியைத் துப்பரவு செய்து கொண்டிருந்த அவரின் கண்களில் டப்பி வடிவிலான ஒரு பொருள் தென்பட்டது. அதனைப் பார்த்தபோது அவரின் அறிவுக்கு எட்டிய வகையில் அது ஒரு வெடிபொருள் போலத் தென்படவில்லை வேலையை முடித்துக் கொண்டு அதனைத் திறந்து பார்க்க நினைத்தார். அதனை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்ற அவர் தாயாரிடம் அதனைக்காட்டிவிட்டு திறக்க முயற்சித்தார். ஆனால் அதற்குள் என்ன இருந்தது என்பைத எவருமே அறியார். ஏனெனில் அது திறந்து கொண்டபோது அதனைப் பார்க்க அவரோ தாயோ உயிருடன் இல்லை.



அந்த ஐயா சில வருடங்களுக்குப் பின் சொந்த நிலத்தைப் பார்க்க ஆவலோடு சென்றிருந்தார். அவரது வளவிற்குள் அவதானமாக நடமாடி பார்வையிட்டுக் கொண்டிருக்கும்போது புத்தம் புது எறிகணைகள் கவனிப்பாரற்றுக் கிடந்தது அவரின் கண்ணில் பட்டுவிட்டது. அவற்றை உரிய இடத்தில் சேர்ப்பித்துவிட வேண்டும் என நினைத்து அவற்றையும் எடுத்துக் கொண்டு போராளிகளின் பாசறை நோக்கி சைக்கிளை மிதிக்கத் தொடங்கினார். அவர் கொண்டு வந்த பொருட்களைக் கண்ட போராளிகளின் நெஞ்சம் துணுக்குற்றது. ஏனெனில் எந்த நிலையிலும் வெடிக்கக்கூடிய ஆபத்தான நிலையில் இவ்வளவு கவலையீனமாக அந்த ஐயா கொண்டுவருகிறாரே என அச்சமடைந்த போராளிகள் அதனைப் பெற்றுக் கொண்டு அவர் அவ்வாறு கொண்டு வந்த தன் ஆபத்தை அவருக்கு விளக்கி அனுப்பிவைத்தனர்.

அயலிலுள்ள இராணுவ முகாமிலுள்ள இராணுவம் சில தினங்களுக்கு முன்தான் அப்பகுதிக்கு முன்னேறி வந்துவிட்டுத் திரும்பிச் சென்றிருந்தது. அதனால் வீட்டை விட்டுச் சென்று வெளியேறியிருந்த வீட்டை ஒருமுறை பார்த்துவிட்டு வருவோமென நினைத்து அங்கு சென்றிருந்தார். வீட்டுக்கு பெரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை. நிம்மதியுடன் ஒவ்வொரு அறையாகப் பார்த்துக் கொண்டு வந்தபோது இரண்டு கொங்கிறீற் கற்களுக்கிடையே பச்சையாக ஒரு பொருள் மினுங்கியது.

குண்டாக இருக்குமோ என நினைத்துக்கொண்டு நீண்ட தடியால் தட்டிப் பார்த்தபோது பாரிய சத்தத்துடன் அது வெடித்தது. காயங்களுக்கு உள்ளான அவர், அவைரப் போலவே வீடுபார்க்க வந்த சிலரால் தூக்கிச் செல்லப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவை கதைகளல்ல எமது மண்ணில் நடக்கும் சம்பவங்கள். அடிக்கடி இப்படியான சம்பவங்களை கேள்விப்படுகின்றோம். பத்திரிகைகளில் படிக்கின்றோம். வானொலியில் கேட்கிறோம். ஆனால் மீண்டும் மீண்டும் இவை தொடரவே செய்கின்றன.

தமிழீழம் ஒரு கொடூரமான எதிரியின் ஆக்கிரமிப்பைச் சந்திக்கிறது. இன்று தனது அர்ப்பணிப்பு மிக்க போராட்டத்தினால் படிப்படியாக ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டு வருகின்றது. ஆனால் எதிரி ஆக்கிரமித்த ஒவ்வொரு அங்குலத்திலும் விதைத்துவிட்டுச் சென்ற விபரீதங்கள் அவனது வேலையைச் செய்து கொண்டிருக்கின்றது.

ஆனால் இந்த விபரீதங்களுக்கு எமது மக்களின் அசட்டையீனங்களும், அறியாத்தன்மையும், விழிப்புணர்வின்மையும் காரணமாக அமைந்து விடுவதுதான் கவலைக்குரியது. ஆபத்தானவை எனத் தெரிந்திருந்தும் மனிதனுக்கே இயல்பான “விடுப்புப் பார்க்கும்” குணத்தினால் வெடிபொருட்களுடனான விபரீத விளையாட்டில் இறங்கி, வீணான உயிர், அவயவ இழப்புக்கு உள்ளாக நேரிடுகின்றது.

நிலத்திற்குள் முற்றாக மறைந்திருக்கும் வெடிபொருட்கள் போன்றவற்றால் ஏற்படும் இழப்புக்கள் ஒருபுறமிருக்க வெடிபொருட்கள் எனத் தெரிந்தும் அவற்றைப் பரீட்சித்துப்பார்க்கும் ஆவலால் பல இழப்புக்கள் ஏற்படுவது தொடர்கதையாகவேயுள்ளது.

இந்த இழப்புக்களிலிருந்து எம் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கைக்கொள்ள ஆபத்தான வெடிபொருட்களுடன் விளையாடாது போதிய அறிவின்றிக் கையாளாது இருப்பதே சிறந்த வழிமுறையாகும். இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து நீங்கிய இடங்களில் குடியேறும்போது அங்கு காணப்படக்கூடிய வெடிபொருட்கள் பற்றி தெரிந்துகொள்வது அவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள உதவும் அத்துடன் இவ்வாறான இடங்களில் வசிக்கும் சிறுவர்களுக்கு வெடிபொருட்களை இனம் காணச் சொல்லிக் கொடுப்பதுடன் எந்தக் காரணம்கொண்டும் அவற்றைக்கையாளவோ பரீட்சித்துப்பார்க்கவோ அனுமதிக்கக்கூடாது. சிறுவர்கள் ஒன்றுகூடி விளையாடும்போது அவர்கள் வைத்திருக்கும் விளையாட்டுப் பொருட்கள் எவை என்பது பற்றி பெற்றோர்கள் கவனித்துக் கொள்வதின் மூலம் பல விபரீதங்களைத் தவிர்க்கலாம்.

பெரியவர்களும்கூட மிதிவெடி ஒன்றையோ அல்லது வெடிபொருள் ஒன்றையோ காண நேரும்போது அவற்றைத் தாமாகவே அகற்றமுயல்வது ஆபத்தை விளைவிக்கக்கூடியதாகும். ஏனெனில் அவற்றுடன் மேலும் சில மிதிவெடிகளை இணைத்து ஒன்றை அகற்றும்போது மற்றவையும் வெடிக்கக்கூடியவாறு ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கலாம். எனவே தகுந்த அறிவில்லாமல் அவற்றை அகற்ற முயல்வது ஆபத்தையே விளைவிக்கும். விழிப்புணர்வுடன் இருப்பதன் மூலமே இந்த விபரீதங்களைத் தவிர்க்கமுடியும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# திலீபன் வளர்த்த தியாக வேள்வி

**1987** ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் நாள் தேரோடும் நல்லூரின் வீதியிலே ஊர் கூடிநின்றது. வேரோடும் அடிமையை வெட்டிச்சரிக் கவென்று போராடப் புறப்பட்ட வேங்கை யொன்று புன்னகை முகத்தோடு புது வேள்வியொன்றைத் தொடக்கியது. எண் ணிடச் சிலிர்க்கும் தன்னிகரில்லா தற் கொடை வேள்வி பன்னிரு நாட்கள் தொடர்ந்தது. நீரையும் வெறுத்து நிகழ்த் திய பேரற வேள்வியின் முடிவில் 26.09.87 காலை 10.48 மணியளவில் அறவேங்கை யின் திருவிழிகள் அமைதியாக மூடிக் கொண்டன. மனிதமும் மாண்புகளும் வாய்விட்டுப் புலம்ப, பஞ்சசீலம் பேசி நின்ற பாரத நாடு நாணியும் நடுங்கியும் நிலம் பார்க்க, மரணம் பணிய நிகழ்ந்த மாபெரும் வேள்வியிது. அறத்தின் நாய கன் அண்ணல் திலீபன் நிகழ்த்திக் காட் டிய தியாகத்தை மீறிய திலீபம் அது.

ஊரெழுமண்ணிலே 29.11.63இல் உரு வான மானவித்து அண்ணல் திலீபன், அதிபர் இராசையாவின் அன்புப் புதல் வனாகி பார்த்தீபன் எனும் பெயரினைத் தாங்கி ஊர்ப்புறத்தவரின் அன்பிலே ஊறி வளர்ந்த தமிழீழத்தின் தன்மானச்சின்னம் அண்ணல் திலீபன். யாழ் இந்துவின் நித்திலமாகக் கல்வி பயின்ற திலீபன் கேட் போரைப் பணிக்கப் பேசும் நாவலனா கவும், யாழ் மாவட்ட விருதினை நான்கு முறை கவர்ந்த சதுரங்க வீரனாகவும் திலீபன் விளங்கினார். பல்கலைக்கழக மருத்துவப் படிப்பிற்குத் தேர்வான திலீபன் தமிழீழத்தின் நிலைகண்டு, பிறந்த பொன் னாட்டின் சேவைக்காக உயர்கல்வியைத் துறந்து களத்திடை புகுந்தார்.

புலிகளின் இலட்சியப் பாசறையிலே 1983இல் இணைந்து உறுப்பினரான திலீபன், கொண்ட கொள்கையில் திடமும் தெளிவும், கொண்டவரானார். ஆற்றலும் அழகும் நேர்த்தியும், நிஜமும் கொண்ட சொற்களால் மாரி போல பொழிகின்ற நாவன்மை கொண்டிருந்தார். இதனால் விடுதலைப் புலிகளின் கொள்கை விளக் கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார். “களத் தில்” என்ற மாத இதழை நடத்தி மக்கள் உள்ளத்தில புகுந்தார். மக்கள் நெஞ்சிலே விடுதலை வித்தினைத் தூவினர். நீரூற்றிப் பண்படுத்தி விடுதலைப் பயிர் வளர்த்தார்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்பு, சுதந்திரப் பறவைகள் அமைப்பு, தேசபக்தர் அமைப்பு, விழிப் புக்குழுக்கள், கிராமிய நீதிமன்றங்கள், ஒலி ஒளிச்சேவை, தமிழர் கலாச்சார அவை, தொழிற்சங்கங்கள்... இவை அண் ணல் திலீபனின் கைவண்ணம் படிந்து, பொலிந்து, வளர்ந்தவை. அரசியல் விழிப் புணர்வை ஆக்கும் பணியில் அண்ணல் திலீபனின் சேவை அளப்பரியது. வியப் புக்குரியது. மக்களோடு மக்களாகக் கலந்து ஒன்றி, தமிழீழத் திக்குகளில் தன்மானத் தீயை திலீபன் எரிய வைத்தார்.

விடுதலைப் புலிகளின் தாயகக் கோட் பாட்டை விளங்கிக் கொள்ளாத அல்லது விளங்கமறுத்து ராஜீவ்காந்தி சிங்கள அர சோடு ஒப்பந்தம் செய்து கொண்டார். இலங்கை இந்திய ஒப்பந்தம் கலங்கும் தமிழரின் நலனைக் காக்காது என்று திலீபன் தெளிவாக உணர்ந்தார். தெளிவாக உரைத் தார். இலங்கை இந்திய ஒப்பந்தம் உரு வான 1987.07.29ஆம் நாளன்று, 14 தமிழர் களை மூதூர் மல்லிகைத்தீவு வயல்வெளி யில் வைத்து பதைக்கப் பதைக்கச் சிறீ லங்கா இராணுவம் சுட்டுக்கொன்றது. திரு மலை சாம்பல்த்தீவில் 4 மாதக்குழந்தை உட்பட நான்கு தமிழர்களையும் சிங்கள இராணுவம் கொன்று முடித்தது.

தமிழர் நலனுக்கென்று ஒப்பந்தம் உருவான நாளில் சிறீலங்கா இராணுவம் செய்த இரக்கமற்ற கொலைகள் இவை கள். தொடர்ந்து வெடித்த கூலிக்கும்பல் களின் வெறியாட்டத்தில் ஆயுதக் கைய ளிப்புச் செய்த விடுதலைப் புலிகள் வேட் டையாடப்பட்டனர். தமிழீழம் குமுறியது. வீரம் மிகுந்த வேங்கைகள் வேட்டையாடப் படுவதையும், தமிழர் மண் மீள்குடியேற்றம் என்ற போர்வையில் அரிக்கப்படுவதையும், ஆயுதம் களைவதில் அக்கறை காட்டிய பாரத அரசு, பார்த்துக்கொண்டு பேசாதிருந்தது.

இந்த இழிநிலை கண்டு தியாகி திலீபன் கொதித்தெழுந்தார். 07.09.1987 இல் யாழ் கோட்டையருகே கூடிநின்ற மக்களின் முன்னே கொதிப்போடு பேசினார். ‘அடிமைச்சின்ன மான யாழ்கோட்டையில் தமிழர் கொடிகள் பறக்க வேண்டும். மக்கள் புரட்சி வெடித் துப்பரவி மண்ணை மீட்க வேண்டும்’ என்று வெடிப்போடு முழங்கினார்.

ஒப்பந்தத்திற்கு முரணாக தமிழ் மக் கள் ஏமாற்றப்படுவதை, தமிழீழ மக்களின் தாயகத் தாகம், விடியல் வரும் வரை தீராது என்பதை உலகுக்குக் காட்ட அண்ணல் திலீபன் உண்ணா நோன்பினை ஆரம்பித் தார். காந்தி பிறந்த தேசம் அறவேள்வி யின் அழுத்தத்தைப் புரிந்து கொள்ளும் என்று நம்பி, ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் தியாக வேள்வியைத் தொடங்கினார்.

அறவேள்வி நடந்தபோது தமிழீழம் நல்லூர் மண்ணிலே திரண்டது. தமிழீழம் முழுவதும் திலீபக்காற்று விடுதலைத் தீயை விசிறத்தொடங்கியது. ஆனால் பஞ்ச சீலம் பாரதம் பார்த்துக் கொண்டு பேசா திருந்தது. உலக அரங்கிலே பாரததேசத் தின் அமைதிவேடம் கலைந்த அதேவேளை, எந்தத் தேசத்தின் ஏதேச்சதிகாரத்தையும் எடுத்தெறிந்து வெல்லும் தகுதியும் தீரமும் தமிழீழத் தேசத்திற்கு உண்டு என்ற உண்மை புலரத் தொடங்கியது. அண்ணல் திலீபனின் அறவேள்வியில் ஆகுதியாகத் தந்த கணத்திலிருந்து, தமிழீழம் புதிய வேகத்தோடு, புதிய சிலிர்ப்போடு, புதிய பார்வையோடு புரட்சிப் பாதையில் நடக் கத் தொடங்கியது. திலீபனின் கனவுகளை நனவாக்கும் உறுதியோடு, அடக்குமுறை, அழிப்பு வேலை, குருதியூற்று, மரணத்தீ.. இவற்றிற்கெதிராக திலீபவலுவோடு நடந்து கொண்டிருக்கின்றது.

“தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த தியாகத்தைச் செய்யமுடியுமோ அந்த அற்புதமான பணியைத்தான் திலீபன் செய்திருக்கின்றான். உயிர் உன்னதமானது என்பதை நானறிவேன். ஆனால் உயிரினும் உன்னதமானது நமது உரிமை எமது சுதந் திரம் எமது கௌரவம்” தமிழீழத் தேசியத் தலைவரின் இந்த வார்த்தைகள் திலீப ஒளியில் தோய்ந்து வந்தவை. இந்த வார்த் தைகள் மேலும் மேலும் தியாகத் தீயிலே தம்மைப் புடமிட்டுக் கொள்ளும் வலுவை தமிழீழ மக்களுக்கு வழங்கிக் கொண்டி ருப்பவை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கல்லறைக்குள் கதிரவன்

பிரசாத்!
விடுதலைப் பாதையில்
உன்னால்
வளர்த் தெடுக்கப்பட்ட
சின்னச் சின்னப் பிரசாத்துக்கள்
விடியலை நோக்கிய
வண்ணத்துப் பூச்சிகளாய்,
தேசத்திற்கு விளக்கேற்ற
தீட்டப்படும்
தீக் கற்களாய்....
பல தடவைகள்
மரணம் உன்னோடு
மல்லுக்கட்டி
வெல்ல முடியவில்லையே என்று,
வேதனைப் பட்டது.

இருபக்க வீதியிலும்
இந்தியப்படை காத்திருக்க
பீதியடைந்த மக்கள்
வீதிகளை மறந்தோட
நீயோ....
அடிபாட்டுக்குத் தேவையான
ஆயுதங்களைச் சுமந்து
சந்திகளையும் முடக்குகளையும்
சாதாரணமாய்க் கடந்து வந்தாய்.
ஒற்றையடிப் பாதையிலும்
ஒவென்ற தெருக்களிலும்
விடுதலை தேடி

விரைந்த உன் சுவடுகள்.....
ஒருநாள்
உன்போன்றோரின்
இறப்புக்களின் பின்னணியில்
இந்தியப்படை வெளியேறியது.
சாவுகளின் மேட்டில் - ஒரு
சரித்திரம் உருவாகும்.

வீரனே....
உன்
கல்லறையில் விளக்கேற்றி
களங்கப் படுத்தவில்லை.....
கண்ணீர் வடிக்கவில்லை
ஏனென்றால்....
எமக்குத் தெரியும்,
உள்ளே இருப்பது
சூரியன் என்று.

**கப்டன் கஸ்தூரி**

மேஜர் பிரசாத் (கந்தையா முரளிதரன், அஜந்தா இல்லம், மூளாய். பிறப்பு (18-09-1962) பனிப்புலம் என்னுமிடத்தில் இந்தியப்படை கைதுசெய்ய முற்படுகையில் சயனைற் உட்கொண்டு வீரச்சாவடைந்தார்(06.02.1988). இவர் லெப். கேணல் திலீபனிற்குப் பின்னர் யாழ், மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்தவர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "அதிர்ச்சி நோய் எமக்கல்ல"



## -வே.பாலகுமாரன்-

"அதிர்ச்சிநோய் எமக்கல்ல" இது 1993ஆம் ஆண்டு வெளியான தமிழீழத்தின் ஆன்றோனான நாக-பத்மநாதன் ஐயாவின் உருவகங்களுக்கான தலைப்பு. இத்தலைப்பும், இத்தலைப்பின் கீழ் வரும் உருவகமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய அதியுயர் வளர்ச்சிநிலை கண்டு பதறியடித்து வரலாறு பிதற்றும் சர்வதேசத்திற்கு எவ்வளவு சாலப்பொருந்துகின்றது என்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் இலக்கு. இப் பிதற்றல்களை நாங்கள் தொகுத்தால்.. அயலிலுள்ள அதிகாரத்தோர் (தமிழீழம் அமைப்பதற்கு அனுமதிகோரி தமக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பத்தை நிராகரிப்பது போன்றதொனியில்) தமிழீழம் அமைவதை அனுமதியோம் என்கிறார்கள். அதிகாரத்தை அண்டி வாழ்வோர் அதற்கு முண்டுகொடுக்கும் ஊடக முதலாளியங்களைச் சார்ந்தோர் (சிறீலங்காவால் தமக்கு அனுப்பப்பட்ட வழக்கொன்றை விசாரிக்கும் நீதியாளர் போன்ற தொனியில்) தமிழீழம் அமைப்பது பாரியகுற்றம். அது பயங்கரவாதிகளின் பாதகச் செயற்பாடு என நீதி வழங்குகிறார்கள். இன்னும் சிலரோ இதனையொரு பட்டிமன்ற "அரட்டை அரங்க" விவாதப் பொருளாக்கி விழலுக்கு நீர் இறைக்கிறார்கள். உலகத்தின் தொலை இயக்கி தன்னிடமே இருப்பதாகக் கருதுவோரோ செத்த கிரகமொன்றில்தான் தமிழீழம் அமைவது சாத்தியம் எனக்கூறி தம் மாலும் நகைச்சுவையாக நாலு வார்த்தை உதிர்க்கமுடியும் என நிரூபிக்கின்றார்கள். இதற்கெல்லாம் காரணம் அவர்கள் அடிமனதில் அதிர்ச்சிநோயன்று பரவியிருப்பதே என்பது எமக்குப் புரிகின்றது.

இவற்றிக்குத் தக்க பதிலை மிகத் தெளிவாக புலிகளின் அரசியல் ஆலோசகரான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கூறிவிட்டார். "சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அமெரிக்காவும் இந்தியாவும் இத்தகைய அறிக்கைகளை வெளியிட்டிருக்கலாம். இந்நாடுகளது பூகோள அரசியல் நலன்களையும் அச்சங்களையும் நாம் புரிவோம். அரசியல் சுதந்திரம் வேண்டித் தமிழர் நடத்தும் போராட்டத்திற்கு பாதகம் விளைவிக்கும் நோக்கில் அந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டதாக நாம் நினைக்கவில்லை. பேச்சுவார்த்தை மூலமாக ஒரு அரசியல் தீர்வுகான இருதரப்பினரும் முயற்சி எடுக்க ஊக்கமளிப்பதற்காகவே இக்கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கலாம்.

தமிழரின் பிரச்சனைக்கு இறுதித் தீர்வு விடயத்தை நிர்ணயிக்கும் சக்தி அமெரிக்க வல்லரசிடமோ அன்றி இந்திய பிராந்திய வல்லரசிடமோ அல்லது சிறீலங்கா அரசிடமோ இருக்கவில்லை. எமது தேசத்தின் அரசியல் அந்தஸ்தையும் தலைவிதியையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவது எமது மக்கள்தான். தமிழீழ மக்கள்தான் என உறுதிபட வலியுறுத்தி கூறியிருக்கின்றார். இதுவே தமிழீழ மக்களின் ஒருமித்த பதில். விடுதலைப் புலிகளின் அசைக்கமுடியாத அரசியல் நிலைப்பாடு. உலகம் உய்த்துணர வேண்டிய உயரிய கருத்து.

இப்படியிருந்தும் உலகம் எதற்காக பதறியடித்து பலவாறு அவசரக்கோல அறிக்கைகளை விடுக்கின்றது? பிரபல செய்தியேடுகள் உரிய முறையில் ஏன் விடுதலைப் போராட்ட வளர்ச்சியைப் பிரதிபலிக்கவில்லை. வெல்லப் போகின்றார்கள் என்பதுதான் இவர்கள் அதிர்ச்சிநோய்க்குக் காரணமா? இத்தனை காலம் மௌனம் காத்தார்கள்; ஏறெடுத்தும் பார்த்தார்களில்லை; உலகை மறக்கவைத்துவிட முடியும் என நம்பினார்கள். ஆனால் ஆனையிறவுப்பெருந்தள வீழ்ச்சி தவிர்க்கமுடியாத உண்மையை நிர்ப்பந்த நிலையையல்லவா தோற்றுவித்து விட்டது. இங்கேதான் பெருத்த முரண்பாடொன்று அவர்கள் கருத்துக்களிலே தொக்கி நிற்பதை எவரும் உணரமுடியும். இவர்கள் முதலில் என்ன செய்திருக்கவேண்டும்? எவ்வாறேனும் புலிகளுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்தி உரிய விபரங்களைப் பெற்று ஆனையிறவுத் தளவீழ்ச்சியின் அரசியல் இராணுவ பரிமாணங்களை யாழ் குடாவில் புலிகள் மீண்டும் காலூன்றுவதைப் பற்றி எழுதியிருக்கவல்லவா வேண்டும்? ஆனால் சிலவரிகள் இவை பற்றி எழுதிவிட்டு இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்?

இவர்களின் கருத்துநிலை முரண்பாட்டினை இவர்கள் சொற்கள் மூலமே இங்கு நாம் வெளிப்படுத்தவிரும்புகின்றோம். நியூஸ்வீக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(மே29) இதழில் "நீங்கள் சாகத்தான் வேண்டும்" என்கிற தலைப்பில் டக்ளஸ் தேவானந்தா என்கிற எம் மக்களுக்கு நம்பிக்கைத் துரோக மிழைத்தவரின் ("புலிகள் கொடியவர்கள்"), தயான் ஜெயத்திலக்கா என்கிற சிங்களப் பேரினவாதியின் ("புலிகள் மதச்சார்பற்ற தலிபான்கள்"), மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் என்கிற சோரம் போன சகுனிகளின் கருத்துக்களை அடியொற்றிக் கட்டுரை எழுதப் பட்டுள்ளது. றம்போ போன்ற அமெரிக்க மலினப்படங்களைப் பார்த்தே போராளிகள் பயிற்சி பெறுவதாக வேறு கேலிக்குரிய கருத் துக்களை விதைக்கின்றது இக்கட்டுரை. ரைம் இதழின் யூன் 5 இதழோ எப்போதும் எவர்க்கும் ஏவல் செய்வதற்கே பிறப்பெடுத்திருக்கும் வரதராசப்பெருமாள் ("அவர்களுக்கு மக்கள் ஆதரவிருப்பதாக எவரும் கூறமுடியாது. அச்சுறுத்தியே தங்களை அவர்கள் நிலை நிறுத்தியுள்ளனர்") கருத்தை முன்வைக்கின்றது. விடுதலைப் போராளி களின் உயரிய ஆன்ம ஈகத்தை, உயிரை, உடலை பிறர்க்காக தற் கொடையாக்கும் தலைசிறந்த பண்பை எவ்வாறேனும் உலகின் கண்கள் முன்னே மறைக்க, குறைக்க இவர்கள் படும்பாடு பரிதாபத்திற்குரியது.

இவர்களது முரண்பாடுகள் இங்கேதான் அம்பலமாகின்றன. இவர்கள் வெளிப்படுத்துவதுபோல தரக்குறைவான, பகுத்தறிவற்ற திரைப்படங்களைப் பார்த்து விடுதலைப் போராட்டத்தை நடத்து கிற ஒரு பயங்கரவாத இயக்கத்தால் எவ்வாறு அதே ரைம் மே 29ம் திகதி இதழில் சிறப்பித்து சிலாகித்துக்கூறப்படும் உயர் பண்புகளைப் பெற்றிருக்க முடியும்? எவ்வாறு பாரிய அரசியல் இராணுவ வெற்றி களை அடையத்தக்கதான அமைப்பை கட்டியெழுப்பியிருக்க முடியும்? தினை விதையிலிருந்து பனை தோன்றுமா? ரைம் இதழ் ஒன்றின் பின் ஒன்றாக விபரிக்கும் புலிகளின் இயல்புகளைப்பாருங்கள். உயரிய வளர்ச்சி கண்ட நாடுகளில் விரும்பப்படும் அதியுயர் நகர்திறன்கொண்ட மரபுவழி இராணுவங்களின் மூலோபாயங்களை கையாளும் ஆற்றல் பெற்ற மிக இறுக்கமான தாக்குதல் அணியாக புலிகள் மாறிவிட்டார் கள். வெளிநாடுகள் பலவற்றிலிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்து அவற்றினை தமதிடத்திற்கு நகர்த்தும் ஆற்றல் பெற்ற புலிகள், புலி கள் கனரக ஆயுததளபாடங்களான பீரங்கிகள், ராங்குகள், எறி கணைகள், துருப்புக்காவிகள் போன்ற தமக்கு முழுமையான தேவை யில் ஆகக்குறைந்தது 60 விழுக்காட்டையாவது சிறீலங்கா இராணு வத்திடமிருந்தே கைப்பற்றிக் கொள்கின்றனர். சரி அரைப்பங்கு பெண் போராளிகளைக் கொண்ட புலிகள் தமது போரியல் ஆற்றலில் ஒரு புதிய பக்கத்தினைக் காட்டிநிற்கின்றார்கள். தவறுகளிலிருந்து படிப் பினைகளைப் பெற்றுக்கொள்ளும் அற்புத ஆற்றல் வாய்ந்தவர்கள். ஒவ்வொரு தாக்குதல் திட்டமும் இம்மிஅளவும் பிசகாது நுட்பமாகத் திட்டமிடப்படுகின்றது. இதற்குத் தேவையான தரவுகள் யாவும் துல்லியமாகப் பெறப்படுகின்றது. இடைவிடாது முடிவற்ற பயிற்சிகள், ஒத்திகைகள் மூலம் வெற்றியைத் தமதாக்கிக்கொள்கின்றனர்.

இத்தனை இயல்புகளையும் விபரிக்கும் அமெரிக்க ரைம் இவற் றிற்கெல்லாம் காரணம் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே என்கிறது. விவேகமும் எதையும் ஒழுங்கு முறையாகத் திட்டமிட்டு மேற்கொள்ளும் ஆற்றலும் வாய்ந்த இவர் உலகின் மிகவெற்றிகரமான பயங்கரவாத இயக்கத்தை நவீன இராணுவமாக மாற்றிவிட்டார்.

இவ்வாறு வியப்புடன் "ஆ"வென வாய்பிளந்து ஆய்வு செய்யும் இக்கட்டுரையிலே புலிகளை தவறாகப் புரிந்து கொள்வதன், குறைத்து மதிப்பிடுவதன் அபாயம் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்தியா உட்பட அனைவருமே இத்தகைய பாரிய தவற்றினைச் செய்திருப்பதாக விபரிக்கும் அமெரிக்க ரைமும் தானும் அதே தவற்றினையே இறு தியில் செய்கின்றது. அமெரிக்க ரைம் இவ்வாறு தடுமாறுகையில் இந்தியாவின் புரொன்ட்லைன் ஏடோ ஒரு படி மேலேபோய் தனது மே 26 வெளியீட்டில் முகம் மலர்ந்து (இவர்கள் மனோவிகாரங்களை எள்ளி) நகைக்கும் தலைவர் படத்தை அட்டையில் வெளியிட்டு ஏறத்தாழ 20 பக்கங்களுக்கு ஆனையிறவுச் சமர், அதன் விளை வுகள் பற்றி சிறப்பு விளக்கக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது.

ஆனால் அதன் ஆசிரியர் என். ராம் வழமைபோல் தலையங்கத் தில் "வாந்தியெடுக்கின்றார்" தமிழீழம் பகற்கனவு. நாம் அனு மதியோம். இந்தியாவிற்கு பெரும் தீங்கு என மாயக் கருத்துக்களை உற்பத்தி செய்கிறார். யாரிந்த ராம்? இவருக்கும் எமது விடுதலைப் போராட்டத்திற்கும் என்ன சம்மந்தம்? "வெய்யில் படாத" - "வீதிக்கு இறங்காத" "மேட்டுக்குடி சாய்வு நாற்காலி புகழ்" ராம் மாக்சை, மனித நேயத்தையே குழிதோண்டிப் புதைக்கிறார். இவர்களின் இத்தகைய மிக மாறுபாடான போக்குகள் பல வினாக்களை எழுப்புகின்றன. பகுத்தறி வற்ற ஒரு பயங்கரவாத இயக்கம் வீறுடன் எவ்வாறு விடுதலைப் போராட்டத்தினை நடத்த முடியும்? எவ்வாறு நவீன மரபுவழி இராணுவ மாக மாற்றமடைய முடியும்? தவறுகளிலிருந்து பட்டறிவைப் பெறும் ஒரு விவேகி எவ்வாறு பயங்கரவாதியாக முடியும்?

இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்? எவரும் குழம்பத்தேவை யில்லை. அன்றே இதற்கான பதிலை நாக. பத்மநாதன் அவர்கள் கூறி விட்டார்கள். தத்தளிக்கும் மனித உள்ளமும் அதற்கு உறுதி கூறும் குரலொன்றுமாக இவ்வுருவகம் நகர்கின்றது எனலாம்.

"அடிக்க வருவரை நீ அடி! கொல்ல வருவரை நீ கொன்றுமுடி! வாழ்வுக்கு வேண்டிய வழியும், நெறியும் - பொய்யாமொழியும் இது தான்!" எனத் தொடர்ந்து முழங்கிற்று அக்குரல்.

வானமும் இதனையே எதிரொலித்து ஓய்ந்தது.

புதிய உயிரோட்டமொன்று தன்னுள் எழுவதை தத்தளித்து நின்ற மனம் (எம்மக்கள்) உணர்ந்தது. அது விழிப்பாக வீர உணர்ச்சியாக உதிரத்துள் செறிந்தது என்ன...? முன்பு பயந்து நின்ற மனதை இப் போது அங்கு காணவில்லை. வீர மனிதனொருவன் அங்கு தலை நிமிர்ந்து நின்றான். காலவேகத்தில் நொடிப் பொழுதில் ஒன்று, நூறு, ஆயிரம் ஆகின! விடுதலை வேண்டும் இனமொன்று அங்கு கரம் உயர்த்தி நின்றது. புதிய வரலாறே உருவாகி நின்றது.

"அதிர்ச்சியும் பயமும் எமக்கல்ல! அவையும் - அழிவும் எம் பகை வனுக்கே" என்ற விடுதலையின் விளக்கம் அங்கு ஒலித்துக்கொண்டிருந்தது.



ஆனையிறவுப் பெருந்தளத்தில் நிமிர்ந்து நிற்கிறது நெடும்பனை.
பேரினவாதத் திமிரழித்து காற்றிலே தவழ்கிறது தமிழர் உயிர்க்கொடி!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசின் நடவடிக்கையில் தலையீடு செய்யும் பௌத்த பீடங்கள்



வேலவன்

சிறீலங்காவின் அரசியலில் பௌத்த பீடங்கள் வகிக்கும் செல்வாக்கு மிக அதிகமானது என்பதில் எவருக்கும் ஐய மிருக்க முடியாது. சிறீலங்காவின் அதிஉயர் பதவி வகிப்பவர் முதல் அதிகாரிகள் வரை பதவி ஏற்றதும் முதலில் செய்வது பௌத்த பீடங்களிடம் ஆசி பெறுவதுதான். ஆனால் சந்திரிகா அம்மையாரின் ஆறு ஆண்டு கால ஆட்சி முடிவடையும் தறுவாயில் சிறீ லங்காவின் அரசாங்கத்தையும் அதன் கொள்கைகளையும் கட்டுப்படுத்த முயலும் சக்தியாக மாற பௌத்த பீடங்கள் முயல் கின்றமையை அவதானிக்க முடிகிறது.

சந்திரிகா அம்மையாரின் தேர்தல் வாக்குறுதிகளில் அடங்கியுள்ள "இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு" காண் பதற்கான அரசியலமைப்புச் சீர்திருத்தம், ஜனாதிபதி முறை ஒழிப்பு என்பவற்றை உள்ளடக்கி அவர் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த சீர்திருத்தப் பிரேரணையை தயவு தாட்சணியம் இன்றி எதிர்ப்பதில் மகாநாயக்கர்கள் முதல் பௌத்த பிக்கு கள் வரை முன்னின்றனர்.

இந்த அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் அடங்கியுள்ள விடயங்களுடன் மல்வத்த பீடாதிபதியின் முன் முழந்தாழிட்டு நின்ற ஜீ. எல். பீரிஸிடம் மல்வத்த பீடாதிபதி அதனை தான் எதிர்ப்பதாகவும் சிங்கள மக்களின் அபிலாசைகளை அது பூர்த்தி செய்யவில்லை எனவும் நெற்றிக்கு நேரேயே கூறிவிட்டார்.

சீர்திருத்தத்தின் பிரதியை எடுத்துக் கொண்டு சிறீலங்கா ஜனாதிபதியின் தூது வராகச் சென்ற பிரதிப்பாதுகாப்பு அமைச் சர் அனுருத்த ரத்வத்தவை சந்திப்பதையே அஸ்கிரிய பீடாதிபதி தவிர்த்துக்கொண்டார்.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை எதிர் த்து கோட்டை அரசமரத்தடியில் பௌத்த பிக்கு ஒருவர் சாகும்வரை உண்ணாவிர தம் இருந்தபோது அவருக்குப் பெரும் ஆதரவு கிடைத்தது. கொழும்பில் நடை பெற்ற போராட்டங்கள், ஆர்ப்பாட்டங் களில் ஆயிரக்கணக்கான பிக்குகள் கலந்து கொண்டனர்.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை எதிர்க் குமாறு பௌத்த மகாசங்கமும் அஸ் கிரிய, மல்வத்த, அமரபுர, ராமண்ய பீடா திபதிகளும் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் கடிதம் எழுதினர்.

இவர்களின் எதிர்ப்பினால் மனம்மாறி பாராளுமன்றத்திற்கு வராமல் ஒழித்து விடுவார்களோ என அஞ்சிய ஆளும்கட்சி "சந்தேகத்துக்குரிய" பாராளுமன்ற உறுப் பினர்களை நட்சத்திர விடுதிகளில் தனது பாதுகாப்பில் வைத்திருந்தது.

இவ்வாறான சூழ்நிலைகளில் சந்தி ரிகா அரசாங்கம் அரசியலமைப்புச் சீர் திருத்தத்தை பாராளுமன்றத்தில் விவாதிப் பதை ஒத்திவைப்பதாக அறிவித்தும்கூட பௌத்த துறவிகள் தமது போராட்டத் தைக் கைவிடுவதாக இல்லை. அரசில மைப்புச் சீர்திருத்தம் எவ்வாறாயினும் நிறைவேற்றப்பட்டே தீரும் என ஜனாதிபதி முதல் ஆளும்கட்சி முக்கியஸ்த்தர்கள் வரை பலரும் கூறிவருவது பௌத்த துறவி களுக்கு எரிச்சலை ஏற்படுத்தி வருகிறது. எனவே அரசியலமைப்பு சீர்திருத்தத்தை அரசாங்கம் முற்றுமுழுதாக கைவிடும் வரை போராட்டத்தை தொடரப் போவதாக அவர்கள் சூளுரைத்துள்ளனர்.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அவர் கள் எதிர்ப்பதற்கு கூறும் காரணம் "நாடு பிளவுபடும்" "சிங்கள பௌத்த நலனுக்கு எதிரானது" என்பதாக இருக்கிறது. ஆனால் அதில் எவ்வளவு தூரம் உண்மை இருக் கிறது? என்பது ஒருபுறமிருக்க பௌத்த துறவிகளின் விருப்பத்துக்கு மாறாக நடக் கப்போவதில்லை என்றும் பௌத்த சாசனத் துக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் குறைக்கப்படாது என்றும் பல வாக்குறுதி களை சந்திரிகா அரசாங்கம் அள்ளி வீசி வருகிறது.

புதிதாக பிரதமர் பதவி ஏற்றுக் கொண்டு அரசாங்கத்தில் அங்கம் வகிப்ப வர் அரசாங்கத்துக்கும் துறவிகளுக்கும் இடையே தரகராகச் செயற்படத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கிறார். ஆனால் எதனையும் கேட்கும் நிலையில் பௌத்த துறவிகள் இல்லை.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







சரி, அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் தமிழருக்கு ஏதோ அள்ளி வழங்கப்பட்டு விட்டது என்ற எண்ணத்தில் அதனை பௌத்த துறவிகள் எதிர்க்கிறார்கள் என்று பார்த்தால் சிறீலங்கா அரசின் அனைத்துத் துறைகளுக்கும் இந்த பௌத்த துறவிகள் ஆலோசனைகளை அள்ளி விடுகின்றமையை அவதானிக்கலாம்.

யுத்தத்தைச் சரியாக நடத்தினால் அரசியலமைப்புச் சீர்திருத்தம் அவசியமற்றது என ஒரு துறவி கூறுகின்றார். அவர்களின் நம்பிக்கைக்கு உரியவராக தற்போது மாறியிருக்கும் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவிற்கு ஆசி வழங்கி அவரின் "யுத்த வெற்றி"களைப் புகழ்ந்து கூறும்போது அரசாங்கத்துக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை வடபகுதிக்கான இராணுவத் தளபதியாக இருந்த ஜானக பெரேரா இடமாற்றம் செய்யப்பட்டதை "வெளிநாட்டு சக்திகளின் தூண்டுதலால் எடுக்கப்பட்ட விபரீத முடிவு" என்று பௌத்த மகா சங்கம் கண்டித்திருக்கிறது.

அத்துடன் சிறீலங்கா இராணுவம் தனது மிகப்பெரும் பிரச்சனை எனக் கருதும் ஆட்பற்றாக்குறையை நீக்க பௌத்த துறவி ஒருவர் தயாராகி முன்வந்துள்ளார். சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க "இனவாதம் பேசும்" பிக்குகளால் 20 ஆயிரம் பேரைப் படைக்குத் திரட்டித்தர முடியுமா? என சவால் விட, தான் ஒருலட்சம் பேரைத் திரட்டித்தரத் தயாராக இருப்பதாக பௌத்த துறவி ஒருவர் பதில் சவால் விடுத்திருக்கிறார்.

அதாவது இராணுவ விவகாரங்களில் சந்திரிகா அரசாங்கம் கூறும் எந்தச் சமாதானங்களையும் ஏற்றுக்கொள்ள பௌத்த துறவிகள் தயாராக இல்லை. எனவே பாதுகாப்பு அமைச்சை சந்திரிகா அம்மையார் பௌத்த துறவிகளிடம் ஒப்படைத்தால் அவர்கள் யுத்தத்தைச் சரியான முறையில் திட்டமிட்டு பொருத்தமான தளபதிகளை நியமித்து ஆட்பற்றாக்குறையை நிவர்த்தி செய்து யுத்தத்தில் "வெற்றி" பெற ஆயத்தமாக இருப்பது போலவே கூறுகின்றனர்.

உறுதியானதொரு வெளிநாட்டுக் கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும் என்பது பௌத்த மகாசங்கத்தின் இன்னுமொரு வலியுறுத்தலாக இருக்கின்றது. அத்துடன் இந்தத் தீர்க்கமான வெளிநாட்டுக் கொள்கையில் மேற்கு நாடுகளுக்கு ஆதரவான போக்கை கடைப்பிடிக்கக்கூடாது என இவர்கள் வெளிநாட்டு கொள்கைவகுப்பையும் செய்திருக்கிறார்கள். இது சமாதானம், மனித உரிமைகள் குறித்துப் பேசும் நாடுகளில் பௌத்த மகாசங்கம் கொண்டிருக்கும் வெறுப்பைக் காட்டுகிறது எனக் கொள்ளலாம்.

ஆக வெளிவிவகார அமைச்சின் செயற்பாட்டையும் பௌத்த துறவிகள் ஏற்கத் தயாராக உள்ளார்கள் எனக்கூறலாம்.

இதேவேளை இன்னொரு விடயத்தையும் பௌத்தபிக்குகள் வலியுறுத்தத் தவறவில்லை. அதாவது அரசாங்கம் அறிமுகம் செய்ய ஆலோசித்திருந்த புதிய தேர்தல் முறையானது மக்கள் மீது மேலும் பொருளாதாரச் சுமைகளை ஏற்படுத்தும் ஒன்று என அஸ்கிரிய மற்றும் அமரபுர பீடாதிபதிகள் கண்டனம் செய்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகையை திடீரெனக் கூட்டுவது போல வேறெந்த அரசசேவையும் ஆட்களை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மக்கள் மீது பெரும் பொருளாதாரச் சுமை சுமத்தப்பட்டுள்ளது. இந் நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகையை அதிகரிப்பதன் மூலம் அவர்களுக்கான சம்பளம், மேலதிக கொடுப்பனவுகள் ஓய்வூதியம் என மக்கள் மீது பெரும் சுமையை மேலும் ஏற்றும் செயல் என இப்பௌத்ததுறவிகள் கண்டனம் செய்திருக்கின்றனர்.

ஆக மொத்தத்தில் சந்திரிகா அரசாங்கத்தின் முக்கிய செயற்பாடுகளில் இவர்கள் தலையீடு செய்ய முயல்வதையே இது காட்டுகிறது. அதாவது சந்திரிகா அரசாங்கத்தின் செயற்பாடுகளில் இவர்கள் நம்பிக்கை இழந்துவிட்டதையும் இது காட்டுகிறது எனலாம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சிங்களத்தால் ஏமாற்றப்பட்ட உலக சமூகம்


— நாதன் —

**1994–1995 காலப்பகுதியில் சந்திரிகாவின் பேரினவாத நலன்பேணும் விட்டுக் கொடுப்பற்ற சூழ்ச்சிகரமான நிகழ்ச்சித்திட்டத்திற்கு எதிராக தேசியத் தலைவர் பிரபாகரன் நடத்திய அரசியல் போராட்டத்தின் பதிவு –**

சந்திரிகா பண்டாரநாயக்க சிங்களப் பேரினவாதத்தினை நவீனமயப் படுத்தி - பாதுகாப்பான மேலாடைகளினால் உருமறைப்புச் செய்து, உலக அரங்கில் அதனை நம்பவைக்கும் போலித்தன அரசியலிலேயே நீண்டகாலமாக ஈடுபட்டு வந்தார். அவரது வெளிவிவகாரக் கொள்கையும், உள்நாட்டுச் செயற்பாடுகளும் நுட்பமாக சமப்படுத்தப்பட்ட அச்சிலே இயங்கியது. அமைதியை போரிற்கான காரணமாகக் கூறும் நுட்பமான அரசியல் கபடத்தனத்தை அவர் மேற்கொண்டு வந்தார். தமிழீழ விடுதலைப் போரையும், அதனை முன்னெடுக்கும் புலிகளையும் இந்த கபடத்தனமான அரசியல் பொறியினுள் வீழ்த்தி அழித்துவிடலாம் என்ற எதிர்பார்ப்புடன் சந்திரிகா புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்கள் என்ற நாடகத்தையாடினார்.

ஆனாலும் இந்தக் கபடத்தனத்தின் மூலம் தமிழீழ விடுதலைப் போரையோ, விடுதலைப் புலிகளையோ அழிக்க முடியாது திணறும் சந்திரிகா, உலக அரங்கில் தனது போரிற்கான குறுங்கால ஆதரவைப் பெற்றார். அல்லது, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது தீட்சண்யமான வழிகாட்டல் மூலம் சந்திரிகாவின் கபடத்தனமான பொறியை வெற்றி கொண்ட போதும் உலக அரங்கின் குறுங்கால அதிருப்தியை எதிர்த்து ஒரு அரசியல் இராஜதந்திரப் போராட்டத்தை நடாத்த வேண்டிய நெருக்குவாரத்திற்குள் தள்ளப்பட்டார்.

1994 - 1995 காலப்பகுதியில் இடம்பெற்ற தமிழ் - சிங்கள தேசியத் தலைமைகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளே சந்திரிகாவின் போலித்தன அரசியலின் உச்சமாகும். திட்டமிடப்பட்ட முறையில் சிங்களத்தின் வெளிவிவகார நலன்களையும், உள்நாட்டு இன அடக்குமுறையையும் ஒருங்கிணைத்து சந்திரிகா இப் பேச்சுக்களை நடாத்தினார். தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் இதனை மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் எதிர்கொண்டார்.




இந்த அரசியல் நிகழ்வானது மீள விரிவாக அறியப்பட வேண்டிய முக்கியமான விடயம். அதனிலும் மேலாக எதிர்காலத்திற்கான பாதையை மேலும் செழுமைப்படுத்தத் தேவையான வெளிச்சமுமாகும். இந்த முக்கியத் தேவையை தமிழீழ விடுதலைப் போரின் அரசியல் - இராஜதந்திர விடயங்களில் ஆழமான அனுபவங்களைக் கொண்டவரும் விடுதலைப் புலிகளின் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் **The Politics Of Duplicity** என்ற நூலின் மூலம் பூர்த்தி செய்துள்ளார். போலித்தனத்தின் அரசியல் என்ற அந்த 156 பக்க ஆவணமானது 1994 -1995 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழீழ - சிறீலங்கா பேச்சுக்களினை வரலாற்று பூர்வமாகவும், அரசியல் கனத்துடனும் பதிவு செய்துள்ளது. உலக சமூகம் தமிழ் - சிங்கள இணக்கப்பாட்டுக்கான முயற்சிகளில் ஈடுபாடு காட்டிவரும் வேளையில் கடந்த பேச்சுவார்த்தை தோல்விகளின் காரண கர்த்தாக்கள் யார் என்ற உண்மையை இந்நூல் மூலம் திரு. பாலசிங்கம் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்.

சிங்களப் பேரினவாதத்தின் நவீன வடிவத்தை முளையிலேயே இனம்கண்டு கொண்ட தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் அதனை நேர்மையாகவும், தீட்சண்யமாகவும் எவ்வாறு எதிர்கொண்டார்? சந்திரிகாவும் அவரது மாமனார் ரத்வத்தையும் தமது கடிதங்கள் ஊடாக எவ்வாறு தமது கொடூரமான இனவாதத் திமிரை வெளிக்காட்டினர்? எவ்வாறு சந்திரிகாவும் அவரது வெளிவிவகாரத்துறையும் புலிகளுக்கு எதிரான பரப்புரைப் போரை சாதுரியமாகத் திட்டமிட்டனர்? சந்திரிகா எவ்வாறு சிங்களப் பேரினவாதத்தின் நலன்களைப் பாதுகாக்க முற்பட்டார்? பேச்சுக்கள் முறிவடைந்ததின் புறச்சூழ்நிலைகள் என்ன? என்ற எண்ணற்ற கேள்விகளுக்கான பதிலை திரு. பாலசிங்கத்தின் எழுத்துக்கள் பதிவுசெய்துள்ளன.

1986இல் சென்னையில் தன்னைச் சந்தித்த சந்திரிகாவினைப்பற்றிய அவதானிப்புடன் பதிவை திரு.பாலசிங்கம் அவர்கள் ஆரம்பிக்கின்றார். தமிழர்களை தேசிய இனமாக அங்கீகரிக்காது வெறும் சிறுபான்மைச் சமூகமாகக் கருதும் பேரினவாத நிலைப்பாட்டை 1986இல் சந்திரிகா வெளிக்காட்டியிருந்தார் என்பதுடன் சிங்களவர்களுடன் அமைதியாக வாழுமாறு ஏன் புலிகள் தமிழ் மக்களைக் கேட்கக் கூடாது என்ற விசித்திரமான வாதத்தையும் அப்போது அவர் திரு. பாலசிங்கம் அவர்கள் முன் வைத்துள்ளார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1994இல் ஆட்சிக்கு வந்த சந்திரிகா புலிகளுடனான பேச்சுக்களை இரு மட்டங்களில் நடாத்தினார் எனச் சுட்டிக்காட்டும் திரு. பாலசிங்கம் அவர்கள் ஒரு கட்டத்தில் சந்திரிகாவின் அதிகாரிகளைக் கொண்ட பேச்சுவார்த்தைக் குழு எதுவித அதிகாரங்களும் இல்லாத வெறும் வாக்குறுதிகளை மட்டுமே வாரி வழங்கிக் கொண்டிருந்தது, மறுபுறம் தமிழ், சிங்கள தலைவர்கள் எழுதிக் கொண்ட கடித வடிவிலான பேச்சுக்கள் என அது அமைந்தது என்கிறார். நேரடிப் பேச்சுக்கள் வெறுமனே சில மணி நேரங்கள் எனத் தொடர, சந்திரிகா தனது கடிதப் பேச்சுக்கள் மூலம் புலிகள் மீதான தனது நகர்வை மேற்கொண்டமையை திரு. பாலசிங்கம் கோடிட்டுக் காட்டியுள்ளார். புலிகளை தமக்கு சமனான தரப்பினராக கருத மறுத்து வெறும் ஆயுதக் குழுவாக நடாத்த முற்பட்டதும், இராணுவத் தேவைகளே பிரதானமானதாக இருந்தமையும் கடிதங்கள் மூலம் இந்நூல் நிரூபிக்கின்றது. சந்திரிகாவின் 24 மார்ச் 1995 திகதியிடப்பட்ட கடிதத்திற்கு 28 மார்ச் 1995இல் பதிலளித்த தமிழீழத் தேசியத் தலைவரவர்கள் மிகத்தெளிவாகவும் அழுத்தமாகவும் பதிலளித்துள்ளார். புலிகள் இயக்கம் தமிழர்களது தேசிய விடுதலை இயக்கம் என திரு.பிரபாகரன் அவர்கள் கூறினார். புலிகளுடன் பகைமை நிறுத்தம் செய்தமையும், ஆயுதங்களை கீழே போடாது பேசியமையும் தன்னால் தரப்பட்ட சலுகை என்ற சந்திரிகாவின் இனவாத ஆதிக்க மனோபாவத்தை தேசியத் தலைவரவர்கள் கடுமையாக விமர்சித்துள்ளார் என்பதை நூல் சுட்டிக் காட்டுகின்றது.

கால ஒழுங்கில் இரு தலைவர்களுக்குமான கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டு, சிங்களம் எவ்வாறு காய்களை நகர்த்தியது என்பதை திரு. பாலசிங்கம் அவர்கள் விளக்கியுள்ளார். சிங்களத்தின் கடிதங்கள் புத்திசாலித்தனமாக எழுதப்பட்ட பரப்புரை சாதனங்களும் கூட என்பதை அவர் விபரித்துள்ளார். சிங்களத்தின் ஏமாற்றுத்தனத்தை முடிவுக்குக் கொண்டு வரும் காலக்கெடுவைக்கூட தமிழீழத் தேசியத் தலைவர் எவ்வாறு பக்குவமாகவும், விட்டுக் கொடுப்புடனும் மேற்கொண்டதைச் சுட்டிக்காட்டி விளக்கும் இந்நூல் தமிழர்களின் நலன்களை அனைத்திலும் மேலாகக் கருதி கடுமையான முடிவுகளை தேசியத் தலைவரவர்கள் எவ்வாறு எடுத்தார் என்பது பற்றிய உள்ப்பக்கப் பார்வையைத் தருகின்றது.

ஐம்பதுகளில் தனது தந்தையார் பண்டாரநாயக்கா தமிழர்களின் அன்றைய தலைமையான தந்தை செல்வாவை ஏமாற்றியது போன்று தொண்ணூறுகளில் பிரபாகரனை ஏமாற்றலாம் என எண்ணி செயற்பட்ட சந்திரிகா தமிழர்கள் தமது வரலாற்று அனுபவங்கள் ஊடாகப் பலம் மிக்க அரசியல் தெளிவை பெற்றுள்ளமையை கருத்தில் எடுக்கவில்லை. மாறாக, தமக்கேயுரிய சிங்களப் பேரினவாத வீம்புடன் இராணுவத்தை தயார்ப்படுத்தும் வரை பேச்சுக்களை இழுத்து, ஈற்றில் அழித்துவிடலாம் என்ற கபடமே நிலவியது. ஆனால், பிரபாகரன் சந்திரிகாவின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்ப செயற்படத் தயாராகவில்லை. பேச்சுவார்த்தைகளை வெறும் நாடகமாக நடத்த முற்பட்ட சிங்களத்தை அனுமதிக்கத் தயாராகவில்லை. மக்களின் உடனடிப் பிரச்சனைகளை தீர்த்தல், நிரந்தர போர் நிறுத்தம் என்ற தெளிவான பாதையில் பேச்சுக்களை அவர் நடாத்த முயன்றுள்ளார். ஆனால், சிங்களம் உலகை ஏமாற்றியவாறு தனது நீண்டகால இலக்கான போர் மூலம் தமிழர்களது அரசியல் இலக்கைச் சிதைத்தல் என்ற இலக்கிற்கு தயாராகும்போது பிரபாகரன் தனது தலைமைத்துவத்தை தமிழர் வரலாற்றுக்கு வழங்கினார். தமிழர்களும், அவர்களது அரசியல் எதிர்காலமும் இதனால் பாதுகாக்கப்பட்டது என்பதனை திரு. பாலசிங்கம் அவர்கள் இந்நூல் மூலம் நிரூபித்துள்ளார்.

வரலாற்றைத் திரிக்க முயலும் சிங்கள சக்திகளுக்கும், அதற்கு துணைநிற்கும் பிற்போக்காளர்களுக்கும் பாலசிங்கம் அவர்கள் இந்நூல் மூலம் ஆணித்தரமாகப் பதிலளித்துள்ளார். மேலும் தமிழீழ - சிறீலங்கா முரண்பாட்டைக் கையாள விரும்பும் மத்தியத்துவத் தரப்பினருக்கும் இந்நூல் ஒரு வரலாற்று - அரசியல் பாடமாகும்.

சந்திரிகாவின் போலித்தனத்திற்கான அரசியல் முடிவுக்குவரும் காலகட்டத்தில் உண்மை உலாவரத் தொடங்கியுள்ளது!

# பாசறை

பாசறை அழைக்கிறது  
தம்பி நீ பார்த்தாயா?  
அன்னியநாட்டிடம் அடம்பிடித்து  
பெற்றதுடன் தீர்ப்பேனென்று  
ஆயிரத்தெட்டு வாக்குறுதியளித்து  
வாங்கி வந்த கழுகுகள் கூட்டம்  
தினமுமெங்கள் வான்பரப்பில்  
பறப்பதை  
தம்பி நீ பார்த்தாயா?  
இதிலிருந்து நீ  
புரிந்திட்டதுதானென்ன?  
பள்ளமடு தாண்டி வெள்ளமாக  
உணவுலொறிகள் வருமென்றா?  
அதுவும் அன்றி  
பள்ளிச் சீருடைகள் பாடநூலும்  
போதியளவு மருந்துப்பொருட்களும்  
வான்வழியாக வந்து  
சேருமென்றோ?

சத்தியமாக இல்லையடா தம்பி!  
விரைவிலுந்தன் தலையிலும்  
குண்டதை  
வீசிடத்தான் முன்னறிவிப்புச்  
செய்கின்றார்.  
என்னதான் செய்யப்போகின்றாய்.  
பேச்சுக்கு இடமில்லை  
யுத்தமே முற்றென்று  
அம்மையாரும் அடித்துச்  
சொல்லிவிட்டார்.  
தக்கபதில் கொடுக்க இதுதான் தக்க  
நேரம்  
தேசம் மீட்கும் பணி உனையும்  
அழைக்கிறது.  
தலைவன், அவன் படைகள் தயார்  
புலியாகி களமாடத் திடம்கொண்டு  
விரைந்து வா தம்பி பாசறைக்கு.



-மிருசுவிலூரான்-

# அழைக்கிறது



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









# தேர்தல் காலக்கூக்குரலாக "சமாதானம்"

— வேலவன் —

சூடுபிடித்துள்ள சிறீலங்காவின் தேர்தல் களத்தில் சமாதானம் என்ற வார்த்தையை உச்சரிக்காதோரே இல்லை. ஏனெனில் 'சமாதானத்தை ஏற்படுத்துதல்' என்ற வாக்குறுதி தேர்தல் சந்தையில் விற்பனையாகக்கூடிய முக்கியமான பொருள் என்பது சகல கட்சிகளும் புரிந்து கொண்ட விடயமாகிவிட்டது. மறுவளமாக இதிலிருந்தே சமாதானம் என்பது எவ்வளவு துாரத்திற்குச் சிறீலங்காவில் பங்கப்பட்டுப் போயுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

ஆனால் சமாதானம் என்ற பக்கத்திற்கு தென்னிலங்கைக் கட்சிகள் கொடுக்கின்ற வியாக்கியானங்களும், அவர்களது செயற்பாடுகளும் "சமாதானம்" அவர்களுக்கு கிட்டப்போவதில்லை என்பதை வெளிப்படுத்துவதையும் எவருமே புரிந்து கொள்ளமுடியும்.

அதேவேளை 'நாடு' எப்பொழுது சமாதானத்தை இழந்ததோ, அந்தச் சமாதானத்தைப் போக்கடித்தவர்களே அதிகம் அது பற்றிப் பேசிவந்திருக்கின்றார்கள். அந்தச் சமாதானத்திற்கு, காலத்திற்குக் காலம் வெவ்வேறு வியாக்கியானங்களையும் வழங்கி வந்திருக்கிறார்கள்.

1977 பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று ஐந்தில் நான்கு பங்கு பெரும்பான்மையுடன் 12 ஆண்டுகள் ஆட்சி புரிந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சாந்தி, சமாதானம், தர்மிஸ்டம் பற்றி பேசாத நாளில்லை. ஆனால் தமிழ் மக்களைப் பார்த்து "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என அறைகூவல் விடுத்தார். அவருக்கும் மேலாக ஜனாதிபதி பிரேமதாஸா காந்தியம் பற்றியும் காந்தி பற்றியும் பேசிக் கொண்டு வடக்கு கிழக்கில் மட்டுமல்ல தெற்கிலும் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓட வழிவகுத்தார்.

இன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் தந்தையார் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா காலிமுகத்திடலில் அமைதி வழிப் போராட்டம் (அதாவது சமாதான முறையில் போராடிய) தமிழ்த் தலைவர்களை குண்டர்களை ஏவிவிட்டு தாக்கியது மட்டுமல்லாது, "அவர்கள் கேட்டது கொடுக்கப்பட்டது." எனப் பாராளுமன்றத்தில் இறுமாப்புடன் பேசினார்.

இவர்கள் எல்லோரையும்விட சமாதானம் பற்றி அதிகம் பேசியவர்/ பேசிவருபவர் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா. இனப் பிரச்சனைக்குச் சமாதானத் தீர்வு காண்பது அவரின் 1994ஆண்டு தேர்தல் வாக்குறுதிகளில் முதன்மையானதாகும்.

இந்தச் சமாதானக் கூக்குரலை இன்னும் அவர் கைவிடாத போதிலும் கடந்த ஆறு ஆண்டு காலத்தில் சமாதானத்திற்கு அவர் கொடுத்த வியாக்கியானங்கள் பல. இவற்றிலே "சமாதானத்திற்கான யுத்தம்" என்பது இவரால் முன்வைக்கப்பட்ட ஒரு கோட்பாடு. சமாதானமும் யுத்தமும் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரணானது மட்டுமல்ல அவ்வாறான சமாதானம் ஒரு தரப்பின் அல்லது இரு தரப்பினதும் அழிவில்தான் முடியும். என்பது அவருக்குத் தெரியாததல்ல. ஆனால் இதற்காக அவர் நடத்திய யுத்தம் சமாதானத்தை வெகு தொலைவுக்கு விரட்டியது. மட்டுமல்லாது தமிழ் மக்களை சொல்லொணாத் துன்பங்களுக்கும் ஆளாக்கியது. இதேவேளை சமாதானத்தின் பெயரால் அவர் நடத்திய யுத்தம் சிறீலங்காவின் முப்படைகளின் பலத்தையும், பெரும் சிதைவுக்கு உள்ளாக்கியதுடன் பொருளாதாரத்தை அதலபாதாளத்திற்குத் தள்ளியுள்ளது. சிறீலங்காவின் விமானப்படை, கடற்படை, தரைப்படை என்பன மட்டுமல்ல சிறீலங்காவே மீள முடியாத ஒரு யுத்த சகதிக்குள் சிக்க வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்போதும் அவர் சமாதானம் குறித்தே பேசி வருகின்றார். அதாவது சமாதானம் ஏற்படுத்த யுத்தம் ஒன்றே வழி என்று முடிவு செய்து யுத்தத்தை தீவிரப்படுத்திய சந்திரிகா அம்மையார் இன்று யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர அதாவது சமாதானம் ஏற்பட தான் கொண்டு வந்திருக்கும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அமுல்ப்படுத்துவதே ஒரேவழி என்று முழங்கி வருகின்றார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









மக்கள் கடந்த முறை வழங்கிய அதிகாரத்தைப் பயன்படுத்தி பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தத் தவறிய அவர் இப்போது அதிகாரத்தை மீண்டும் வழங்கினால் சமாதானத்தை ஏற்படுத்திவிட்டு வீட்டுக்குப் போய்விடுவேன் என்று கூறுகின்றார். ஆனால் சமாதானத்தை ஏற்படுத்த என்று வைத்திருக்கும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்னும் திருத்தமானது சமாதானத்தை எவ்வாறு ஏற்படுத்தும் என்பதுதான் எவருக்குமே புரியாத புதிராக உள்ளது.

இதேவேளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி யுத்தத்தில் சந்திரிகா சந்தித்து நிற்கும் தோல்வியைச் சாதகமாக்கி, சந்திரிகாவிற்கு யுத்தத்தைச் சரியாக நடத்தத் தெரியாது என மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ய முனைந்து நிற்கின்றது.

"சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துவது" என்கிறது ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்.

பிரேமதாஸாவின் ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்திலிருந்து சிங்களப் பிரதிநிதிகளும் தமிழ்ப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்வோரும் பலமுறை கூடிக்கலந்து இவ்வாறான ஒரு இணக்கப்பாட்டைக் காண முயற்சி செய்தமை வரலாறாகும். சர்வகட்சி மாநாடு என்ற பெயரில் யுத்தத்தை நியாயப்படுத்த அவர் நடத்திய நாடகம், தமிழ் மக்களுக்கு எவற்றை வழங்கலாம் என முடிவு எடுக்கவில்லை, மாறாக எவற்றை வழங்கக்கூடாது என்ற முடிவையே அதனால் எடுக்க முடிந்தது.

இதற்கு முன்னரும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆட்சிக்காலத்தில் வட்டமேசையில் அமர்ந்திருந்து பேசியவர்களாலும் எதுவித முடிவுக்கும் வரமுடியவில்லை.

பின்னர் சந்திரிகா அம்மையாரின் கடந்த ஆறு வருடகாலத்தில் சுமார் ஐந்து வருடகாலம் ஓர் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்குப் பல பேச்சுவார்த்தைகளை ஐ.தே.க கூறும் தரப்புகளில் பெரும்பான்மையானவை மேற்கொண்டன. இன்னமும் அவற்றுக்குள் இணக்கப்பாடு எதனையும் காணமுடியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி கூறும் சகல தரப்புக்களிலும் முக்கியமான தரப்பு பௌத்த மகாசங்கமும் சிங்கள மகாசபையுமாகும். இவை இலங்கை பௌத்த சிங்கள நாடு இதில் பெரும்பான்மை சிறுபான்மை என்று ஒன்றுமில்லை. சிறுபான்மை என்று கூறிக் கொள்வோருக்கு இந்த நாட்டில் உயிர் வாழவே உரிமையில்லை என்று மகாவம்ச சிந்தனையிலிருந்து சிறிதும் மாறுபடாதவை.

1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்தபோது பிரிட்டிஷ் ஆட்சியாளர் பௌத்த சாசனத்தைப் பாதுகாக்கும் உறுதி மொழியை வழங்கவில்லை. சுதந்திர தினத்தன்று பௌத்தக் கொடியை ஏற்றவில்லை எனக் கூறி முதலாவது சுதந்திர தின வைபவத்தையே புறக்கணித்தவை.

இப்போது சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தும் பேசி வருபவை. யுத்தத்தைச் சரிவர நடத்தினால் அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஏன்? பேச்சுவார்த்தை ஏன் எனக் கேள்வி எழுப்புபவை.

இவ்வாறான அதிதீவிர சக்திகளின் இணக்கப்பாட்டுடன் எவ்வாறான ஓர் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை ஐ.தே.கட்சி கொண்டுவரப் போகின்றது? அது எவ்வாறு இனப்பிரச்சனைக்குத் தீர்வு கண்டு சமாதானத்தை ஏற்படுத்தப் போகின்றது என்ற கேள்விகளுக்குப் பதில்கள் தமிழ் மக்களைப் பொறுத்த வரை தெரியாததொன்றல்ல.

சிறீலங்காவின் அரசியலில் மூன்றாவது சக்தியாக இருப்பதாக மார்தட்டிக் கொள்ளும் ஜே.வி.பியும் தனது பங்கிற்கு சமாதானம் பற்றியே பேசுகின்றது.

அதாவது "மக்கள் விடுதலை முன்னணி" (ஜே.வி.பி) சிவப்புச் சட்டை அணிந்து கொண்ட தீவிர பௌத்த சிங்களப் பேரினவாதக் கட்சி. எனவேதான் இவர்கள் தமிழ் மக்களுக்குக் கிள்ளித் தெளித்தாலும் முண்டியடித்துக் கொண்டு எதிர்ப்பதில் முன்னணியில் நிற்கின்றனர் என்பது தமிழ் ஊடகங்கள் தொடர்ச்சியாக ஜே.வி.பி மீது அள்ளி வீசும் அவதூறாகும்" என அது ஆதங்கப்படுகிறது. அதே வேளை மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்பார்ப்பு சமத்துவம் நிறைந்த நாடு சிங்கள முஸ்லீம் மக்கள் ஐக்கியப்பட்ட நாடு. நீதியான தேசம் நியாயமான சமுதாயம். அடிமையில்லாத மனிதன் என்று கொள்கை விளக்கம் கொடுத்திருக்கிறது.

எல்லாமே நன்றாகத்தான் இருக்கின்றது. ஆனால் தேர்தல் விஞ்ஞாபனத்தையே பௌத்த மகாசங்கத்திடம் கொடுத்து அவர்களின் அங்கீகாரத்தையும் ஆதரவையும் பெற முயலும் ஜே.வி.பி இந்தக் கோசங்களையெல்லாம் எப்படி நிறைவேற்றப் போகின்றது என்பது குறித்து சிந்திக்காமல் இருக்க முடியாது.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக இப்போது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ள சிஹல உறுமய எனும் கட்சி "யாழ்குடாநாட்டில் சிங்களவர்க்கு உரிமை இருப்பதை உறுதிப்படுத்துவதற்காகவே தமது கட்சி அங்கு போட்டியிடுவதாக" கூறுகின்ற அதே வேளை தாங்கள் யுத்தத்தை விரும்புவர்கள் அல்ல என்றும் சமாதானத்தையே விரும்புவதாகவும் கூறுகின்றனர்.

தமிழர் தாயகத்தில் தமது உரிமையை நிலைநாட்டத்துடிக்கும் இவ்வாறான சக்திகள்கூட சமாதானம் பற்றி பேசுவதுதான் மிகவும் கேலிக்குரிய விடயமாக இருக்கின்றது.

இவர்கள் மட்டுமல்ல சிறீலங்காவின் ஏனைய கட்சிகளும்கூடத் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துவிடும் கொள்கையை கொண்டவை என்பதில் சந்தேகம் இல்லை. இந்நிலையில் இவற்றுக்கு சமாதானம் பற்றிப் பேச அருகதை கிடையாது .

இவற்றின் சமாதானக் கோஷங்கள் உண்மையில் தமிழரை ஏமாற்றப் பயன்படலாம். அதுவும் எத்தனை காலத்துக்கு என்றால் சிறீலங்காவிலிருந்து எதுவித பயனும் பெறமுடியாது என உலகம் உணரும் வரைதான்.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கைத் தமிழர் வரலாறு மி
# ஆரியர் வருகை என்பது அர்

கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் இலங்கையின் புகழ்பெற்ற தொல்லியல் ஆய்வாளரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியருமாவார். இவர் 1968ஆம் ஆண்டு தனது கலாநிதிப் பட்டத்திற்காக எழுதிய ஆய்வுக் கட்டுரையில் 13ஆம் நூற்றாண்டிற்கு முன்பு தமிழர்களை இலங்கையில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் இல்லை என நிறுவியிருந்தார். இவ் ஆய்வுக் கட்டுரை பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. அன்றிலிருந்து இன்றுவரை சிங்களப் பேரினவாதிகள், தமிழர்களை வந்தேறு குடிகளாகச் சித்தரிப்பதற்கு இவரது ஆய்வினை நன்கு பயன்படுத்தினார்கள். மறுபக்கத்தில் தமிழரசுக் கட்சியினர், சுதந்திரன் பத்திரிகை என்பன இந்திரபாலாவை தமிழனின் துரோகி என வர்ணித்தனர். 1968ஆம் ஆண்டளவில் கிடைத்த தொல்லியல் சான்றாதாரங்களை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து பார்க்குமிடத்தில் கலாநிதி இந்திரபாலா அவர்கள் மேற்படி முடிவை எடுத்தது தவிர்க்க முடியாததாக இருந்ததை உணரக்கூடியதாக உள்ளது. அதன் பின்பே, கந்தரோடை, ஆனைக்கோட்டை, நாகர்கோவில், பொம்பரிப்பு, பெரியபுளியங்குளம் போன்ற பல இடங்களில் புதைபொருள் ஆய்வு செய்த போதும் பூநகரி, முத்தையன்கட்டு ஆகிய இடங்களில் மேலாய்வு செய்தபோதும் கிடைத்த சான்றாதாரங்கள் இலங்கைத்தீவின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதை நிரூபித்தன. அத்துடன் விஜயனின் வருகை என்பது கட்டுக்கதையானது. இதன் பின்பு கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் எழுதிய பல கட்டுரைகளில் வரலாற்று உண்மையைப் பிரதிபலித்தார். தற்போது கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் தனது 1968ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரையை இனி மேல் யாரும் பயன்படுத்தாவண்ணம் தடை செய்துள்ளார். மேலும் கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் "இலங்கையில் திராவிடக் கட்டடக்கலை" என்ற நூலின் திருத்திய இரண்டாம் பதிப்பிற்கு கடந்த வருடம் அவர் எழுதிய முன்னுரையில் இலங்கையின் பூர்வீகக் குடிமக்கள் யார் என்ற சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.



மோகினித் தெய்வச் சிற்பம் கி.பி 3ஆம் நூற்றாண்டு

இதனையே உண்மையானதும் இறுதியானதுமாகக் கருதலாம். இம் முன்னுரையில் அவர் "சிங்கள மக்களின் உருவாக்கத்திற்கு தமிழர் உட்பட பல இனங்கள் பங்களிப்பு செய்துள்ளன" என்றும் "சிங்கள மொழியின் உருவாக்கத்திற்கு தமிழும் பிற திராவிட மொழிகளும் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்துள்ளன" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் "ஆரியர் வருகை அவர்கள் குடியேற்றம் சிங்கள மக்கள் வருகை அவர்கள் குடியேற்றம் என்ற கருத்துக்கள் அர்த்தமற்றவையாகின்றன" என்று மேலும் அவர் கூறுகிறார். அவர் எழுதிய முன்னுரையின் சில பகுதிகளை கீழே தருகிறேம்.

இலங்கைத் தமிழர் வரலாறு, வேறு வெளிநாட்டுத் தமிழர் வரலாற்றிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது என்பதை தமிழ்நாட்டார் பலர் அறிந்திலர். மலேஷியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழரைப் போன்றே இலங்கைத் தமிழரும் அண்மைக் காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியின்போது சென்று குடியேறியவர்கள் என்று பலர் கருதுவர். ஆனால் இலங்கைத் தமிழர் வரலாறு ஒரு மிகநீண்ட கால வரலாறாகும்.

இலங்கைத் தமிழருக்கும் (குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழருக்கும்) தமிழ்நாட்டுத்



சோழர்காலப் பொலந்


தமிழருக்கும் இடையில் மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள், உணவு ஆகியவற்றை பொறுத்து பல வேறுபாடுகள் இன்று இருப்பதற்குக் காரணம் இலங்கைத் தமிழர் நீண்டகாலமாகத் தமிழ்நாட்டுத் தமிழருடன் பொதுத்தொடர்புகள் இல்லாது பிரிந்து வாழ்ந்து வந்தமை ஆகும். காலத்துக்குக் காலம் தமிழ்நாட்டின் பண்பாட்டு செல்வாக்கு இலங்கையிலும் பரவித் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும், இரு பிரதேசத்துத் தமிழ்ப் பொதுமக்களும் நெருங்கிய தொடர்பில்லாது அண்மைக்காலம் வரை வாழ்ந்து வந்தனர்.

கி. மு. மூன்றாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் வாழ்ந்த மக்கள்பற்றி அறிவதற்கு நமக்குக் கிடைக்கும் கல்வெட்டுக்களை ஆராய்ந்தால், பௌத்

www.tamilarangam.net

# நீண்டது த்தமற்றது!

தம் முக்கியமாக பரவத்தொடங்கியபோது பல சிற்றரசுகளும் அரசு நிலையடையாத ஆதிக்குழுக்களும் (Fribes) அந்நாட்டில் பரவலாக இருந்த நிலையை அறியலாம். பல இனங்கள் நாட்டில் பரந்து காணப் பட்டன என்பதையும் உணரலாம். இந்த இனங்களிடையே பலமொழிகள், பல்வேறு மத நம்பிக்கைகள், பண்பாடுகள் ஆகியவை



றுவைச் சிவனாலயம்

நிலவின எனலாம்.

கல்வெட்டுக்களிலும் பௌத்த நூல்களி லும் இந்த இனங்கள் சிலவற்றின் பெயர் கள் பேணப்பட்டுள்ளன. இவற்றுள் நாகர், கபோஜர் (காம்போஜர்) பரதர் போன்ற பெயர்கள் குறிப்பிடத்தக்கவை. இத்தகைய பல இனங்களுள் திராவிட மொழிகளைப் பேசும் இனங்களும் இருந்தன என்பதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன. கல்வெட்டுக் களிலும் பௌத்த நூல்களிலும் தமிழர் (பிராகிருதக் கல்வெட்டில் தமெடப் பாளி மொழிப் பௌத்த நூல்களில் தமிழ்) குறிப் பிடப்படுவதுடன் கல்வெட்டுக்களில் திரா விட மொழிகளைச் சார்ந்த சொற்களாகிய "மருமகன்" (மருமகன), "பெருமகள்" (பரு மக), "பெருமகன்" (பருமகளு) போன்ற சொற்கள் காணப்படுகின்றன.

அக்காலகட்டத்தில் சைவம், சமணம், பௌத்தம் வேறும் இயற்கை வழிபாடு ஆகியவை இலங்கையில் வாழ்ந்த மக்களு டைய மதங்களாகக் காணப்பட்டன. "சிவ" என்ற சிறப்புப்பெயர் மேற்கூறிய மூலாதாரங் களில் காணப்படுகின்றது. சில சிற்றரசர் கள்கூட "சிவ" என்ற பெயரைப் பெற்றிருந் தனர். இத்தகைய ஒரு சூழ்நிலையிலேதான் பௌத்தம் மேலோங்கிய மதமாகப் பரவி பல இனங்களை உள்ளடக்கி அவற்றுக்கு ஒரு பொது உயர்நிலை மொழியாகப் பௌத்த பிராகிருத மொழியைப் பயன் படுத்தி, இந்திய அரச மரபுகளைப் புகுத்தி, இலங்கை மக்களுடைய அரசியல் வளர்ச் சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் வழி வகுத்தது. இதன் விளைவாகப் பல இனங் களில் கலப்பு துரிதப்படுத்தப்பட்டது. பல மொழிகள் பிராகிருதமொழியால் இணைக் கப்பட்டு ஒரு புது மொழியாகச் சிங்கள மொழி உருவாகியது. அதனைப் பேசிய மக்களும் சிங்கள மக்களாக உருவாகினர். சிங்கள மக்களின் உருவாக்கத்துக்குத் தமிழர் உட்படப் பல இனங்கள் பங்களிப்பு செய்தன. தமிழர் பங்களிப்பு அன்று மட்டு மல்லாது தொடர்ச்சியாகத் தற்காலம் வரை ஏற்பட்டு வந்துள்ளது. அதேபோலச் சிங்கள மொழியின் உருவாக்கத்திற்குத் தமிழும் பிற திராவிட மொழிகளும் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்துள்ளன என்பதை மொழியிலாளர் ஒப்புக்கொள்வர்.

இத்தகைய பின்னணியில் இலங்கை வரலாற்றை நோக்கினால் ஆரியர் வருகை, அவர்கள் குடியேற்றம், சிங்கள மக்கள் வருகை அவர்கள் குடியேற்றம் என்ற கருத் துக்கள் அர்த்தமற்றவை ஆகின்றன.

வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து இலங்கையில் அரசியல், சமயம், மொழி, கலைகள் போன்ற பல்வேறு துறைகளில் தமிழர் பங்களிப்பு இடம்பெற்றுள்ளது. இவற் றுள் ஒரு முக்கியமான துறை கட்டடக்கலை யாகும். பொதுப்படத் தென்னிந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் வளர்ந்த கட்ட டக்கலையின் செல்வாக்கு கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பின்பாக, அதாவது பல்ல வப் பேரரசின் காலத்திலிருந்து, இலங்கை யில் பரவத் தொடங்கியது. (அதற்கு முன் பரவிய செல்வாக்குப் பற்றி அறியக்கூடிய வகையில் தமிழ்நாட்டில் பழைய கட்டடங் கள் பேணப்படவில்லை) படிப்படியாக இச் செல்வாக்கு கூடிக்கொண்டேபோய், பதினா றாம் நூற்றாண்டின் பின், அதாவது இலங்கை யில் கண்டி மன்னர் காலம் எனப்படும் காலப் பகுதியில், மேலோங்கி வளர்ந்து ஒரு வகை யில் தற்காலத்திலும் நிலைத்து நிற்கின்றது எனலாம். கண்டி மன்னர் காலத்தில் தென் னிந்தியக் கட்டடப்பாணியாகிய விஜயநகர நாயக்கர் கட்டடப்பாணி வளர்க்கப்பட்டது. தற்காலத்திலும் அதன் சாயலையுடைய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இலங்கை பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், அதாவது இருபதாம் நூற் றாண்டின் பிற்பாதியில் கண்டி, யாழ்ப்பாணம், அநுராதபுரம் ஆகிய இடங்களிலே கட்டப் பட்ட புதிய புகையிரத நிலையங்கள், அரச அலுவலகங்கள் ஆகியவையும், கொழும் பில் அமைக்கப்பட்ட சுதந்திர மண்டபமும் திராவிடர் கட்டடக் கலைப்பாணியிலமைந்த தூண்களையும் பிற அம்சங்களையும் உடை யனவாய்க் காணப்படுகின்றன.

முற்காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் வளர்ந்த கட்டடக்கலைக்கு நூலாக அமைந்த சிற்பசாஸ்த்திரங்களிலே திராவிடக் கட்டட முறை மூன்று வகைப் பட்ட கட்டட முறைகளுள் ஒன்றாகக் கூறப் பட்டுள்ளது. ஆனால் இந் நூல்களிலே திரா விடக் கட்டடமுறை என்பது பொதுவாகத் தென்னிந்தியாவில் வளர்ந்த கட்டடமுறை யையே குறிக்கும். இருபதாம் நூற்றாண் டின் ஆரம்பத்திலே பிரெஞ்சு ஆராய்ச்சியா ளராகிய ஷோவோ துப்றெய் (Jouveaa Lubreuil) என்பவர் தமிழ்நாட்டில் வளர்த்த பழைய கட்டடக்கலையை ஆராய்ந்து நூல் கள் எழுதியபோது "திராவிடக் கட்டடக் கலை" (Dravidian Architecture) என்ற பெய ரைத் தமிழ்நாட்டில் பல்லவர் காலத்தில் இருந்து வளர்ந்து விஜயநகரக் காலத்தில் கன்னடப் பிரதேசங்களிலும் பரவிய தமிழ்க் கட்டடக்கலையை குறிப்பதற்குப் பயன் படுத்தினார். இவருக்குப்பின் எழுதிய பல ஆராய்ச்சியாளர் இப்பொருளிலேதான் திரா விடக் கட்டடக்கலை என்பதை பயன்படுத் தியுள்ளனர். கிரேவ்லி( Gravely) போன்ற ஒரு சிலர் தமிழ்க் கட்டடக்கலை (Tamilian Architecture) என்ற பெயரைத் திராவிடக் கட்டடக்கலை என்பதற்குப் பதிலாகப் பயன் படுத்தியுள்ளனர்.



திராவிடப் பாரம்பரியத்தைச் சித்தரிக்கும் வாஹல்கடகல தூண்கள் கி.பி 2ஆம் நூற்றாண்டு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆலமரத்தடி அப்பு

அப்புவின் செல்லப்பிராணியான செவி வளைந்தான் அவரது காலடியில் சுருண்டு படுத்திருந்தது. அப்புவோ சுருட்டை இழுத்தபடி ஆழ்ந்த சிந்தனையில் மரத்தோடு சாய்ந்திருந்தார்.

நவமும் நண்பர்களும் இவர்கள் இருவருடைய மோன நிலையைப் பார்த்து வியந்தபடி அவர்களை நெருங்கினார்கள். காய்ந்து விழுந்திருந்த சருகுகளின் சத்தம் செவி வளைந்தானை உசுப்ப, அது திடுக்கிட்டு எழுந்து பார்த்தது. நவத்தைப் பார்த்ததும் அதற்கு சந்தோசம் தாங்க முடியவில்லைப் போலவும்... நீண்ட நாட்களின் பின் சந்தித்த காரணத்தாலே நவத்தை சுற்றிச் சுற்றிப் பாய்ந்து தனது வரவேற்பைத் தெரிவித்தது.

நவமும் நண்பர்களும் அப்புவை ஆர்வத்தோடு பார்த்தார்கள். அதில் பிரிந்தபின் கூடிய மகிழ்ச்சி தொனித்தது. அப்பு வெளிநாட்டுக்குப் போய் மூன்று மாதங்கள் தங்கிவிட்டு வந்தபிறகு, அவரை முதற்தடைவையாகச் சந்திக்கிறார்கள்.

"என்னப்பு போனவருசம் வெளிநாட்டுக்குப் போய் மகனோட கொழுவுப்பட்டுக் கொண்டு உடனை திரும்பி வந்தியள். இப்ப என்னவெண்டால் சொல்லாமல் கொள்ளாமல் போய் மூண்டு மாசம் நிண்டு போட்டு வந்திருக்கிறியள்" நவத்தின்ர குரலில் கேலி பொங்கி வழிந்தது.

"அவனடா மோனை ஆனையிறவு அடியோட திருந்திட்டான். தாய் மண்ணிலை மட்டுமில்லை.... தாய் தேப்பனிலையும் திடீரெண்டு எங்கை இருந்தோ பாசம் வந்து கொட்டோ கொட்டெண்டு கொட்டுது. அதுதான் ரெலிபோனிலை "வாணை அப்பு" எண்டு அழுதான். பிள்ளைப் பாசம் ஆரைவிட்டுது. அதுதான் வெளிக்கிட்டுப் போட்டன்"

"வெளிநாட்டுச் சனம் எப்படி இஞ்சை இருக்கிற சனத்தை நினைச்சுக் காசு குடுக்குதோ..." நவத்தின் நண்பன் குட்டி அப்புவின் ஆலாபனைகளை விட்டு விசயத்திற்கு வந்தான்.

"சும்மா சொல்லப்படாது. ஆனையிறவு அடிக்கு அள்ளி அள்ளிக் குடுத்தவை. இப்பவும் கொடுக்கினந்தான்"

"அப்பு எங்கையும் செமை அடிவிழுந்தாத்தான் அங்கையும் துட்டு விழும்போல" குட்டி தொடர்ந்து கேட்டான்.

"அப்பிடி இல்லையடாம்பி... தெரியாதே... எங்கட சனம் எப்பவாதும் புது உடுப்பு வாங்குவினம். அதுமாதிரித்தான்.. இதுவும். ஆமிக்காரன் அடிவாங்கினா எங்கட சனத்துக்கு அப்பிடியொரு புளுகம். அதுகள் பட்டதெல்லாம் நினைப்பிலை வந்திருக்கும்... உடனே அள்ளிக் குடுக்குதுகள்" என்றார் அப்பு

"என்னப்பு... இந்த யாழ்ப்பாணம் விழப்போகுது... பலாலி விழப்போகுது எண்டு எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தம். இப்ப என்னடாவெண்டால் எல்லாம் மாறி நடக்குது. அவங்களெல்லோ அடிக்கத் தொடங்கிட்டாங்கள்"

அப்புவின் முகம் சடாரெனக் கோபமாயிற்று. தோளில் கிடந்த துவாயை ஒரு உதறு உதறி மீண்டும் போட்டுக்கொண்டார்.

"யாழ்ப்பாணமும் பலாலியும் என்ன மரத்திலையா கட்டித் தொங்கவிட்டிருக்கு. தடியால அடிச்சு விழுத்த" அப்பு உணர்ச்சிவசப்பட்டவராக பாய்ந்தார்.

"நான் அடிக்கடி சொல்லுற ஒண்டை உனக்கிப்ப ஞாபகப்படுத்திறன்... தம்பி ஆழக்கால் ஊண்டுவானேயொழிய அகலக்கால் வைக்கமாட்டான் விளங்கிச்சுதோ.... எங்கட போராளிகள் சிறீலங்கன் ஆமிக்கெதிரா மட்டும் சண்டை பிடிக்கேல்லை கண்டியோ... பல வல்லரசு நாடுகளின்ரை நவீன ஆயுதங்கள், சண்டைப் பயிற்சிகளுக்கும் அவையள் முகம் கொடுக்க வேண்டியிருக்கு"

அப்புவின் முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்தன. இடுப்பில் சொருகியிருந்த சுருட்டுக்களில் ஒன்றை எடுத்து பத்தவைத்து ஆழமாக இழுத்தார்.

"இவ்வளவு நாடுகளின்ர ஆயுதங்கள், யுக்திகளுக்கெதிராக சண்டைபிடிக்கிற தெண்டா சும்மாவே, அவதானமா எதிரியின்ரை யுக்திகளை அறிஞ்சு கண்டுபிடிச்சு, அறியமுடியாததை ஆராய்ஞ்சு கண்டுபிடிச்சு, குறிப்பெடுத்து அதுகளுக்கெதிராக புதிய உத்திகளை கண்டுபிடிச்சு சண்டைபிடிக்க வேணும்... என்பதெல்லாம் எங்கட தலைவருக்குத் தெரியுமடாம்பி... அதோட எதிரி புதுசா கொண்டுவந்து குவிச்சிருக்கிற ஆயுதங்களை எப்படி பயன்படுத்திறான். அது ஏற்படுத்திற தாக்கங்கள் என்னென்ன எண்டதைச் சண்டைக் களத்திலைதான் அறியேலும்.... தம்பி அதுக்குத் தோதான ஒரு வாய்ப்பைத்தான் பார்த்துக் கொண்டிருந்தவன். எலெக்சனுக்குத் துண்டை விரிக்க முதல் மாமாவும் மருமகளும் தங்கடை தலையிலை துண்டைப் போட வருவினம் என்பது தம்பிக்குத் தெரியும். அப்ப ட்ரையல் பார்த்து அவையின்ர பலம் பலவீனம் எல்லாம் அறிஞ்சுபோட்டு திருப்பிக் கொடுக்கலாம் எண்டதுதான் தம்பியின்ர திட்டம்"

நவத்திற்கு அது ஏனோ பொறுக்கவில்லை.

"ஏனப்பு அதை எங்கடையாக்கள் முதல் தொடக்கியிருக்கலாம்தானே?"

"ஏனடா அவசரப்படுறாய் இவ்வளவு ஆயுதங்கள் இருக்கேக்க அதின்ர பலம், பலவீனம் அறியாமல் சுவரில போய் மோதிற மாதிரி மோதமுடியுமே. அவங்களைப் போல ஆழமறியாமல் காலைவிடச் சொல்லுறியே... இப்ப நாலு முறை வெளிக்கிட்டதாலை அவையின்ற பக்கம் எப்பிடியிருக்கெண்டதை அறிஞ்சுகொள்ள முடிஞ்சுது. இனி கொஞ்சக் காலம் எடுத்து அவையின்ரை பலத்துக்கேத்த மாதிரி வியூகங்களை வகுத்துத்தான் விழுத்தவேணுமடாம்பி." அப்பு சொன்னார்.

மீளவும் அப்புவின் பக்கம் திரும்பினான் நவம். "அப்ப அப்பு சிறீலங்கா ஆமியின்ரை நவீன ஆயுதங்கள் எல்லாம் இனி எங்கடை பொடியளுக்குத்தான் எண்டு சொல்லுறியள்"

அப்பு அவனுடைய குதூகலத்தை உடைப்பதுபோல சற்றுக் கோபமாகக் கூறினார். "இப்படி நீங்களெல்லாம் பொடியள் எப்ப யாழ்ப்பாணம் அடிப்பாங்கள் எப்ப பலாலி அடிப்பாங்கள்... ஆமியின்ரை ஆயுதத்தை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "எல்லோரும் கைகொடுத்தா களநிலவரம் சாதகந்தான்"

எப்ப அள்ளுவாங்கள் எண்டு புளுகத்திலை இருந்தா மட்டும் காணாது... அப்பிடி அடிக்கவும் அள்ளவும் நீங்கள்தான் அள்ளிக் குடுக்கவேணும். வெறுங்கை முழம் போடா தடாம்பி"

"அப்ப சனங்கள் எல்லாம் ஆனையிறவு மாதிரி பெரிய முகாம் அடிச்சாத்தான் அள்ளிக் குடுக்குதுகள் இல்லாட்டில்... கொஞ்சம் சுணக்கந்தான்" நவம் கூறினான்.

"நல்லாச் சொன்னாயடா நவம்! இப்பதான் உனக்கும் கொஞ்சம் விசயங்கள் வெளிக்குது. நாங்கள் அவங்கள் அடிக்கட்டும் நாங்கள் குடுப்பம் எண்டு காத்துக் கொண்டிருக்காமல் நாங்கள் இப்பவே உதவி செய்தாத்தான் எதிரியிட்டை இருக்கிறதுக்கு ஈடான ஆயுதங்களை வாங்கி அவங்களை விழுத்தலாம். வெற்றி வந்தாப் பிறகு மகிழ்ந்தா மட்டும் போதாது. வெற்றியடைய வழிவகையளையும் செய்யிற கடமை சனத்துக்கு இருக்குது"

"உண்மைதானப்பு... இப்ப நடந்த ரிவிகிரண முறியடிப்புச் சண்டையிலையும் நூற்றுக்கும் மேலை போராளியள் வீரச்சாவடைஞ்சு போட்டினம். நாங்கள் எல்லாரும் "புலிகள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு படையெடுப்பினம்" எண்டு பாடிக்கொண்டிருந்தா மட்டும் போதாது... படையெடுக்கிறதுக்கான உதவிகளைச் செய்யவேணும் எண்டு சொல்லுறியள்"

"ஓமடாம்பி..பாட்டுக்கேட்டுப் பரவசப்படுறது மட்டும் ஒரு தமிழன்ரை கடமையில்லை "

"ஓமப்பு... இது எங்களுக்கெல்லாம் வரலாற்றுக் கடமை. அது சரி அப்பு... போனகிழமை நாலுதரம் ஆமி ஆரவாரத்தோடை வெளிக்கிட்டது... ஏனப்பு அப்பிடி அவசரப்பட்டவை... வந்த புது ஆயுதங்கள் எப்பிடி நல்லா வேலை செய்யுதோ எண்டு புலியளிட்டைக் குடுத்துப் பரீட்சித்துப் பாக்கவோ?"

"அட பெடியா! நிலவரம் உனக்குத் தெரியாதே... இப்ப எலெக்சன் வருகுதெல்லோ... அந்த எலெக்சனிலை வெண்டு மிச்ச மீதி இருக்கிற தமிழரை வெட்டிச் சாய்க்க வேணுமெல்லே... அதுக்காக சனத்தின்ரை வாக்குவேட்டைக்கு அவ வெளிக்கிட முதல் தமிழரை ஒருக்கா வேட்டையாடிப் போட்டு வெற்றியோடை போனா சனம் நல்லா ஓட்டுப்போட்டு இவவைப் பழையபடி சங்காரம் பண்ணச் சொல்லிக் கதிரையிலை இருத்துங்கள்ளெல்லோ... வெற்றியைக் காட்டி அந்தப் பிக்குகளையும் மக்குகளையும் பேய்க் காட்டலாம் எண்டு ஒரு பிளான்தான். அதைவிட அம்மாவுக்கு இன்னொரு பயம். அதாவது, எங்கடை ஆக்கள் அரியாலை, கொழும்புத்துறைப் பக்கம் நிக்கிறதாலை எந்த நிமிடம் யாழ்ப்பாணம் பறிபோகுமோ எண்டொரு ஏக்கம் அவவுக்கு இருக்கு. அதாலை கொழும்புத்துறையிலை இருக்கிற எங்கடை ஆக்களின்ரை சென்றியை, செம்மணியும் கைதடி தாண்டி பின்னுக்குத் தள்ளிற பிளான். செம்மணியையும் பிடிச்சா கோப்பாய் பக்கமான எங்கடையாக்களின்ரை முன்னேற்றத்தையும் தடுக்கலாம் கண்டியோ"

"பெரிய பிளான்தான். அது சரி... மட்டுவில் சரசாலைப் பக்கமும் தாக்கினவை தானே"

"கொழும்புத்துறைதான் அவங்கடை இலக்காய் இருந்தாலும் எல்லாப் பக்கத்தாலையும் தாங்கள் வெளிக்கிடுகினமாம். எண்டொரு படம் காட்டி உச்ச நினைச்சிருக்கலாம். அல்லது பொடியள் தென்மராட்சி முழுவதையும் எலக்சனுக்கு முதல் கைப்பற்றிப் போட்டினமெண்டா பெரிய வெக்கக் கேடாயெல்லே போயிடும். அதாலை அவையள் தாக்கத் தொடங்க முதல் தாங்கள் வெளிக்கிட்டுப் பயப்பிடுத்தலாம் எண்டும் நினைச்சிருக்கலாம். ஆனா... பாவங்கள்...! இதுகள் என்ன யோசிக்குதுகள் எண்டு எங்கடை ஆக்களுக்குத் தெரியாதே என்ன... வலிய வந்து அடிவாங்கிக்கொண்டு போயிருக்கினம். மட்டுவில்-சரசாலைப் பகுதியிலை ஆமிக்குப் பெரும் இழப்பாம்" கிழவர் உற்சாக மிகுதியால் சுருட்டை ஆழமாக ஒரு இழுவை இழுத்தார்.

"கேக்க நல்லாத்தான் இருக்கு. ஆனால் எலெக்சனுக்கு முதல் எதாவது பெரிய அடி நடக்குமாப்பு?" குட்டி ஆர்வம் பொங்கக் கேட்டான்.

"எலெக்சனுக்கு முதல் தங்கடை பராக்கிரமத்தை எப்பிடியாவது காட்டிப் போடவேணும் எண்டு அரசாங்கம் திரும்பத் திரும்ப முயற்சி செய்யும். அப்பிடி முயற்சி செய்ய வெளிக்கிட்டா... அந்தச் சண்டையள் கொஞ்சம் மூர்க்கமாத்தான் இருக்கும். அதுவும் இவ சந்திரிகாவும், ரத்வத்தயாரும் இப்ப படைத்தரப்பிலை கொஞ்சம் கொதிப்பிலை இருக்கிறபடியா... அதைக் குளிரப் பண்ண அவையும் கொஞ்சம் நிண்டு அடிபடப் பாப்பினம். ஆனா என்ன அடிபட்டென்ன எங்கடை பிள்ளைகளின்ரை மன ஓர்மத்துக்குக் கிட்ட வருமோ அவையின்ரை பாய்ச்சல். நிலைமை என்ன மாதிரி எண்டு பாத்து சண்டையை நடத்திப் போறதிலை எங்கடை தம்பியை மிஞ்ச ஆளிருக்கே" கிழவர் பெருமிதத்தோடு பொக்கை வாயைத் திறந்து சிரித்தார்.

"ஓமப்பு... தலைவரை நினைக்கேக்குள்ளை, அவற்றை வீரத்தையும், விவேகத்தையும் நினைக்கேக்குள்ளை அவர் எங்களுக்குக் கிடைச்ச வரம் எண்டுதான் நான் எனக்குள்ளை நினைச்சுக் கொள்ளுவன்" நவம் உணர்ச்சிப் பெருக்கோடு கூறினான்.

"ஓமடாம்பி... இப்பிடி சந்தோசத்திலை கண் கலங்கினா மட்டும் போதாதடா... நாங்கள் ஒற்றுமைப்பட்டு அவருக்குப் பின்னாலை அணிதிரளவேணும். வெளிநாட்டிலை வாழுற எங்கடை சனங்களுக்கு போர்க்களத்திலை எங்கடை ஆக்களின்ரை கையளை வலுப்படுத்திற பாரிய பொறுப்பு இருக்கு. சிறீலங்கா ஆமி இந்தா வெட்டிச் சரிக்கிறன் எண்டு வெளிக்கிட முன்னம் நாங்கள் ஆயத்தமாகவேணும். எல்லாருஞ் சேர்ந்து தம்பிக்குக் கை கொடுத்தா கள நிலவரம் எங்களுக்குச் சாதகந்தான்" அப்பு கூறிக்கொண்டே எழுந்தார். "என்னப்பு வெளிநாட்டுப் புதினம் ஒண்டுஞ் சொல்லாமப் போறியள்"... நவமும் நண்பர்களும் ஒரே குரலில் கேட்டார்கள்.

"கள நிலவரம் நல்லா இருந்தா... வெளிநாடுகளிலை வாழுற எல்லாத் தமிழற்றை நிலவரமும் நல்லாத்தான் இருக்கும். கள நிலவரமும் நல்லாயிருக்க வேணும் எண்டால் வெளிநாடுவாழ் தமிழர்கள் எல்லாரும் கைகொடுக்க வேணும்" அப்பு வானத்தைப் பார்த்தபடி கூறினார்.

"மழை வரும்போலை கிடக்கு. கெதியா நடவுங்கோ" நவம் துரிதப்படுத்தினான்.

செவி வளைந்தானுக்கும் அவன் கூறியது புரிந்திருக்கவேண்டும். அப்புவிற்கு முன்னே ஓட்டமாய் ஓடிற்று.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# ஊர் எதிரியிடம்! உறவுகள் எங்கெங்கோ!

"தம்பி உவனுக்கு துவக்கு வேணுமாம். இஞ்சவந்த நாள் தொடக்கம் ஒரே ஆக்கினை" அந்தத் தாயின் குரல் எம்மைத் திருப்பியது. "அம்மா, துவக்கு வேண்டித்தா" மூன்று வயதான சிறுவன் அடம்பிடித்துக் கொண்டிருந்தான்.

உக்கிய தென்னம் கிடுகால் வேயப்பட்ட கூரையின் மேல் நீலநிற தறுப்பாள் விரிக்கப்பட்ட பாடசாலையின் மண்டபத்தினுள் அந்தக் குடும்பம் இருந்தது. இன்னும் பலரது குடும்பங்களைப் போல.

சேலைகளாலும், படுக்கை விரிப்புக்களாலும் சுற்றி அடைக்கப்பட்டிருந்த பத்தடி வீட்டிற்குள் - இல்லை கூட்டுக்குள் தந்தை மரவள்ளிக்கிழங்கு உரித்துக் கொண்டிருந்தார். மூலையில் ஒரு அடுப்பில் சிறிய பானையில் தண்ணீர் கொதித்துக்கொண்டிருந்தது. தலைக்குமேல் தொங்கிய கொடியில் உலர்ந்த ஆடைகளும், இன்னுமொரு மூலையில் கிடந்த உடமைகளும் அந்த அறைதான் அவர்களிற்கு எல்லாமே என்பதை சொல்லாமற் சொல்லின.

"தம்பிக்கு என்ன பெயர்"

திடீரென எழுந்த வினாவால் பயந்துவிட்ட சிறுவன் மெல்லச் சொன்னான்.

"விஜயரூபன்"

"பிள்ளைக்குத் துவக்கு வேணுமோ?" துவக்கு பற்றிய வினா அவனை நிமிர வைத்தது நம்பிக்கையுடன்.

"ஓம்" என்ற குரல் இப்போது உற்சாகமாக வந்தது.

"தம்பிக்கு ஏனப்பன் துவக்கு?".

"ஆமியைச் சுடோணும்!" கைகளை நீட்டிச் சுட்டுக்காட்டிய அந்தப் பதில் தீர்க்கமாய் இருந்தது.

"ஏனப்பன் ஆமியைச் சுடோணும்?" அந்தச் சிறுவனின் சின்ன விழிகளில் ஏதோ இனங்காண முடியாத உணர்வுகள் மின்னியதாகப்பட்டது.

"அவங்கள் அப்பாவைப் பிடிச்சுக் கொண்டு போறவங்கள். அடிக்கிறவை. அம்மா சாப்பிடாமல் அழுகிறவர். அது தான் அவங்களைச் சுடோணும்."

அவன் சின்னவன்தான். ஆனால் அந்தப் பிஞ்சு உள்ளத்தில் எழுந்த உணர்வின் வீச்சு கடுமையாக இருந்தது. அடிக்கடி தந்தையை இராணுவம் அழைத்துப் போன போதெல்லாம் அந்த வீடுபட்ட துயரமும், அவன் தாய் அடைந்த கலக்கமும், சுற்றத்தார் அடைந்த அவதியும் அவனுள் எப்படியான உணர்வை ஏற்படுத்தியதோ? அடிவாங்கிய காயங்களோடு தந்தை வீடு திரும்பியபோது அந்த வீட்டின் உணர்வலைகள் எப்படி இந்தக் குழந்தையின் மனதைத் தைத்திருக்குமோ?

இரண்டு பிள்ளைகளைக் கொண்ட இதொரு சிறிய குடும்பம் அங்கே தங்கியிருந்தது. அவர்களும் இன்று அகதிகள்தான். சுற்றி அடைக்கப்பட்ட அந்தப் பாடசாலை மண்டபம்தான் அவர்களின் வாழ்விடம். தாய் வலை பின்னிக்கொண்டிருந்தாள். மதிய உணவாய் அவளுடைய சின்ன மகள் தேனீர் தயாரித்துக்கொண்டிருந்தாள். வறுமை அங்கே குடிகொண்டிருந்தது. நான் தந்தையுடன் கதைத்துக் கொண்டிருந்தேன்.

"நாங்கள் சிறுகடலில் தொழில் செய்யிறனாங்கள். கடலுக்கு விடமாட்டான். விட்டாலும் இடைக்கிடை வந்து எங்களைப் பிடிப்பான். பிடிபடுறவைய சோடி சோடியா சேர்த்துவிட்டு ஒருவர் மாறி ஒருவருக்கு அடிக்கவிடுவான்" அந்த நாட்களை கண்ணீருடன் நினைவு கூர்ந்தார் யோசப் என்னும் யேசுராசா.

இந்த வார்த்தைகள் உங்களிற்குப் புரிகின்றதா? தங்களைத் தாங்களே அடித்துக் கொள்வதற்கு அவர்கள் யார்? தந்தையும் மகனும், மாமனும், மருமகனும் எனினும் அந்த வெறியர்களின் கொலைவெறிக்குப் பயந்து அவர்கள் அடித்துக்கொண்டனர். யாராவது ஒருவர் மயங்கிச் சரியும் வரையும் முகத்திலும், உடலிலும் இரத்தம் கசிய அடித்துக்கொண்டனர். செய்வதற்கு ஏது மற்ற நிலையில் அவர்கள் அடைந்த வேதனைகளுக்கும் அப்பால் அவர்கள் அடைந்த அவமானம் உங்களிற்குப் புரிகின்றதா?

விபரீதமான அந்த வக்கிர எண்ணம் கொண்ட ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கொடூரமான ரசிப்புத் தன்மையை சொல்லும்போது அவமானத்தால் தலைகவிழ்ந்து கண்கள் கலங்குகின்றன அவருக்கு. அவர்களைப் பார்க்கும்போது அடிமைகளை ஆயுதங்களால் அடிபடவிட்டு, சாவதைப் பார்த்து ரசித்த ஆயிரம் ஆண்டுகளிற்கு முந்தைய ஆண்டான் அடிமை வாழ்வு முறைதான் என்நினைவில் வருகின்றது. அடிமை மனிதர்களை மோதவிட்டு, அவர்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிப்பாய்களும் மன்னர்களே

அன்பு

கள் உடல்பிழந்து, உயிரிழந்து மடிவதை மன்னன் மனைவியுடன் பார்த்து ரசித்தான். அதுவே அவனது பொழுதுபோக்கு. யாழ்ப்பாணம் ஆண்டான் அடிமை சமுதாயமாயிற்றா? அன்று அடிமைகளுக்கு இருந்ததோ ஒரு மன்னன்தான். ஆனால், இன்று அற்பம், சிங்களச் சிப்பாய் என்ற தகுதியில் எத்தனை மன்னர்கள்!

எனது கால்கள் தொடர்ந்து நடக்கின்றன.

"தோமஸ் ஐயாவிற்கு எந்த இடம்?"

"சாவகச்சேரி தம்பி"

"எங்கை ஐயா வேலை செய்தனீங்க?"

"நான் முந்தி அனுராதபுரத்தில் ரெயில்வே டிப்பாட்மெண்டில் வேலை செய்தன். எழுபத்தியேழில் நடந்த கலவரத்தில் சிங்களக் காடையிரிட்ட வெட்டு வாங்கினனான். வயித்தில் பெரிய காயம். இண்டைக்கும் தம்பி மலசலம் போற தெண்டால் கஸ்ரம்."

"ஏன் ஐயா, அப்பத்தய சிங்களக் காடையருக்கும் இப்பத்தய ஆமிக்கும் என்ன வித்தியாசம்?"

"எல்லாம் ஒண்டுதான் அப்ப கத்தியோட வந்தவங்கள், துவக்கோட இப்ப திரியிறாங்கள். அப்ப வெளியில் தெரியக்கூடியதா செய்தத இப்ப தெரியாமல் செய்யுறாங்கள். அப்ப இவங்களுக்கு எங்கட நகை நட்டுக்கள்தான் கிடைச்சது. இப்ப இவங்களுக்கு சம்பளமும் கொடுக்கிறாங்கள்"

தோமஸ் ஐயாவிற்கு அறுபது வயது. அவரைப்போன்ற அனுபவம் எங்கள் சமூகத்தில் நிறையப்பேருக்கு உண்டு. அன்று தமது இளமைப் பிராயத்தில் வாழ்வுதேடிச் சென்றபோது தென்னிலங்கையில் வெட்டப்பட்டவர்கள் இன்று தம் முதுமைப்பராயத்திலும் வாழும் உரிமை மறுக்கப்பட்டு சொந்த வீட்டில் வைத்தே சுடப்படுகின்றனர். தன் வாழ்நாள் முழுவதும் சிங்களம் தந்த வடுக்களைச் சுமப்பது உடலில் மட்டுமல்ல மனதிலும்தான்.

ஆலமரத்தடியில் அமர்ந்திருந்த இளம் குடும்பஸ்தர்களுடன் நான் சேர்ந்துகொண்டேன். தென்மராட்சி நகரப்பகுதியிலிருந்து இராணுவம் வெளியேறிய அந்த நாட்களை இவர்களால் மறக்க முடியவில்லை. ஆக்கிரமிப்பாளர்கள் இவர்கள் மீது தமது இறுதியான கொடூரத்தை அப்போதுதான் பிரயோகித்தனர். தனக்கு கவசமாக மக்களை இராணுவம் அமைத்துக்கொண்டது. பின் இராணுவம் பின்வாங்கிய போதெல்லாம் தன் தோல்வியின் அவமானத்தை அந்த மக்கள் மீதே தீர்த்துக்கொண்டது.

"இயக்கம் மட்டுவிலுக்கு வந்திட்டுது. அப்ப நாங்கள் கனகம்புளியடியிலிருந்து மட்டுவிலுக்குவர வெளிக்கிட்டம். கனகம்புளியடிச்சந்தியில் வைச்சு ஆமிக்காரன் மறிச்சவன். தங்கட காம்புக்கு பின்னாலபோய் இருக்கச் சொன்னாங்கள். இல்லையெண்டு நாங்கள் வெளிக்கிட றோட்டுக்கு குறுக்க ரக்ரரை விட்டிட்டு கடந்துபோனா சுடுவம் எண்டாங்கள். நாங்கள் கனபேர் கடைசியில் இருந்தாலும் சாகத்தானே போறமெண்டிட்டு சுடுற தெண்டா சுடுங்கோடா எண்டுபோட்டு றோட்டுக் கரையால் காணியால நடந்தம். இஞ்சால வந்தவுடன் நாங்கள் தங்கியிருந்த வீடுகளுக்கு செல்லடிக்க வெளிக்கிட்டான். எங்கள்ள கனபேருக்கு காயம். ஒன்றிரண்டுபேர் மருந்தில்லாம இரத்தம் போய் செத்துப் போட்டினம்"

இது நடந்தது சாவகச்சேரியைவிட்டு இராணுவம் பின்வாங்கி ஓடியபோது. தமது பாதுகாப்பிற்கான உயிர்க் கேடயங்களாக பயன்படுத்தப்பட்ட மக்களின் உயிர்களே பின்னர் அவர்களால் கொல்லப்படவேண்டிய இலக்குகளாயின.

அந்த முகாமில் நான்கேட்ட கதைகள் மனதை உலுக்குபவை. ஆக்கிரமிப்பாளர்கள் அளித்த கொடிய வடுக்கள் நிறைந்ததாய் அவர்களின் வாழ்வின் கதையிருந்தது. இதற்குமேல் அந்தக் கதைகளைக் கேட்பது என் மனதைக் குடைந்து உயிரை வதைத்துவிடும் போலிருந்தது. "அம்மா போட்டு வாறன்" என்று சொல்லி நடக்கத்தொடங்கினேன்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஒரு முடிவுக்கான தவிப்பு

-அகிலன்-

அந்தப்பொழுது பற்றிய நினைவுகள் நெஞ்சை அழுத்தியபடி இருந்தது. நேரம் நெருங்க நெருங்க நெஞ்சறை பிழந்து இதயம் வெளியே பாய்ந்துவிடும் போலிருந்தது. எதிரி குதறியெறிந்துவிட்டுப் போன அந்த வீட்டினுள் நேர்த்தியாக அமைக்கப்பட்ட பதுங்குகுழியினுள் நிசப்தம் குடிகொண்டிருந்தது. ஓயாது இயங்கியபடியேயிருந்த தொலைத்தொடர்புக் கருவிகள் அடுத்த சில நிமிடங்களுக்காய் மௌனம் காத்தன சூழ இருந்த போராளிகளைப் போலவே.

ஆனையிறவுத் தளம்மீதான ஓயாத அலைகளின் பாய்ச்சலில் வெற்றியை நிறைவுபடுத்தும் உன்னதமான வரலாற்று நிகழ்வொன்றிற்கான இறுதிப் பாய்ச்சலுக்காய் புலி அணிகள் தயாராகிவிட்டிருந்தன. ஆனையிறவின் உயிர்நாடியில் புற்றுநோயெனப் புகுந்து எரிமலையென குமுறியெழுந்து எதிரியின் பாய்ச்சல்களையெல்லாம் புஸ்வாணமாக்கி, வெற்றிக்கு வழிசமைத்து இத்தாவிலில் காத்திருக்கும் வீரர்களுடன் இணைவதற்காய், ஆனையிறவை வென்றெடுத்த வீரர்கள் நகர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் தரையிறக்கப்பட்டதிலிருந்து அவர்களுடனான இணைவிற்காய் இன்றுவரை காத்திருக்க எங்களால் முடிந்தது வியப்பளித்தது; இப்போது ஒவ்வொரு நிமிடங்களும் ஏனோ நீண்டுசெல்வது போலிருந்தது.

கடந்துபோன இருநாட்களும் இப்படித்தான் எங்களை சீண்டிப்பார்த்துவிட்டுப் போயிருந்தது. நம்பிக்கையளித்த அந்த நாட்களால் இறுதியில் ஏமாற்றத்தையே தரமுடிந்தது. இன்றைய நாள்பற்றிய எமது அங்கலாய்ப்பை அதிகரித்திருந்தது. தனது சிப்பாய்களின் அவலம்பற்றி தாம் இன்னமும் அக்கறை கொண்டுவிடாமையை எதிரித் தலைமை எமக்கு உணர்த்தியிருந்தது. மரணத்துள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த எதிரி மூர்க்கமாய் மோதுவான். ஆனால் "ஆனையிறவை விட்டாப்பிறகும் உதுல இருக்கிறவங்களுக்கு அவ்வளவு திமிர்தானே. இண்டைக்கு இரண்டில் ஒருமுடிவு காணவேண்டும், அடிச்சுக்கலைக்கிறம் இல்லாட்டி அவங்கள் எங்கள் எல்லாரையும் முடிக்கவேணும்" என்று கூறிவிட்டு, இறுதி நகர்விற்காய் புறப்பட்டுப்போன வீரர்களின் உறுதி மனதிற்கு ஆறுதல் அளித்தது. அவர்கள் சொன்னதில் முன்னையது நடந்தே ஆகவேண்டும். பின்னையது நடந்துவிடவே கூடாது.

இன்றில்லாவிடினும் அடுத்த தினங்களில் அந்த வெற்றி பெறப்பட்டுத்தான் தீரும், ஆனாலும் அது இன்றைய நாளாய், இந்த மணித்தியாலமாய் அமைந்துவிடவேண்டும் என்பதே எல்லோருடையதும் தவிப்பு. எம் உணர்வுகளைப் பாரமாய் அழுத்திக்கொண்டிருப்பது ஒரு தசாப்த வரலாற்றுச் சுமையின் முடிவல்லவா! அந்தத் தசாப்த நினைவுகள் சுகமளிக்கவில்லை. ஆவேசமாய் எங்களை எழவைத்தது; அது 1991இன் நாட்கள். முடிந்துவிட்ட அந்த தசாப்தத்தின் முற்பகுதி. ஆனையிறவுத் தளத்தை வீழ்த்திவிட புலிவீரர்கள் நகர்ந்துகொண்டிருந்த நாளொன்று. சேறும், சகதியுமாயிருந்த பகுதியொன்றினூடே நகர்ந்துகொண்டிருந்தது பெண் போராளிகளின் அணி ஒன்று. அவர்களின் கடினப்படுத்திய சிக்கலான நகர்வு அது. வெற்றியின் ஆனந்தத்திற்காய் துன்பத்தைச் சகித்து நகர்ந்தார்கள் அந்த வீரர்கள். கடுமையான சிரமப்பட்ட ஒரு போராளியிடம் அருகே வந்த தோழியொருத்தி சொன்னாள் "சந்தோசத்தோட வா தங்கச்சி, சண்டை முடிஞ்சு வெற்றியோட நாங்கள் திரும்பி வரேக்குள்ள இந்தச் சேற்றுக்குள்ளாலையும் சகதிக்குள்ளாலையும் வரமாட்டம். கண்டி றோட்டாலை ஆனந்தமாய் வருவம்." ஆனால் சண்டை முடிந்தும் வெற்றி கைகூடாது மீண்டும் அதே சகதிக்குள்ளால் நடந்துகொண்டிருந்தாள் அந்தப் போராளி. இப்போது அவளருகே அவளுக்கு நம்பிக்கை ஊட்டிய தோழியும், கூடவே இன்னும்பல தோழிகளும் இருக்கவில்லை. அப்போது அந்தப் போராளியினுள் கனத்த இதயம் இப்போதும் எங்கள் எல்லோருள்ளும் கனத்தபடி இருக்கின்றது. ஆனால், இன்று அதன் கனதிதான் எத்தனை மடங்கு அதிகமாகிவிட்டது.

அது கடந்த ஏப்ரல் மாதத்தின் முதலாம்நாள். தரையிறங்கிய அணிகள் தாக்குப்பிடித்து ஆறுநாட்கள் ஆகிவிட்டன. அந்த மாலைப் பொழுது இப்போதும் நினைவில் நிற்கிறது. இயக்கச்சி முகாமின் காவலரண்களைத் தகர்த்து எதிரிக்குள் ஊடுருவப்போகும் போராளிகளுடன் தளபதி கதைத்துக் கொண்டிருந்தார். அன்றைய இரவின் சண்டைக்காய் நகரும்போது என் அருகிருந்த போராளியொருவனின் நினைவு





www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அதிகரித்துவரும் அரசபடையின் அட்டூழியங்கள்

விடுதலைப் புலிகள் தமிழ் மக்கள்மீது பல்வேறுபட்ட தாக்குதல்களை நடாத்தி, தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதாக சிங்களப்படை தனது கடுங்கவலையை வெளியிட்டுள்ளது.

சிங்களப் படைக்குத் தமிழ் மக்கள்மீது ஏற்பட்டிருக்கும் இந்த இரக்கம் ஒன்றும் ஆச்சரியப்படக் கூடியதல்ல. ஆச்சரியப் படக்கூடியது என்ன வென்றால் இவ்விரக்கத்திற்கு பின்னர் இருக்கும் அரசியல் கபடமும் நரித்தனமும்தான்.

"படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்" என்பது போல் செயற்படும் சிங்கள ரௌடிப்படை, அப்பாவித் தமிழ் மக்கள் மீது புரிந்திருக்கின்ற கொடுமைகள் எண்ணிலடங்காதவை. வார்த்தைகளால் வர்ணிக்கப்பட முடியாதவை. இவ்வேளை மிக அண்மைய நாட்களில் சிங்களப்படை செய்த அட்டூழியங்களை இங்கே தருகிறோம்.

*12.07.2000 அன்று வே.சார்ள்ஸ்(கி.சே.உ), இ.ஆறுமுகம்(விவசாயி) ஆகியோரை மட்டு-தாத்தாமலை முருகன் ஆலய வீதியில் வைத்து சுட்டுக்கொன்றனர்.

*13.07.2000 அன்று யாழ்-இந்துக் கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவனைச் சுட்டுக் கொன்றனர்.

*14.07.2000 அன்று யாழ்-அல்வாயில் ஒரு மாணவியை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தினர்.

*15.07.2000 அன்று, காரைதீவைச் சேர்ந்த இ.கோகுலதாசன், பே.சுதாகரன், இ.பாஸ்கரன் ஆகிய மாணவர்களைக் கைதுசெய்துவிட்டுக் காணவில்லை எனத் தெரிவித்தனர்.

*16.07.2000 அன்று, மட்டு நாசிவன்தீவைச்சேர்ந்த ப.சாம்பசிவம், தே.ஞானேஸ் ஆகிய இளைஞர்கள் ஆலயம் சென்று திரும்புகையில் சுட்டுக்கொன்றனர்.

*19.07.2000 அன்று மட்டு-மகிழடித்தீவு மகாவித்தியாலய அதிபர் சி.அகிலேஸ்வரன், மட்டு - தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர் கே.தியாகராசா, சமுர்த்தி முகாமையாளர் வி.பத்மநாதன் ஆகியோரைக் கைதுசெய்துள்ளனர்.

இப்படி நடந்துகொள்ளும் சிங்களப்படையின் சிப்பாய்கள், தமிழ் மக்களுக்காக் கண்ணீர் வடிக்கின்றார்கள் என்றால், அதைத் தமிழ் மக்கள் நம்ப வேண்டும் என்றால், சித்தப்பிரமை நிச்சயமாகத் தமிழ் மக்களுக்கு அல்ல.

எனினும் சிங்களப் படை இதைப் புரிந்து கொள்வதற்கும் நியாயம் இல்லைத்தான்.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**
**அரசியல் துறை**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**
**மட்டக்களப்பு அம்பாறை.**

என்னை இப்பொழுது துன்புறுத்துகின்றது. தலைவர் போராளிகளுக்காய் அனுப்பி வைத்திருந்த கன்டோஸ் ஒன்றைத் தனது சட்டைப் பையினுள் அவன் வைத்தபோது "ஏன்ராப்பா அதைப் பத்திரமாய் வைக்கிறாய், தற்செயலாக ஏதும் நடந்தாலும்" என்று கூறிய அருகிருந்த தோழனுக்கு "அது சண்டை முடிஞ்சு உள்ளுக்க தரையிறங்கி நிக்கிற எங்கட பொடியளைச்சந்திச்சு ஆனையிறவ பாக்கிறதுக்காக அவங்களை கண்டிறோட்டால கூட்டிக்கொண்டு வரேக்குள்ள எல்லோருமாப் பறிபட்டுச் சந்தோசமாகச் சாப்பிடவேணும்" என்று அதைப் பத்திரமாக வைத்தவன், வெற்றி கைகூடாது, கூடவே பல தோழர்களுடன் திரும்பி வராமலே போனபோது கனத்த இதயம் இப்போதும் கனக்கிறது.

"உங்கள கடலால கொண்டு போய் இறக்கிறன். ஆனால், நீங்கள் வரேக்குள்ள கண்டி றோட்டாலதான் வரவேணும்" என்று தலைவர் சொல்லியனுப்பியதையே எண்ணியெண்ணி எதிரியின் எரிமலைகளுள் தீக்குளித்திருக்கும் போராளிகள் இப்போது காத்திருக்கிறார்கள். "நான் உங்களை சாதிக்கத்தான் அனுப்பிறன், சாகிறதுக்கில்லை" என்று சொல்லியனுப்பிய தலைவரின் பிள்ளைகள் சாதித்துவிட்டுக் காத்திருக்கிறார்கள். "அண்ணை சொன்னமாதிரியே நிறைய சாதிச்சுப்போட்டு கண்டிறோட்டால போய் நாங்கள் இஞ்ச செய்ததுகளையெல்லாம் அவருக்குச் சொல்லவேணும்" என்றே தங்கள் உயிரின் இறுதித் துளிவரை சொல்லச் சொல்லியே சாதித்துக்குவித்த போராளிகளின் இழப்புக் களை அறிந்து மனமுருகிய தலைவன் இறுதிக் கட்டளையிட்டு காத்திருக்கிறான். எல்லாமே மெய்சிலிர்க்க வைப்பவை.

இப்போது இறுதிச் சண்டைக்கான நேரம் நெருங்கிவிட்டது. போராளிகள் தமது இறுதி நகர்விடத்தை சென்றடைந்துவிட்ட செய்தியை தொலைத்தொடர்புச் சாதனம் சொல்லிற்று. "தொடங்குங்கள்" உத்தரவிட்டார் தளபதி. எதிரியின் தடைகளை ஒவ்வொன்றாய் கடக்கத் தொடங்கினார்கள் வீரர்கள். எறிகணைகளை மலைபோலப் பொழிந்தான் எதிரி. ஒவ்வொருவராய் மண்ணில் சாயத்தொடங்கினார்கள் வீரர்கள். இடைவிடாது தன்னை அழைத்தபடியேயிருந்த தளபதியின் குரலுக்கு பதிலளிக்க முடியாதபடி காயமடைந்து வீழ்ந்தான் அந்த அணியின் தலைவன். தொடர்புகள் எதுவுமற்று வினாடிகள் கழிந்துகொண்டிருந்தன. எல்லோர் முகங்களும் பேயறைந்தது போலாகியது. எத்தனை நாட்களாய் நாங்கள் சுமந்த உணர்வின் சுமை இன்னும் அதிகரிக்கப் போகிறதா? அந்தரத்தில் நிமிடங்கள் கழிந்தன.

"அண்ணை அண்ணை" தளபதியை அழைத்த அந்தக்குரல் என்ன சொல்லப்போகிறது. எல்லோருக்குள்ளும் பேரார்வம் எழுந்தது. "அண்ணை பிரச்சனையில்லை. நாங்கள் கொஞ்சப்பேர்தான் நிக்கிறம் எண்டாலும் கடைசிவரையும் விடமாட்டம். உதவிக்கு ஆக்களை அனுப்புங்கோ. நாங்கள் உள்ளுக்கு ஏறுறம்" அந்தச் செய்தி இனித்தாலும் ஒருவர் முகங்களும் இன்னும் வெளிக்கவில்லை.

நிமிடங்கள் மணித்தியாலமாகிவிட்டன. எதிரி நிலையினுள் புகுந்துவிட்டார்கள் எமது போராளிகள். ஒவ்வொரு அங்குலத்திலும் எதிரியை சுட்டுச்சாய்த்தபடி அவர்கள் சற்று முன்னேறினார்கள். "அண்ணை வலதுபக்கத்தால பெருமெடுப்பில் வாறான்" அந்தச் செய்தி முறியடிப்பில் எதிரி கொண்டுள்ள உறுதியான தீர்மானத்தைக் காட்டியது. "அது எங்கட உடல்களைக் கடந்துதான் நடக்கும்" கூறிவிட்டு எதிர்த்து நின்ற போராளிகளின் உதவியால் எதிரியின் பெருமுயற்சியை முறியடித்துவிட முடியுமா? முடிவிற்காய் நீண்ட நேரம் காத்திருக்கவேண்டியிருந்தது.

மணித்தியாலங்கள் ஒவ்வொன்றாய் கழிந்தன. போராளிகளின் உறுதியின் முன்னால் எதிரிகளின் முயற்சி ஆட்டம் காணத்தொடங்கியது. மீண்டும் அங்குலம் அங்குலமாய் போராளிகள் முன்னேறத் தொடங்கினார்கள். எதிர்த்து நிற்க முடியாதபடி எதிரியின் நாடி நரம்புகளுள் போராளிகள் உட்புகுந்துவிட்டார்கள். எங்கள் இதயங்களின் பாரம் குறைவதாக இருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் எல்லோரும் காற்றில் பறந்து மிதந்துவிடப்போகிறோம் போலிருந்தது. அது நடந்தேவிட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய தளபதியின் கனவு?

“கடந்த ஏப்ரல் மாதத்தில் விடுதலைப் புலிகளிடம் இழந்த ஆனையிறவுப் படைத்தளத்தை மீண்டும் கைப்பற்றுவதற்கு உறுதி எடுத்துக்கொள்வோம்” எனச் சிறீலங்காவின் 16வது இராணுவத் தளபதியாக பதவி ஏற்றுள்ள லெப்.ஜெனரல் லயனல் பல்லேகல தனது பதவி ஏற்பு வைபவத்தின் போது விண்ணப்பித்துக் கொண்டுள்ளார்.

லயனல் பல்லேகலவின் இக் கூற்றுக்கள் அவர் சற்று நிதானமாகப் பேசுவது போன்றதொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதாகவே உள்ளது. ஏனெனில் அண்மைக் காலமாகச் சிறீலங்காவின் அரசியல் தலைமைக்கும் சரி, இராணுவத் தலைமைக்கும் சரி வருபவர்கள் தமது பேச்சுக்களை இவ்வாறு மட்டுப்படுத்துவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை விரைவில் தோற்கடிப்போம். யுத்தத்தை ஒருவருட காலத்திற்குள் முடிவுக்குக் கொண்டுவருவோம் என்பது போன்று பேசுவதே வழமையானதாக இருப்பதுண்டு. ஆகையினால் லயனல் பல்லேகலவின் பேச்சு அவ்வாறு அமையாததையிட்டே மேற்குறிப்பிட்டது போன்று நிதானமாகப் பேசுவதுபோல் தெரிகின்றது எனக் கூறவைத்தது.

ஆனால், அதற்காக லெப். ஜெனரல் பல்லேகல அவ்வாறான பேச்சுக்களைப் பேசமாட்டாதவர் என்பதல்ல. உண்மையில் தற்போதைய இராணுவச் சூழ்நிலை அவ்வாறு பேசமுடியாததொரு நிலையை அவருக்கு ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மையாகும். அதாவது ஓயாத அலைகள்-03 கொடுத்த அடிகள் அவரைப் பேச முடியாதவராக்கியிருக்கலாம்.

இதனைத் தவிர புதிய இராணுவத் தளபதிக்கு விடுதலைப் புலிகளுடனான யுத்தத்திலும் போதிய அனுபவம் உண்டு. அதிலும் குறிப்பாக “ஜெயசிக்குறு” மற்றும் “ரணகோஷ” நடவடிக்கைகளில் இவரின் பங்கு குறிப்பிடத்தக்கதாகவும் இருந்தது. ஆகையால் யுத்தம் குறித்துப் பேசுவதில் அவர்சற்று நிதானத்தைக் கடைப்பிடித்திருக்கலாம். அதாவது, யுத்தத்தின் வெற்றி குறித்துப் பீற்றிக்கொண்டால் கடந்த காலத்தை ஞாபகப்படுத்தி தன்னை யாரும் ஏளனம் செய்யலாம் என அவர் கருதியிருக்கலாம். அல்லது அவரும் வாக்குறுதிகளைக் கொடுத்து அதில் தோல்வி அடைந்து அவமானப்படுவதை அவர் விரும்பாது இருந்திருக்கலாம்.

ஆனால், அதற்காக லயனல் பல்லேகல யுத்தத்தில் வெற்றி குறித்து முற்றாகப் பேசாமலும் இல்லை. போதியளவில் நவீன ஆயுத தளபாடங்கள் வந்து சேர்ந்துள்ளதாகவும் இராணுவத்தினரின் மனோநிலை உயர்ந்த நிலையில் இருப்பதாகவும் அவர் அதே வைபவத்தில் தெரிவித்துள்ளார். இதன் மூலம் இராணுவம் வெற்றிப் பாதையில் செல்லும் என அவர் நம்பிக்கையை வெளிப்படுத்தியும் உள்ளார்.

இருப்பினும் இராணுவத்தளபதி கூறியிருப்பது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. அதாவது சிறீலங்கா இராணுவத்திற்குப் பெரும் தொகையில் நவீன ஆயுத தளபாடங்கள் வந்து சேர்ந்துள்ளமை உண்மையே. அத்தோடு, இவ் ஆயுத தளபாட வருகையில் இராணுவத்தில் ஒருதரப்பினர் புலிகளைத் தம்மால் சமாளிக்க முடியும் என நம்பிக்கையும் கொண்டு இருக்கலாம்.

ஆயினும், இவை இரண்டும் சிறீலங்கா இராணுவம் யுத்தத்தில் வெற்றி பெறப் போதுமா என்பது கேள்விக்குரியதே ஆகும். ஏனெனில் சிறீலங்கா இராணுவம் ஆயுத தளபாட ரீதியில் விடுதலைப் புலிகளைவிட எப்பொழுதுமே மேலாதிக்க நிலையிலேயே இருந்துள்ளது. ஆனால் அவர்களினால் யுத்தத்தில் வெற்றி பெறமுடியவில்லை.

அத்தோடு, சிறீலங்கா இராணுவத்திற்குப் புதிய ஆயுதங்கள் சற்று மனத்துணிவை கொடுப்பதாக இருப்பினும் அவர்கள் என்றுமே விடுதலைப் புலிகளைவிட உயர்ந்த மனோநிலையில் இருக்கப்போவதில்லை. ஏனெனில் விடுதலைப் புலிகள் செய்யக் கூடிய அர்ப்பணிப்பையும், தியாகத்தையும் என்றுமே இராணுவத்தால் செய்துவிட முடியாது.

இந்நிலையில் புதியதளபதி சற்று அடக்கி வாசிப்பவராக இருப்பினும்கூட அவர் வெளியிட்டுள்ள அபிலாசைகளை அவரால் நிறைவு செய்யமுடியுமா என்பது கேள்விக்குரியதே ஆகும். அதாவது இராணுவத்தின் அதிகரித்த ஆயுத பலமும், சிறிது மேம்பட்ட மனோநிலையும் புலிகளின் அர்ப்பணிப்பு, தியாகம் என்பவற்றின் முன்னால் வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துவிடப் போவதில்லை.

ஆகையினால் புதிய இராணுவத்தளபதி பல்லேகல அடக்கி வாசிக்கின்றாரோ இல்லையோ அவர் வெளியில் கூறியவை ஆயினும்சரி கூறாது மனத்தினுள் வைத்துக் கொண்டுள்ளவை ஆயினும்சரி யுத்தத்தில் அவரின் விருப்பிற்கு ஏற்றதாக எதுவும் நிகழப்போவதில்லை. முன்னாள் தளபதிகள் எவ்வாறு பதவியை விட்டு விலகும்போது தமது கற்பனைக் கோட்டைகள் யாவும் தகர்ந்து தவிடு பொடியாகிய நிலையில் சென்றார்களோ அதேபோன்றே லெப். ஜெனரல் பல்லேகலவின் கதைகளும் தவிடுபொடியாவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுயரூபம்

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை நான்கு மகாநாயக்கர்களிடமும், மற்றைய சமயத் தலைவர்களிடமும் சமர்ப்பித்து அவர்களின் அனுமதியையும், ஆதரவையும் பெறப்போவதாக மக்கள் விடுதலை முன்னணி என்னும் ஜே.வி.பி. அறிவித்துள்ளது. இவர்களின் இந்நடவடிக்கையானது குழம்பியகுட்டையில் மீன்பிடிக்கும் நடவடிக்கை என்றே கொள்ளத்தக்கது.

தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு சமயத் தலைவர்களின் அங்கீகாரமும், ஆசியும் பெறுவதென்பது ஒருவகையில் புதிய தொன்றுதான், இதுவரையில் தேர்தலில் வெற்றிபெற பேரினவாதிகள் ஆசி வேண்டினரே ஒழிய தேர்தல் விஞ்ஞாபனத்திற்குப் ஆசி பெற்றதில்லை. ஆனால், இனப்பிரச்சனைக்குத் தீர்வாக முன்வைக்கப்படும் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தினை மகாசங்கத்தினரிடம் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றபின்னரே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாட்டை அடியொற்றிய தற்பொழுது ஜே. வி. பி. தேர்தல் விஞ்ஞாபனத்தையே மகாசங்கத்தினரிடம் வழங்க முன்வந்துள்ளது. ஜே.வி.பி இவ்வாறானதொரு முடிவு எடுத்தமைக்கு முற்றிலுமாக அரசியல் சந்தர்ப்பவாதமே காரணமாகும். அதாவது சிறீலங்காவின் தற்போதைய அரசியல் சூழ்நிலையை ஜே.வி.பி தமக்குச்சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முற்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாதுவிட்டால் இடதுசாரி அமைப்பெனத் தம்மைக் கூறிக்கொள்ளும் ஜே.வி.பி இவ்வாறான ஒரு தீவிர வலதுசாரித்தனமான முடிவொன்றை மேற்கொள்ளமுடியாது.




ஜே. வி. பி. தேர்தல் விஞ்ஞாபனத்தை சகல மதத்தலைவர்களிடமும் ஒப்படைத்து அனுமதி பெறப்போவதாகக் கூறியிருப்பினும்- அடிப்படையில் மகாசங்கத்தினரிடம் அனுமதி பெறுதல் என்பதே அதன் அர்த்தப்பாடாகும். ஏனெனில், ஏனைய மதத்தலைவர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடுவதும் இல்லை. அவர்கள் ஈடுபடுபவர்களாக இருந்தால்க்கூட அவர்கள் அரசியலில் சக்தி உள்ளவர்களாகவும் இல்லை.

இன்று மகாசங்கத்தினர் இருபிரதான அரசியல் கட்சிகள் மீதும் அதிலும் குறிப்பாக ஆளும் கட்சியினர் மீதும் அதிலும் குறிப்பாக ஆளும் கட்சியினர் மீது பெரும் சீற்றத்தில் உள்ளனர். தமது அங்கீகாரம் பெறாது அரசியல் யாப்புத் திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தமையும், மகாசங்கத்தினரை சில ஆளும்கட்சியினர் காட்டமாக விமர்சித்தமையும், அவர்களின் இச்சீற்றத்திற்கும் சினத்திற்கும் காரணமாகும்.

இவர்களின் இச்சீற்றமானது, விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க போன்ற அமைச்சர்களை நேரடியாகக் கண்டனம் செய்யும் அளவிற்கும், அவர்களின் சந்திப்பிற்கான கோரிக்கையை நிராகரிக்கும் அளவிற்கும் சென்றுள்ளது. அத்தோடு, சில அமைச்சர்களுக்கு எதிராக நேரடியாக அரசியல் நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அறிவிக்கும் அளவில் முறுகல் நிலை உள்ளது.

இதேசமயம், ஐ.தே.கவின் நடவடிக்கையைக்கூடப் பெரும் திருப்திகரமானதாக அவர்கள் கொள்ளவில்லை. இனப்பிரச்சினைத் தீர்விற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை, சர்வதேச மத்தியத்தத்தை ஏற்றுக்கொள்ளுதல் புலிகளுடன் சண்டை நிறுத்தம் ஒன்றைக்கொண்டு வருதல் என்ற ரீதியில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் அறிவிப்புக்கள் அவர்களுக்குத் திருப்திகரமானதாக இல்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான முழுஅளவிலான யுத்தம் என்பதே அவர்களின் விருப்பாகும்.

இந்த நிலையில், கடந்த காலத்தைப்போன்று அல்லாது மகாசங்கத்தினர் இருபிரதான கட்சிகளின் நிலைப்பாட்டை எதிர்ப்பது மட்டுமல்ல, சற்றுக் குழப்பமான நிலையிலும் உள்ளனர் என்றே கொள்ளலாம். இதனையே தற்பொழுது ஜே.வி.பி பயன்படுத்திக் கொள்ள முற்பட்டு நிற்கின்றது. அதாவது, மகாசங்கத்தினைத் திருப்திப் படுத்துவதன் மூலம் பாராளுமன்றத்தில் சில ஆசனங்களை வென்றுவிடலாம் என அது கருதுகின்றது.

இவ்ஒரிரு ஆசனங்களுக்காகவே தனது சுயரூபத்தையே வெளிக்காட்டிவிட ஜே.வி.பி துணிந்துள்ளது. அதாவது, ஜே.வி.பி இடதுசாரிக்கட்சி அல்ல பௌத்த சிங்களப்பேரினவாதக் கட்சி என்பதை அது நிரூபணம் செய்துள்ளது. ஆனால், இது தமிழ்மக்களுக்கு ஆச்சரியத்தைத் தரதக்கதோ அன்றி ஏமாற்றம் அளிப்பதாகவோ இருக்காது. ஆனால், பொதுத்தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குக்களைப் பெறும் நோக்கில் சில முயற்சிகளை மேற்கொண்டு வரும் ஜே.வி.பி யினருக்குத்தான் இதனால் ஏமாற்றம் கிட்டக்கூடும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்
# விடிய



இயற்கை வளங்கள் நிறைந்ததும் மனிதவலு நிறைந்ததுமான சூடான் இன்று தேசிய அபிவிருத்தியும், பொருளாதார வளம் குன்றிய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றாகவும் விளங்குகின்றது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு முந்தைய காலங்களில் எகிப்திய அரசின் ஒரு மாகாணமாக சூடான் இருந்தது. பின்னர் 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியரின் ஆளுகைக்கு உட்பட்டது. 1956இல் பிரித்தானியார் அரபு மொழி பேசும் இஸ்லாமியர்களின் வடசூடானையும் தெற்கே பல்வேறு பாரம்பரிய மொழிகளைப் பேசுவோர்களைக் கொண்டதும் பெரும்பான்மையாக கிறிஸ்தவர்களைக் கொண்டதும் பல்வேறு இனக் குழுக்களின் பிராந்தியங்களைக் கொண்டதான தென்சூடானையும் இணைத்து ஒரு நாடாக்கிவிட்டுச் சென்றனர். அன்றிலிருந்து இந்நாடு இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு ஆட்பட்டுள்ள பெரும்பான்மை இஸ்லாமிய சுன்னி இனத் தலைவர்களின் விட்டுக் கொடுப்பின்மையால் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடும் தேசமாகச் சூடான் விளங்குகின்றது. வடஆபிரிக்காவின் நோயாளி என இன்று வர்ணிக்கப்படுகின்றது. சூடானில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசுகள் நின்று நிலைப்பது கிடையாது. சதிப்புரட்சி அரசுகளே செல்வாக்குச் செலுத்துகின்றன. அதுவும் அரபு மொழி பேசும் இஸ்லாமியர்களின் மத்தியில் இருந்து ஆட்சிபீடத்திற்கு வரும் ஆட்சியாளர்கள் தொடர்ச்சியான அடக்குமுறைகளையும் பொருண்மிய, கல்வித் தடைகளாலும் தென் சூடானிய கறுப்பின மக்களை ஒடுக்குகின்றனர்.

தென்சூடானிய மக்களின் நியாயத்திற்கான போராட்டம் 1950களிலேயே ஆரம்பமானது. 1955 ஆகஸ்ட் 18ஆம் திகதி சூடானிய இராணுவத்திலிருந்த இக்வுட்டோரியாப் படையணிகளில் இருந்த தென்சூடானியர் தொறிற் பிரதேசத்தில், தமது பிராந்தியங்களை வடசூடானியரோடு இணைக்க வேண்டாம் எனக்கோரி மாபெரும் போராட்டம் ஒன்றைத் தொடக்கினர். பல கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்களோடு வனப்பகுதிகளுக்குள் உறைந்து கரந்தடி யுத்தம் ஒன்றை ஆளும் தரப்பினருக்கு எதிராக ஆரம்பித்தனர். 1960களின் இறுதியில் சுமார் ஐந்து இலட்சம் மக்கள் யுத்தத்தினால் கொல்லப்பட்டனர். பல இலட்சக்கணக்கான தென்சூடானிய மக்கள் காடுகளிற்குள் தஞ்சமடைந்தனர், ஏதிலிகளாக அனைத்தையும் இழந்து அயல்நாடுகளிற்கு ஓடினர். 1969இல் தென் சூடானிய முன்னணி விடுதலை அமைப்பான அன்யா நியாவில் (Anya Nya) பெருந்தொகையான மக்கள் இணைந்தனர். ஏனைய ஆபிரிக்க நாடுகளான எத்தியோப்பியா, உகண்டா ஆகிய நாடுகளின் உதவியோடு சேகரிக்கப்பட்ட ஆயுதங்களினாலும் வெற்றிகரமாகப் பல தாக்குதல்கள் தென் சூடானியரால் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் கட்டும் இஸ்லாமிய அரசு, 1972இல் எத்தியோப்பியாவின் தலைநகர் அடிஸ்அபாவில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட ஒப்பந்தத்தில் தென் சூடானுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குவதற்கு ஒப்புக் கொண்டது.

1983வரை ஓரளவு அமைதிபேணப்பட்டது. 1983இல் பதவியேற்ற ஜனாதிபதி நிமேரி இஸ்லாமிய சரியாச்சட்டத்தை சூடான் எங்கிலும் அமுல்ப்படுத்தினார். இதனால் தென்சூடானிய பிராந்தியத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டன. தென் சூடானின் தலைநகரான ஜூபாவில் 1975ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகமும் இழுத்து மூடப்பட்டது. தமது மக்களின் உரிமைகள் பறிபோவது கண்டு மீளவும் வடசூடானிய அரசுடன் மோதுவதென தென்சூடானிய மக்களின் உரிமை மீட்பிற்கான அமைப்பான சூடானிய மக்கள் விடுதலை முன்னணி(Sudan People's Liberation Movement) தீர்மானித்தது. 1983 இலிருந்து 1997 வரையான காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 15 இலட்சம் தென் சூடானியர்கள் வடசூடானிய அரசபடைகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.



லெப்.கேணல் ஜோன்கிறாங்

தென்சூடான் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பிரதான பாத்திரத்தை வகித்த சூடான் மக்கள் விடுதலை முன்னணியால், போராட்டத்தை முனைப்புடன் நடத்துவதற்காக சூடான் மக்கள் விடுதலை இராணுவம் (Sudan People's Liberation Army) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் போது சூடான் அரச இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த டொங்கா இனக் குழுவைச் சேர்ந்த லெப்.கேணல் ஜோன் கிறாங் தம்மோடு பணியாற்றிய 500 படையினரோடு SPLA வில் இணைந்து கொண்டார். மேலும் பல தென்சூடானியத் துருப்புக்களை சூடானிய அரசபடையிலிருந்து விலகி இஸ்லாமிய பேரினவாதத்திற்கு எதிராகப் போராட வருமாறு அறைகூவல் விடுத்தார். திரு.ஜோன் கிறாங் அவர்கள் டோங்கா இன



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# டானிய மக்களின்
# க்கான போராட்டம்

கிறிஸ்த்தவக்குடும்பத்தில் பிறந்தார். இன்று 27 மில்லியன் தென்சூடானியரின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற SPLAவின் தன்னிகரில்லாத் தலைவரான திரு.ஜோன் கிறாங் அவர்கள் பொருளியலில் கலாநிதிப் பட்டத்தை அமெரிக்காவில் பெற்றவர். அத்துடன் தரைப் படை அதிகாரிகளுக்கான வழிநடாத்துகை கற்கை நெறியை அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தில் உள்ள போட் பெனிங் கல்லூரியில் பெற்றார். 1983இல் தென்சூடானிய கிளர்ச்சிப் படைகளை அடக்கவென தனது படையணிகளோடு சென்ற ஜோன் கிறாங் தமது கறுப்பினச் சகோதரர்கள் அரசின் அடக்குமுறைகளினால் படும் இன்னல் கண்டு மனச்சாட்சியின் உந்துதல் காரணமாக SPLAவில் இணைந்து, குறுகிய காலத்தில் அதன் தலைவராகவும் உயர்ந்தார். இது தென்சூடானின் கறுப்பின மக்களுக்கும், வடசூடானிய இஸ்லாமிய அடிப்படைவாத அரசிற்கும் எதிரான யுத்தம் என்று கூறும் கிறாங் அவர்கள் ஆண்டாண்டு காலமாக சமூக, பொருளாதார, அரசியல் அடக்குமுறைகளுக்குள் நசியுண்ட மக்களின் விடுதலைக்கான எழுச்சியே இந்தப் போராட்டம் என்று கூறுகின்றார்.

1986 காலப்பகுதியில் சூடானில் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமே கடைசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஆகும். அதனது ஆயுளும் 1989இல் இராணுவ ஆதரவோடு வந்த தேசிய இஸ்லாமிய முன்னணியால் முடித்து வைக்கப்பட்டது. பிரித்தானியரிடமிருந்து சுதந்திரமடைந்த 1956 காலப்பகுதியில் 10 ஆண்டு காலமே நாடு சரியாச்சட்டம் என்ற இஸ்லாமிய மதச்சட்டம் அமுலில் இல்லாமல் இருந்தது. இதனாலேயே தென்சூடானிய மக்கள் தம்மீது திணிக்கப்பட்டுள்ள இஸ்லாமிய சரியாச்சட்டம் நீக்கப்பட் வேண்டும், தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கும் அதிகாரம் வேண்டும் என்ற உரிமைப் போராட்டத்தை முனைப்புடன் நடத்துகின்றனர். பல இனக்குழுமங்களைக் கொண்ட நாடான சூடான் பெரும்பான்மை இஸ்லாமிய அரபு மொழிபேசுவோரின் அதிகாரவெறியினால், இன்று உலகிலே அதிக மனித உரிமை மீறல்களும், மனித அவலங்களும், அதிகமாக அரங்கேறும் நாடுகளில் ஒன்றாக சூடானிய தேசம் விளங்குகின்றது.

1986இல் சுமார் 12500போராளிகளையும் சில கனரக ஆயுதங்களையும் கொண்டிருந்த அமைப்பை வழிநடாத்திய திரு.ஜோன் கிறாங் அவர்கள் பல வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தி தென்சூடானின் பல பிராந்தியங்களையும் மீட்டு தமது நிர்வாகத்தை நடத்தி வருவதோடு, இன்று 50,000 வரையான போராளிகளைக் கொண்ட மரபுவழி இராணுத்தின் தன்னிகரில்லாத் தளபதியாக விளங்குகின்றார். 1988லேயே தெற்கின் 90வீதமான நிலப்பகுதி SPLA வின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

1983இல் ஆரம்பிக்கப்பட்ட குறுகிய காலத்திற்குள் SPLA மூன்று பிரிவாக உடைந்தது. அதாவது SPLA றொறிற் பிரிவு தளபதி ஜோன் கிறாங் உடனும், SPLA பார் அல் கசால் பிரிவு கராபினோ குயினி போல் என்பவருடனும் மூன்றாவதாக தென்சூடானிய விடுதலை முன்னணி என்னும் பெயரில் றிக் மாக்கர் என்பவர் தலைமையிலும் உடைந்தது. இருந்தபோதி




லும் தளராத மனத்திடமும் தீர்க்கதரிசனமும் மிக்க தளபதி ஜோன் கிறாங் தளராமல் SPLA வின் றொறிற் பிரிவையே பலம் வாய்ந்த தன்னிகரில்லாத சக்தியாக வளர்த்தெடுத்தார். இன்று இவர் தலைமையிலான SPLA தென் சூடானிய மக்களின் நலன்களைப் பேணும் ஒரே அமைப்பாகவும் பலபிராந்தியங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நிழல் அரசாங்கமாகவும் விளங்கி வருகின்றது.

சூடானிய விடுதலை இராணுவம் கொண்டுள்ள நோக்கம் இன, மத, மொழி வேறுபாடற்ற ஜனநாயக சூடானை உருவாக்குதல் என்பதாகும். தற்சமயம் SPLAவிற்கும், அரசியல் பிரிவான சூடானிய மக்கள் விடுதலை முன்னணிக்கும் பிரதான இயங்கு தளமாக சூடானின் தெற்கு, கிழக்கு, மேற்கு பகுதிகளோடு நுபா மலைநாடும் விளங்குகின்றது. தமது இலக்கு ஒட்டுமொத்த சூடானாகும் என்று கூறும் மக்கள் விடுதலை முன்னணியினர், தென்சூடான் அதனுள் ஒரு சுயாட்சி வலயமாக விளங்கும் என்று கூறுகின்றார்கள்.

சூடானிய விடுதலை முன்னணி தனது நோக்கத்தை ஈடேற்ற ஆயுதப் போராட்டமே ஒரே வழி என உறுதியாக நம்புகின்றது. இதன் மூலமே சூடானின் அடிப்படைவாத ஆட்சித் தலைமையை அகற்ற முடியும் என நம்புகின்றது. முதற்கட்டமாக ஒரு பிரதேசத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் அதன்பின்னரே இராசதந்திரம் நிர்வாகம் என்பனவெல்லாம் என்பது விடுதலை முன்னணியின் செயற்பாட்டுப் படிமுறையாக உள்ளது. அரசியலையும் இராணுவப்பிரிவையும் ஒருங்கே கொண்டுள்ள சூடான் மக்கள் விடுதலை முன்னணி தமது மக்கள் விடுதலை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடுவதற்கு SRRA (Sudan Relief and Rehabilatation Association) என்ற அமைப்பை நிறுவி மக்கள் நலனை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துள்ளது.

1995 பெப்ரவரி 21ஆம் திகதி ஜோன் கிறாங் அவர்கள் புதிய சூடான் படையணி (New Sudan Brigade) என்ற விசேட படையணி ஒன்றை சூடானிய மக்கள் விடுதலை இராணுவத்தில் இருந்து உருவாக்கியுள்ளார். இது வெளிநாடுகளில் அரசியல் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற அதேவேளை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளை விடுவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும். தற்சமயம் நடைபெற்று வரும் வடக்கின் எதிர்த் தரப்பினுடனான பேச்சுவார்த்தையின் பிரகாரம் SPLA வின் படையணிகள் வடக்கு சூடானிலும் களத்திலிறக்கப்பட்டுள்ளன. அதாவது பிராந்திய விடுதலை அமைப்பாக இருந்த SPLA/M இன்று ஒரு தேசிய விடுதலை அமைப்பாக பரிணமித்துள்ளது. விடியலை வென்றெடுக்கும் வழியில் சூடானிய மக்கள் விடுதலை இராணுவம் நிதானமாக ஆனால் உறுதியாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இந்த அரசியல் தீர்வுத்திட்டத்தைக் கொண்டு வந்தே ஆகுவேன். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காது விடினும் அடுத்த பாராளுமன்றத் தேர்தலை மக்கள் ஆணையாக ஏற்று தீர்வுத்திட்டம் கொண்டுவரப்படும்." இது சந்திரிகாவின் ஒரு பக்கச் சபதம். இந்தத் தீர்வுத்திட்டம் யாருக்காக?

## எங்கள் பார்வையில்...

# இறுதி அத்தியாயங்களை நோக்கி...

ஏன் தீர்வுத்திட்டம் தேவைப்படுகின்றது? எதற்கு இது தீர்வளிக்கிறது? யார் இதனை ஏற்றுக் கொண்டார்கள்? என்ற கேள்விகள் வேறுவிடயம். "இழந்த பிரதேசத்தை மீளப்பிடித்தே தீருவோம். புலிகள் ஒழிக்கப்பட்டே யாகுவர்" இது அரசதரப்பின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் சபதம்.

ஜனாதிபதி சந்திரிகாவின் மறுபக்க சபதம் வேறு. அவர் விடுத்த வேண்டுகோள் பற்றி, வாக்குறுதி பற்றி தேசிய பௌத்த மகாசங்கத்தின் தலைவர் மாதுளவாவே சோபித தேரர் கூறுகிறார். "யுத்தத்திற்கு இளைஞர்களை ஒன்று சேர்க்க வேண்டுமென (20 000) மகாசங்கத்தினருக்கு ஜனாதிபதி சந்திரிகா விடுத்த சவாலை மகாசங்கத்தினர் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஜனாதிபதி கூறியது போன்று அவரது தலைமையின் கீழ் இளைஞர்கள் யுத்த முனைக்குச் செல்வதை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்" இது மாதுளவாவே சோபித தேரர் பத்திரிகையாளர்களுக்கு, ஜனாதிபதி தம்மிடம் விடுத்த வேண்டுகோளைப்பற்றிக் கூறியது.

தீர்வைக் கொண்டுவந்தே தீருவோம் என்ற சந்திரிகாவே நாட்டை அவசரகால நிலையின் கீழ் வைத்துள்ளார். ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தத்திற்காக அரசதரப்பினர் உலக நாடெங்கும் அலைந்து திரிகின்றனர். பாதுகாப்புச் செலவிற்காக குறை நிரப்புப் பிரேரணை மூலம் 2,800 கோடி ரூபா மேலும் யுத்தத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. யுத்தத்திற்காக அரச ஊழியர்கள் இரு நாள் சம்பளத்தை வழங்க வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வர்த்தகர்களிடமும் ஏனைய நிதி ஸ்தாபனங்களிடமும் யுத்தத்திற்காக நிதி வசூலிக்கப்படுகிறது. இவை எல்லாவற்றையும்விட தீர்வுத்திட்டத்தைக் கொண்டுவந்தே தீருவேன் என்ற சந்திரிகா, தொலைக்காட்சியில் "யுத்தத்தில் ஏற்பட்டிருப்பது ஒரு தற்காலிகப் பின்னடைவு மட்டுமே" என்ற அறிவிப்பை வேறு விடுத்துள்ளார் இந்த முரண் எதற்காக.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ, "வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு ஐ.தே.க வின் தீர்வு என்ன?" என்ற பத்திரிகையாளரின் கேள்விக்கு "இறுதித் தீர்வு இராணுவ நடவடிக்கை அல்ல. வட- கிழக்கின் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டும். ஆனால் ஆனையிறவு முகாம் வீழ்ச்சியின் பின்பு எல்.ரி.ரி யின் கை ஓங்கியுள்ளது. யார் அதிகாரத்தில் இருந்தாலும் எந்தவொரு அரசாங்கமும் வெள்ளைக்கொடி போட்டு அடிபணிய முடியாது" என்கிறது. இந்த முரண்களின் அர்த்தம் என்ன? ஒன்றுமில்லை இவை சிங்கள ஆளும் வர்க்கங்களின் அரசியல் பித்தலாட்டம். அதில் இப்போது சந்திரிகாவின் முறை அவ்வளவுதான். இது தமிழ் மக்களுக்குக் புதியவையோ, புரியாதவையோ அல்லது தமிழர்களின் விடுதலைப் போராட்ம் எட்டியுள்ள இராணுவ மேலாண்மையை சிங்கள இனவாத ஆளும் வர்க்கங்களால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. ஒரு விடுதலைப் போராட்டம் தன் இலக்கின் இறுதி அத்தியாயங்களை எழுதும்போது எதிரித்தரப்பிடம், நிலை தளம்பலும், குழப்பங்களும், தடுமாற்றங்களும் ஏற்படுவது வரலாற்றின் வழமைதான். அதன் கரு நிலைதான் இன்று கொழும்புக்கு ஏற்பட்டிருக்கிறது.

நடந்தவை பற்றிய அதிர்ச்சி, நடக்கவிருப்பது பற்றி பேரச்சத்தை பேரினவாதத்திற்கு ஊட்டியிருக்கிறது. அதன் விளைவு ஒருபுறம் பித்தலாட்டத்திலும் மறுபுறம் தன் இறுதிப் பலத்தின் முழுமையும் திரட்டி யுத்தமுனையை சாணை பிடித்து கூர்மைப்படுத்துவதிலும் முனைப்புற்றிருக்கிறது. அதன் கூர்மையில் தமிழனின் வாழ்வு கிழிந்துபடவேண்டும் என்பதே அவர்களின் அவா. நாம் பல முறை அவர்களின் யுத்தத்தின் கூர்முனையை மழுங்கடித்தவர்கள். இப்பொழுது உறுதியாய் மலையென எழுந்து நிற்கவேண்டிய தருணம் இதுதான். அவர்களின் யுத்தத்தின் கூர்முனை எம்மில் மோதுவதால் மழுங்கிச்சிதற வேண்டும். அவர்களின் ஆயுதம் அர்த்தம் இழக்க நாம் புதிய அத்தியாயத்தைத் தொடங்குவோம்.

*"சுதந்திரப் பறவைகள்" பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் [2000 ஆவணி]*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீங்காத நினைவுகள்...

## தமிழர் நெஞ்சைவிட்டகலா புரட்டாதி மாத இனப்படுகொலைகள்

### 05.09.1990 வந்தாறுமூலைப் பல்கலைக்கழகப் படுகொலைகள்

1990 ஜூன் மாதம் 10ஆம் திகதியன்று இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிய வேளையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறீலங்காப் படைகளினதும், முஸ்லீம் ஊர்காவல் படைகளினதும் தாக்குதல்களில் இருந்து தப்பித்து செங்கலடி முதல் சித்தாண்டி வரையான கிராமங்களைச் சேர்ந்த 45,000 பொதுமக்கள் வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்திருந்தனர். பல்கலைக்கழகத்தினுள் சர்வதேச விதிகளுக்கு அமைய சிங்களப்படையினர் நுழைய மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் உடமைகள், உறவுகள் அனைத்தும் இழந்து உயிர் ஒன்றை மாத்திரமே கையில் பிடித்தவாறு பல்கலைகழகக் கட்டிடங்களினுள் ஒடுங்கினர் மக்கள். 1990 செப்டெம்பர் 5ஆம் திகதி பல்கலைக்கழகத்தைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர். 12-25 வயதானோராக ஒரு பிரிவினரும், 26-40 வயதானோர் ஒரு பிரிவாகவும், 40 வயதிற்கு மேற்பட்டோர் இன்னோர் பிரிவாகவும் தங்கியிருந்த மக்களைப் பிரித்து களையெடுப்பிற்கு வசதியாக தலையாட்டிகளுக்கு முன்னால் நிறுத்தினர். பதினொரு வயதுச் சிறுவன் உட்பட 158 தமிழர்களை கைது செய்து கைகள் பின்னே கட்டப்பட்ட நிலையில் தயாராகக் கொண்டு வந்த இரண்டு பேருந்துகளில் சிங்களப் படையினரால் கொண்டு செல்லப்பட்டனர். தமது உறவுகளை தம்மிடம் இருந்து பிரிக்க வேண்டாமெனத் தங்கியிருந்த மக்கள் கதறிய வேளையில் கயவர்களால் "கொண்டு வந்து விடுவோம்" என்று உறுதி கூறப்பட்டது. ஆனால் கொண்டுசெல்லப்பட்டவர்கள் அனைவரும் வாழைச்சேனை நாவலடி முகாமிற்கருவே உயிரோடும் கொன்றும் புதைக்கப்பட்டனர். இச்செயல்களுக்கு காரணகர்த்தாக்களாக விளங்கிய இராணுவ அதிகாரிள் மக்களால் இனங்காட்டப்பட்ட போதும் சிறீலங்கா ஆளும் தரப்பால் தண்டனை எதுவும் வழங்கப்படவில்லை. முன்னாள் நீதிபதி பாலகிட்ணர் தலைமையிலான ஆணைக்குழு குற்றவாளிகளை இனங்கண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஸ்ட்ட ஈடு வழங்கவேண்டும் என்று சிபார்சு செய்த போதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பத்து வருடங்களாகியும் நஸ்ட்ஈடு எதுவும் வழங்கப்பட வில்லை.

மீளவும் 1990 செப்டெம்பர் 23 ஆம் திகதி வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்திற்கு வந்த படையினர் 16 பொதுமக்களைப் பிடித்துச் சென்று படுகொலை செய்துள்ளனர். எல்லாமாக 173 அப்பாவித் தமிழர்கள் சிங்களஇனவாதப் படைகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

### 09.09.1990 சத்துருக்கொண்டான் கிராமப் படுகொலைகள்

வந்தாறுமூலைப் பல்கலைகழகப் படுகொலைப் புதைகுழிகள் வெட்டிய ஈரம் ஆறும் முன்னே அடுத்த இனப்படுகொலை மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் நடந்தேறியது. செப்டெம்பர் 9ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் சத்துருக்கொண்டான், பனிச்சையடி, பிள்ளையாரடி, கொக்குவில், தன்னாமுனை ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்த படையினர் சத்துருக்கொண்டான் போயிஸ் டவுன் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி விசாரணை செய்ய விரும்புவதாகக் கூறி ஆண்கள் அனைவரையும் இழுத்துச் சென்றனர்.

இரவு ஏழு மணிவரையும் வீடுகளுக்கு வெளியே அனைத்துத் தமிழர்களையும் நிற்கச்செய்த படையினர் பின் முகாமிற்கு அனைவரையும் இழுத்துச் சென்றனர். இரவு பத்து மணியளவில் முகாமின் முன்னால் நிறுத்தப்பட்ட மக்கள் மீது சிங்களப் படையினர் கண்மூடித்தனமாகச் சுட்டனர். சூடுவாங்கி விழுந்தவர்களை வாளால் வெட்டினர் . பலரைக் கண்டதுண்டமாக வெட்டியும் உயிருடனும் புதைத்தனர். எல்லாமாக சத்துருக்கொண்டான் கிராமத்தைச் சேர்ந்த 38 பேர், கொக்குவிலைச் சேர்ந்த 47 பேர், பன்னிச்சையடியைச் சேர்ந்த 37 பேர், பிள்ளையாரடியைச் சேர்ந்த 62 பேர் என 184 தமிழர்கள் பொளத்த சிங்களப் பேய்களால் குதறப்பட்டனர். 184 பொதுமக்களில் 1, 1/2 மாதக் குழந்தை உட்பட 10 வயதிற்கு உட்பட்ட 47 பேர் அடங்குவர். அத்துடன் 50 வயதிற்கு மேற்பட்டோர் 36 பேராவர். கொல்லப்பட்டவர்களில் 91 பேர் பெண்களாவர். இக்கோரச் சம்பவத்தில் தப்பியவரான கந்தசாமி கிருஸ்ணகுமார் என்ற 27 வயது இளைஞரால் இச்சம்பவம் வெளிக் கொணரப்பட்டது.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்னால் என் மனதை தேற்றிக்கொள்ள முடியவில்லை. என்னால் என்ன, மனிதம் உள்ள எந்தவொருவருக்கும் அது முடியாத காரியம்தான்.

அந்த இறுதி நாள் சந்திப்பு மட்டும் நம்முள் இடம்பெறாமல் இருந் திருந்தால் இந்தக் குழப்பம் இருந்திருக்காது. செய்வதை மக்களுக்காகச் செய்துவிட்டு அந்தப் பெருமையோடு நிச்சயம் உயிர் துறக்கத்தான் ஆசை.

மனித வாழ்வின் ஒவ்வொரு அர்த்தங்களையும் நான் போராளியாய் ஆன பின்பே அதிகம் உணரக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு மனித மனங் களின் பாடுகளை இப்பொழுதுதான் என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது.

எவ்வளவு அழகான வாழ்வு. இந்த அழகு அலங்கோலமாய் போனதற்கு காரணம் யார்? எனக்குள்ளே நான் தேடிப் பார்க்கின்றேன். இந்த நெஞ்சம் மரத்துப்போய்விடுமோ என அஞ்சவேண்டியுள்ளது.

எத்தனை எத்தனை மனிதர்கள். அப்பப்பா... பேசத் தெரிந்த மிருகங் களும், மனித உருவில் தெய்வங்களும் எத்தனை... எத்தனை! அத்தனைக் குள்ளும் அவன் வித்தியாசமானவன் அல்லவா...!

அவனோடு இருக்கும்போது மட்டும்தான் நான் வாழ்வின் சுமைகளை மறந்திருந்தேன். எத்தனை தாக்கங்கள் அவனுக்குள்ளும் அத்தனைக்குள் ளும் அவன் மட்டும் எவ்வாறு சிரித்து மகிழ முடியும்?

கம்பீரமாக நடப்பான். பி.கே. துப்பாக்கியை தனியே இயக்கக்கூடிய நல்ல திடகாத்திரமான உடம்பு. அழகிய சுருள்த் தலைமுடி. சுமாரான உயரம். இத்தனை அம்சங்களுக்குள்ளும் எந்தக் கர்வ மும் இல்லாமல் இருப்பவன்தான் காந்தன். அவனை நினைத்தால் அழாமல் இருக்க முடியாது.

கரையின் மீது இந்த அலைகளுக்குத்தான் எவ்வளவு கோபம். இந்த அறை அறைகின்றதே! எனக்குள் சிந்தித்தபடி மணல் மீது விளை யாடும் நுரைகளின் மீது என் பாதங்களை உலவவிட்டேன்.

சோலைகளில் சரசமாடி அலையேறி விளையாடும் இளங்காற்றையோ, கரையேறி மணல் மீது படம் கீறி அலைகொண்டு போனதும் முகம்கோணி நிற்கும் நண் டையோ, மீனுக்காய் விழித்திருந்து ஏமாந்து எழுந்து பறக்கும் கொக்குகளையோ என்னால் ரசிக்க முடியவில்லை.

கடற்கரையெங்கும் என்னைப்போலவே அணிவகுத்துக் காத்து நின்ற ஒவ்வொரு போராளிகளின் மனங்களில் நுழைய முயன்று தோற்றுப்போன ஏமாற்றத்தில் நான்.

இன்னும் சில மணித்தியாலங்களில் பெரிய யுத்தம் ஒன்று வெடிக்கும். உலகம் விழி சிவக்கும். சிங்களம் திகைக்கும். எமது மக்களின் இருப்பிடம் விடுதலையாகும். எங்கள் மக்களின் மனங்கள் மீண்டும் சிரிக்கும். நான் அல்லது என் தோழர்கள் இதில் மடிவோம் எல்லாமே எமது மக்களுக்காக!

சற்று தலையை நிமிர்த்தினேன். செவ்வானம் கடலுடன் சங்கமித்தது. இன்னும்சில மணித்துளியில் காந்தன் வருவான். நான் ஏறப்போகும் சண்டைப் படகில் அவனும் நுழைந்து கொள்வான். என்னைக் கட்டிப்பிடித்து தொல்லைப்படுத்துவான். திடீரென என் நாடியைப் பிடித்து நிமிர்த்தி டேய் தங்கச்சியை கண்டனியா? என்று கேட்பான். நான் ஒருமுறை எச்சிலை விழுங்க வேண்டியிருக்கும்.

செவ்வானம் இன்னும் இருண்டது என் மனதைப்போல அவனைப் போலவே இருக்கும். அவனது தங்கச்சி என்னுள் வந்துபோனாள்.

அழகிய கூந்தலை சில தேவை நிமித்தம் அரைவாசி ஆக்கிக்கொண் டாள். அன்பு, இரக்கம், உதவி செய்தல் என்பன அவளில் குடி கொண்ட நற்பண்புகள்.

அவளை தங்கச்சியாக பெற்றதற்கு நிச்சயம் அவன் கொடுத்து வைத்தி ருக்க வேண்டும். இந்த பாசத்தையெல்லாம் துறந்து அவள் எப்படி இயக்கத் திற்கு போனாள் என்றுகூட நான் ஏங்கியதுண்டு. அவள் போன தடம் அவனும் பதித்தான். இருவரும் இந்த மண் விடுதலைப் போராளியாக வலம் வந்தனர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீச்சுவி

-காண்டீபன்-

இடப்பெயர்வின் பின் உதயமான நக ரங்களில் அதுவும் ஒன்று. அதனுள் ஒரு குச்சு ஒழுங்கையினுள் அவன் வீடு. வீட்டிற்கு முன் நிமிர்ந்து நிற்கும் இராட்சத வேம்பு. அதன் கீழ் அவர்களின் அம்மா விளக்குமாறுடன் எந்த நேரமும் நிற்க காரணமாயிருக்கும் மாமரம். அதனருகில் அந்த வீடு அல்லது கொட்டில். அதனுள் அனைவரையும் இழந்து தனிமையில் இருக்கும்அவன் அம்மா!

லீவில் பிள்ளைகள் வந்துவிட்டார்கள் என்றால் தாய் தலை, கால் தெரியாமல் ஓடித்திரிவாள். அந்தச் சாப்பாடு, இந்தச் சாப்பாடு என்று கொட்டிக் குவித்துவிடுவாள். ஆனால் இன்றோ அவர்களின் அன்னை இல்லை. வேலை காரணமாக அவள் ஊரைவிட்டே சென்று விட்டாள்.

"ஓயாத அலைகள்-03" எங்கும் எழுந்து அறையத் தொடங்கியது. எப்படியாவது அவளைப் பார்த்துவிட அவன் துடித்த துடிப்பு எனக்கு மட்டுமே புரியும்.

அவன் எடுத்த முயற்சிகள் எல்லாமே அர்த்தமில்லாமல் போனபோது அவனால் எப்படி அழாமல் இருக்கமுடியும்?

கடவுளே! இப்போ என்னிடம் கேட்டால் நான் என்ன சொல்ல? எதைச் சொல்ல?

அந்த பொன்மாலைப் பொழுதில் ஒரு நாள் நான் தெருவில் வந்து நின்றபோது எதிரே என்னருகே திடீரென்று வந்து நின்று "அண்ணாவைக் கண்டனீங்களா? கண்டால் இதைக் கொடுத்துவிடுங்கோ" என்று தந்த கடிதத்தை, அவனை நீண்ட நாட்களாக காணாதபோது பின்ஒருநாள் அதை உடைத் தபோது "அண்ணா 15ஆம் திகதி முகா முக்கு கட்டாயம் வரவும் எதிர்பார்ப்பேன்" என்று எழுதியிருந்ததை நான் 18ஆம் திகதி வாசித்து அழுததைச் சொல்லவா? அல்லது அவள் முக்கிய வேலைத் திட்டமாய் பிரிவு மாறி வேறுஇடம் சென்றதை நான் அவ னுக்கு சொல்லாமல் விட்டதைச் சொல லவா...? அல்லது இத்தனைக்கும் மேலாக இன்றைய கடல் பயணத்திற்கு பாதுகாப் பாக வரும் "கடற்கரும்புலிப் படகில்" அவள் இருந்து சிரித்து கைகாட்டிப் போனதைச் சொல்லவா? என்னுள் பல நினைவுகள் சேர்ந்து ஒன்றாய் கொன்றன.

உடம்பு முழுவதையும் வெடிபொருட் களால் நிரப்பியபடி காந்தன் என்னை நோக்கி வருகின்றான். என் நெஞ்சில் ஆயிரம் ஓசை கள் அதிர்ந்து கொண்டன.

"றைட் அடுத்த குறுாப் வந்து ஏறுங்கோ" கடற்புலிப் போராளி ஒருவனின் கட்டளை கிடைக்க நாம் ஏறவேண்டி இருந்தது. என் தோளைப் பிடித்து தாங்கியபடி காந்தன் ஏறுகின்றான். என்னை உலுப்பி எடுத்து விட்டான்.

"டேய் தங்கச்சியக் கண்டனியா" முதல் வார்த்தையே என் சிரிப்பை இழக்கவைத் தது. என்ன நினைத்தேனோ தெரியவில்லை "இல்லை" என்று சொல்லிவிட்டேன்.

உடனே அவனது முகம் சுருங்கி இருண்டு போன தையும், இமைகளுக் குள்ளேயே அவனது விழிநீர் அடங்கிப் போனதையும் நான் அறியாமல் இல்லை. வேறெதையும் அவன் என்னிடம் கேட்க வில்லை. நிறையக் கதைக்க ஆசைப்பட்டி ருப்பான். அவளின் நினைவு அதைத் தடுத்து விட்டிருந்தது.

சிறுவயதில் அவளுடன் விளையாடியது, தலைமயிரைப் பிடித்து இழுத்து அழவைத் தது, மூக்கை கடித்தது, பக்கத்துவளவில் ஒன்றாகச் சென்று பனங்கிழங்கு திருடியது, பள்ளிக்கு அவளை ஏற்றிச் சென்றது இதை




விட தான் விரும்பிய பிள்ளைக்கு இவளிடம் கடிதத்தைக் கொடுத்துவிட, அவள் அதைக் கொண்டே தாயிடம் கொடுத்து வீட்டை இரண் டாக்கியது எல்லாமே அவனை துரத்திக் கொன்றது.

மெல்லப் படகு கடல்மேல் ஏறி நகரத் தொடங்கியது. கடவுளே கடலிலே சண்டை தொடங்காமல் இருக்க வேணும். அப்படித் தொடங்காவிட்டால் "கரும்புலி"ப் படகு திரும்பிவிடும். எனது நப்பாசை இது. காந் தன் கடலையே வானத்தையே பார்த்தபடி இருந்தான்.

மீன்கள் துள்ளி படிகளில் விளையாடியது.

"எல்லோரும் அவதானிக்கவும் கட லிலே சிலவேளை சண்டை தொடங்கினா நீங்கள் ஒருவரும் சண்டை செய்யக்கூடாது. அதை நாங்கள் பார்த்துக்கொள்வோம் எனக் கடற்புலிப் போராளி ஒருவர் தெரிவித்தார்.

மாரி மழை பொழிவதைப் போல் கடல் நீர் எம்மை நனைத்தது. கடலைக் கிழித்து "போட்" நகர்ந்து கொண்டிருந்தது. "யப்பா என்ன குளிரடா" போராளிகள் வேண்டு மென்றே மேற்பல்லுடன் கீழ்ப்பல்லை உரா யவிட்டனர். மலேரியாகுளிசை போட்டவர் கள் போல் சிலர் "குபெக் குபேக்" என்று கடலை அசிங்கப்படுத்தினர்.

சுமார் 5 கிலோமீற்றர் நகர்வின் பின் வானத்தில் சிவப்பாக ரவைகள் கிளித்தட்டு விளையாடின.

எனக்கு நெஞ்சு படபடத்தது. அவள் எங்க நிப்பாளோ. திரும்பி காந்தனைப் பார்த் தேன் இன்னும் அவன் தலை நிமிரவில்லை.

"ஹலோ... ஹலோ... அவன் முட்டிட்டான் அவன் முட்டிட்டான். கவனமாகக் கொண்டு வாங்கோ வேகமா வாங்கோ... ஓவர்" பட கின் வோக்கி அலறியது. என்னையறியா மல் துப்பாக்கியைத் தூக்கினேன். பின் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டேன். காந் தன் தலை நிமிர்த்தி "இண்டைக்கு முறையா வேண்டுவார். எத்தனை டோறா வெடிக்குதோ தெரியாது..." எனச் சொல்லி சண்டைப் பக்கம் தலையை நிமிர்த்திக் கொண்டான்.

கடவுளே அவனுடைய டோறா வரக் கூடாது. வந்தால் அவள்! எனக்கு இதயம் படபடத்தது. அவளுடைய கரும்புலிப் படகு தயாராகி இருக்கும். அண்ணனுக்கு கடிதம் கொடுத்துவிட்டும் வரவில்லைத்தானே என மனம் நொந்திருப்பாள்.

அண்ணனோடு வாழ்ந்த நாட்கள், அண்ணனோடு உறங்கிய இரவுகள், தாயின் மடியில் கிடக்க சண்டை போட்டது என, எல் லாம் அவளை வாட்டியிருக்கும். எனினும் வந்த பணியில் உறுதியாய் இருப்பாள். அண்ணன் சண்டைக்கு வந்ததோ அவளின் படகுக்குப்பின் அவனும் படகேறி வரு வதோ அவளுக்குத் தெரியாது.

அந்தோ! கடல் திருவிழா தொடங்கி விட்டது. "எல்லோரும் தலைகளைக் குனி யுங்கோ. ஒருவரும் கத்தக்கூடாது" கடற் புலிப் போராளியின் கட்டளையைத் தொடர் ந்து அவனுடைய "கன்" வாந்தியெடுக்கத் தொடங்கியது. சண்டை தீவிரமடைந்தது. கடலில் இப்படிசமர் வெடிக்குமென நான் நினைத்திருக்கவில்லை.

"மச்சான் அடிச்சுக் கொண்டு வா பிரச் சினை இல்ல. எங்களின்ர கறுப்பும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பக்கத்திலதான் நிக்குது ஓவர். வேகமா வரவேணும் ஓவர்" படகின்வோக்கி அலறியது.

கடவுளே அவளா. அவள் எனக்கு துக்கம் தொண்டைக்கு...

"அடி மச்சான் அடி... இவருக்கொரு சேட்ட" காந்தன் உணர்ச்சிவசப்பட்டான்.

"அந்தா கறுப்பு போகுது. இனி அவர் ஓட்டம்தான்" கடற்புலிப் போராளி கூறியதும் அனைவரும் நிமிர்ந்து பார்த்தனர்...

நான் மட்டும் அதைப் பார்க்க முடியாமல் விம்மி அதை கடல் நீர் மறைத்தது.

"அந்தா கிட்டப்போகுது... அடிக்கிறான் அடிக்கிறான். அண்ணை அமத்திக்கொண்டு போங்கோ வெடிக்கிறத பார்ப்பம்" காந்தன் அவசரப்பட்டான்.

"கடவுளே" என்வாய் முணு முணுத்தது... என் நரம்புகள் புடைத்தன... கை கால் பிடுங்கின "காந்தன்" என்று கூப்பிட்டு... அழுதுவிட்டேன்.

அவன் என்னைக் கவனிக்காமல், "அந்தா கிட்டப் போட்டுது..." "காந்தன்" நான் மீண்டும் கூப்பிட்டேன்... "போட்டுது" "காந்தன்" நான் "போட்டுது.... போட்டுது..." போட்டு "போரம்...மா... மா..." "காந்...த...ன்." நான் கத்திவிட்டேன். அப்போதுதான் அவனும் அழுவது தெரிந்தது. "என்னடா... காந்தன்... என்ன..."

"இல்ல மச்சான் எங்கட போராளிகளில் ஒருவன்... வெடிச்சிட்டான். யாரோ தெரியாது. விடிஞ்சாத்தான் தெரியும்... இந்த மக்களுக்காக எப்படியெல்லாம்" மிகுதியைச் சொல்லாமல் முடித்துவிட்டு சோர்வுடன் அமர்ந்தான்.

அலைகள்... அவளைக் காப்பாற்ற முடியாமல் போனதையிட்டு வருந்தி தம்மை கரையுடன் வேகமாக மோதிக்கொண்டன... நிலவு இந்தக் காட்சியை பார்த்து வேதனைப்படாமல் இருக்க முகிலுக்குள் தன்னை மறைத்துக்கொண்டது. வானத்தில் ஒரு நட்சத்திரம் அதிகரித்தது.

சண்டை ஓய்ந்து நாம் இறங்க வேண்டிய இடத்திற்கு படகு நகர்ந்தது.

இவளின் தியாகம் இல்லையென்றால் இந்தச் சண்டையில் நாம் அனைவரும் மடிந்திருப்போம்...

கடவுளே...! நாளை விடிந்தவுடன் அவனுக்கு சேதி கிடைக்கும்... "ஐயோ என்ர தங்கச்சி வெடிக்கிறத... நான் பார்த்தேனே..." எனக் கதறுவான் "டேய் என்ர தங்கச்சி போனது உனக்குத் தெரியாதா..." என என் தோளைப்பிடித்து உலுக்குவான்... என் கன்னத்தில அறைவான்... நானும் சாகப் போறன் என்ன விடு... என்று... குளறுவான்.

நான் என்ன சொல்ல நாளை விடியும் போது அவன் இவைகளைக் கேட்டால் நான் என்ன பதில்....

## நெருப்புப் புலிகள்

*கணக்கிலா கனரகம்*
*சிறீலங்கா இராணுவம்*
*கடும் மலையாய் நின்றாலும்*
*கரும்புலிப்பாய்ச்சலில்*
*கைப்பிடிச் சாம்பலாகும்.*

*கடல் ஆழக் கால் பதித்து*
*கண்தெரியா உயரம் தரித்து*
*எம்தாய்மண் நெரிக்க வந்த*
*கொடுங்கோல் அரக்கியும்*
*கொடும்பாவியாய் எரியும்.*

*சோதரர் வென்றிடச்*
*சுதந்திரப் பாதை சமைக்கும்*
*சொந்த மண் காக்க*
*பொரிந்து நெருப்பாகிப் பூக்கும்*
*கரும்புலித் தீப்பூக்களில்*
*கயவர் கூட்டம் சிதறி மரிக்கும்*

*கனன்று பாய்ந்து போரிடும்*
*கடற் கரும்புலிப் பாய்ச்சலில்*
*கடலும் கொந்தளித்து அழிக்கும்*
*கடல் நின்ற அரக்கன்*
*கப்பற் படையும்*
*கடகடத்து நொருங்கும்.*

*வருந்தி நொந்துபோன*
*வாழ்வினியில்லை*
*முந்தி ஏந்திப்பிழைத்ததும்*
*முடிந்து போன கதை*

*தரைக் கரும்புலிகள் தாவெழுந்து*
*பெருந் தீதெழல் பரப்பி*
*கொடுந் தீயர் கூட்டம் தீய்ந்திடும்.*
*சந்தி சிரித்திடும்*
*சந்திரிகாவின் கொட்டம்.*

*எம் தமிழ் வீரத் தீ*
*தின்றுயிர்க்கும்*
*நெருப்புப் புலிகள்*
*தீக்கிரையாக்கும்*
*தீயவர் சாம்பல் பறக்கும்.*




**ஜெ.கரிகாலன், மலேசியா**

# உயிரிலும் மேலான தாயகத்தை மீட்க உறுதி கொள்வோம்

**13.09.2000 அன்று 10 மணிக்கு புதுக்குடியிருப்பில் நடைபெற்ற போரெழுச்சி உலா நிகழ்வின்போது தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்த தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து....**

எமது தேசியத் தலைவர் அவர்களின் உயரிய சிந்தனைகளுக்கும், எமது தேசத்தை விரைவாக வென்றெடுக்க வேண்டும் என்ற ஆவலின் அயராத முயற்சிக்கு மக்கள் அனைவரும் முழுமையான செயல்வடிவம் கொடுக்க கிளர்ந்தெழுந்து அணி திரள வேண்டும்.



கடந்த ஆண்டு எமது தலைவர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று மக்களாகிய நீங்கள் போரெழுச்சி அணிகளாகவும், எல்லைப் படைகளாகவும், கடந்த போரெழுச்சி ஆண்டில் நீங்கள் வழங்கிய பரிபூரணமான ஒத்துழைப்பினால் நாங்கள் ஓயாத அலைகள்-3இல் உலகம் வியக்கும் பல வெற்றிகளைப் பெற்று இன்று வன்னிப் பெருநிலப்பரப்பின் பெரும் பகுதிகளை மீட்டெடுத்ததுடன், மணலாற்றில் குறிப்பிட்ட பிரதேசத்தையும், ஆனையிறவு போன்ற பன்னெடுங்காலமாக பகைவன் ஆக்கிரமித்திருந்த தமிழீழத்தின் பிரதான பகுதிகளையும் குறைந்தளவு இழப்புக்களுடன் வெற்றிகரமாக மீட்டெடுத்துள்ளோம். அதேவேளை சிங்கள அரசுகளின் பல்வேறுபட்ட நடவடிக்கைகளால் எமது மக்களாகிய நீங்கள் படும் அவலங்களுக்கும் வேதனைகளுக்கும் முடிவுகட்ட விரைவான விடைகாண அனைவரும் அணிதிரண்டு எம் விடுதலைப்போரை வென்றெடுக்க உறுதி எடுத்துக்கொள்வோம். இதுவரை காலமும் நீங்கள் எமக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கள் மென்மேலும் அதிகரிக்க வேண்டும். தளராத உறுதியுடன் விடுதலை காணக் கிளர்ந்தெழுவோம். விடுதலைப் போர் பல வெற்றிகளைப் பெற்றுவரும் இந்தக் காலகட்டத்தில் மக்களாகிய நாம் அனைவரும் போர்ப் பயிற்சிகளைப் பெற்று சகல வழிகளிலும் போர்ப்பணிகளில் பங்கெடுத்து விடுதலைக்கு விரைந்து உழைக்க திடசங்கற்பம் பூணவேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உனது பெண்குழந்தையின் வரவுக்காக

நீ அழுது கொள் அம்மா
உனது விருப்பம் போலவே
யாராகிலும் தேற்றுதல் கூடும்
இருப்பினும் நிறுத்தாதே
ஒரு தாய் விரும்புவது போலவே
நான் வளரும் நாட்களைப் பார்க்க
நீ விரும்பினாய்
எப்படி நீ அழாமலிருத்தல் கூடும்
நீ அழுது கொள்
இன்று மட்டும், இன்று மட்டுமே



எனது பெட்டியை திறக்க முற்படாதே
நான் உனது குழந்தையேதான்
யுத்தத்தில்தான் சிதைந்தேன்
யுத்தம் உக்கிரமாகவே நிகழ்ந்தது.
நேற்றைய களத்தில்
உன் பெண்குழந்தையைக் கண்டேன்
வீட்டில் வகிடெடுத்துப் பின்னிய
இரட்டைப் பின்னலை
முன்னும் பின்னும் விட்டபடி
குதித்தோடுபவளை,
காத்திருந்தாள்
தலைமயிரை
என்னைப்போலவே
கத்தரித்திருந்தாள்.
என்னருகே வந்து
எப்போதும் போலவே அழைத்தாள்
இரத்தம் தோய்ந்த என்
இலக்கத்தை
மீண்டும் மீண்டும் பார்த்தாள்
அழமுற்பட்டாள் பின் அழவே
செய்தாள்.
தங்கையின் வரவை எதிர்பார்க்காதே
அவள் வரவே விரும்பினாள்
போர் விடவில்லை.....
விடவேயில்லை
அவள் வரவேண்டுமென
எனது தோழர்களை
வற்புறுத்தாதே அம்மா.

–ஆகாசா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூன்று தடவைகள் சிறீலங்கா இராணுவப் பேச்சாளராகக் கடமை புரிந்தவரான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க தனது அனுபவங்களை "ஒரு யுத்த வீரனின் சரிதை" எனும் பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். அந்நூல் குறித்து "சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார இதழில் வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகள்.

*– மொழியாக்கம் ஜெனன்*



# இராணுவச் சிப்பாய்கள் தப்பி ஓடுவதேன்? சரத்முனசிங்க கூறும் காரணங்கள்

சிறீலங்கா இராணுவத்திற்கு மிகப்பெரும் பிரச்சனைகளாக இருப்பது தேவையான ஆயுத சாதனங்கள் வசதிகள் அதனையும்விட மனித வலு. எமது சொந்தத் தயாரிப்புகளில் கவனமெடுத்து இவற்றை நிவர்த்தி செய்ய முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் மிகப் பெறுமதி வாய்ந்த ஆயுத தளபாடங்கள் இராணுவத்தால் எதிரிகளுக்கு மிகச் சுலபமாக அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. புலிகளால் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான போர் நடவடிக்கையின்போது தலைமைகளின் தவறான வழிநடத்தல்கள் அக்கறையின்மை போன்ற காரணங்களால் இந்த ஆயுத தளபாடங்கள் தானமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஆயுதங்களுக்குப் பதிலாக அரசாங்கமும் இந்நாட்டு மக்களும் தாராளசிந்தையுடன் உண்மையான சந்தை விலையிலும் அதிகளவு பணம் கொடுத்து வாங்கி வருவது வழக்கமாகி விட்டது. இவ் விடயங்கள் கடந்த காலங்களில் பொதுமக்களால் வெளிப்படுத்தப்பட்டபோதிலும் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவராலும் அண்மையில் இக்கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

நீண்டு நடைபெறும் இந்தப் போரில் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள சண்டைக் களங்களில் தொடர்ந்து பணியாற்றியவரும் 30 வருடகால அனுபவம் கொண்டவரும் கப்டன் பதவியிலிருந்து மேஜர் ஜெனரல் வரை தரமுயர்வு பெற்றவருமான சரத் முனசிங்க சொல்லமுடியாத கதைகளுக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறார். இராணுவப் பேச்சாளர் என்ற வகையில் அவர் பின்னணியில் நடந்தவை என்ன என்பது குறித்து உணர்ந்திருக்க வேண்டும்.

மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க மூன்று வேறுபாடான கட்டுப்படுத்தப்பட்ட வரையறைக்குள் இராணுவப் பேச்சாளராக கடமையாற்றியும் பின்னர் பொதுக் கட்டளை அதிகாரியாகவும் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றி கடந்த மார்ச் மாதத்தில் ஓய்வு பெற்றார். அவர் இவற்றை தனது 252 பக்கங்களைக் கொண்ட "ஒரு யுத்த வீரனின் சரிதை" என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.

அவரது விமரிசனங்களில் குறிப்பாக இராணுவம் எதிரிகளுக்குச் செய்த ஆயுத அன்பளிப்புக்கள் மற்றும் சந்தை விலையைவிட அதிக விலை கொடுத்து முக்கிய இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்தமை போன்றவற்றை முடிவுரையில் குறிப்பிட்டிருக்கின்றார். தனது நூலில் 17 வருடம் கொழுந்து விட்டெரியும் போருக்கான விளக்கங்களை மக்கள் பார்வைக்கு தந்திருக்கிறார்.

இராணுவத்தில் இணைந்து கொள்வதற்கு இளைஞர்கள் மறுப்பதன் காரணம் பற்றி அவர் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள வறிய குடும்பங்களை இலக்கு வைத்து இராணுவத்தில் இணைத்துக் கொள்வதற்காக பலவித கவர்ச்சிகரமான திட்டங்களையும் சலுகைகளையும் அரசாங்கங்கள் அறிவித்திருந்தன. 1993ஆம் ஆண்டிலிருந்து புலிகளின் தாக்குதல்களால் இராணுவச் சிதைவுகள் ஜானகபுரவிலும் பூநகரியிலுமாகத் தொடர்ந்ததும் துருப்பினரைக் காவிச் சென்ற விமானம் ஏவுகணைத் தாக்குதலில் அழிந்ததும், அதன் பின்னர் முல்லைத்தீவு, கிளிநொச்சி முகாம்கள் மீதான தாக்குதல் தொடுக்கப்பட்டு இராணுவம் சீர்குலைவுகளைச் சந்தித்ததும் மக்கள் மனதில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்திவிட்டது.

பலவீனமடைந்த நிலையிலிருந்த தலைமைகள் சரியான நேரத்தில் பாதிக்கப்பட்ட இராணுவத்தினர் பற்றிய விபரங்களை அறிவிக்கத்தவறிவிட்டன. அப்படிக் கேட்கப்பட்டதற்கு கொலை செய்யப்பட்டோ காணாமல் போயேஇருக்கலாம் என அறிவிக்கப்பட்டது தமது உறவுகளைத்தேடும் வறிய குடும்பத்தவர்களுக்கு அவர்களால் தேடப்பட்டவர்கள் காணாமல் போய்விட்டதாகக் கூறும்போது புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் நம்புகின்றனர். அப்படியாக ஒரு சிலர் இருக்கலாம் என்றாலும் இப்படியான செயற்பாடுகள் இராணுவத்தில் இணைவதால் ஏற்படும் அபாயங்களை மக்களுக்கு உணர்த்தியது.

இராணுவத்திலிருந்து ஏன் ஓடிப்போகிறார்கள்? இந்தக் கேள்விக்கு சரத் முனசிங்க சொல்கிறார். சிப்பாய்கள் ஓடிப்போவதற்குக் காரணம் தமது பலவீனங்களாலும் அனுபவமில்லாத தலைமைத்துவத்தாலுமே. சிப்பாய்கள் வேறாக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படும்போதும் தலைமைத்துவத்துடன் நெருக்கமின்றிப் போகும்போதும் தம் சுயகட்டுப்பாட்டையும் நம்பிக்கையையும் இழந்துவிடுகின்றனர். வழமையானதும் சம்பிரதாயமாக இல்லாததுமான செயற்பாடுகள் இருக்குமானால் தலைமைத்துவத்துடன் நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்வர்.

மற்றொரு பிரதான விடயம் நிர்வாகம். விடுமுறையில் செல்ல அனுமதித்தல், கிடைக்கக்கூடிய உணவு, தங்குமிட, கழிப்பிட, தண்ணீர் வசதி, காயமடையும்போது உடனடி மருத்துவ வசதி இவற்றைவிட மனிதாபிமானத்துடன் தலைமைத்துவம் அணுகும் முறைகளினால் பிரச்சனைகள் எழாமலிருக்கும்.

மூன்று தடவைகள் இராணுவப் பேச்சாளராகவிருந்த சரத் முனசிங்க தனது நூலில் குறிப்பிடுகின்றார், எப்படியோ நாம் புலிகளைவிடப் பின்தங்கிய நிலையிலேயே செய்தித் தகவல் பரிமாற்றம், பொதுஜன உறவுகள் நடவடிக்கையில் உள்ளோம். எனது அடுத்த ஆதங்கம் இந்த நாட்டிலுள்ள சமாதானத்தை நேசிப்போருக்கு சகல வழிகளும் அடைக்கப்பட்டிருப்பதே. வடக்கு கிழக்கில் நடைபெறுவது என்ன என்பதை அறிவதில் ஆவலாகவும் அறியமுடியாமலும் வைக்கப்பட்டிருக்கிறார்கள். சில சமாதான விரும்பிகள் யுத்தகள இராணுவ வெற்றிகள் கிட்டுவதை ஊக்குவிக்கிறார்கள்; சில நல்ல செய்திகளைக் கேட்க விரும்புகிறார்கள்.

நாம் செய்தியாளர்களை களத்திற்கு அனுமதிப்பதில்லை. ஆனால் எமக்குத் தேவையேற்படும்போது அழைத்து வரவேற்கப்படுகிறார்கள். நாம் எமக்கு வேண்டிய நேரத்திலல்லாது அவர்களுக்குவேண்டிய நேரத்தில் செய்தியாளர்களை வரவேற்கவே வேண்டப்படுகிறோம். அதனால் இராணுவத்திற்கும் ஊடகங்களுக்குமிடையே நன்மதிப்பை அதிகரிக்கச் செய்து சில பிரச்சார யுக்திகளைப்பெறலாம்.

புலனாய்வு மற்றும் உளவியல் நடவடிக்கைகள் பற்றி அவர் குறிப்பிடுகையில் யுத்த களத்திலுள்ள உத்தரவிடுவோர் சிலர் தகவல் கிடைக்க வழியில்லாதவிடத்து தொழில்நுட்பப் புலனாய்வாளராக மாறிவிடுவர். புலிகளால் செய்தி அனுப்பும் சாதனங்களின் உரையாடல்களையோ அல்லது புலிகளின் வானொலிச் செய்தி அறிவிப்புகளையோ நம்பி செயற்படுவர். இவ்வாறான மதிப்பீடுகளால் புலிகளின் தாக்குதல் பலம் அல்லது புலிகளின் எண்ணிக்கை குறித்து அறியத்தவறி விடுகின்றனர்.

புலிகள் எம்மைவிட ஊடுருவல்களிலும் வேவுப்பணிக் கலைகளிலும் வெகுதூரத்திற்குச் சென்றுவிட்டனர். அவர்களது தகவல் தொடர்பு பரிமாற்றங்களும் எல்லா நேரங்களிலும் நல்ல முறையில் நடத்தப்படுவதை குறிப்பிட வேண்டியுள்ளது என்கிறார்.

இந்நூலில் இராணுவ நடவடிக்கைகள் விடுதலை புலிகளின் படைநடவடிக்கைகள் என்பன பற்றியும் விரிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அணையாத தீபங்கள்



**லெப். கேணல்அருணா / அருணன்**
*இராசேந்திரம் சசிகரன்*
16.12.1973 - 22.09.1998

துயரம் நிறைந்த தமிழினத்தை துன்பக்கடலில் இருந்து மீட்டிடத் தோன்றிய ஆயிரம் ஆயிரம் மாவீரர் வரிசையில் அருணாவும் ஒருவன்.

வடமராட்சிப்பகுதியில் பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கும் வயல்வெளிகளையும், வானைத் தொடுவதற்குப் போட்டி போட்ட வண்ணமுள்ள மா, பலா, பனை, தென்னை போன்ற பயன்தரு மரங்களையும் தன் அணிகலனாக அணிந்திருந்தாள் துன்னாலை அன்னை. அருணா துள்ளி விளையாடிய பெருமைக்கும், கறுப்பு மலர் கரும்புலிகள் வரிசையில் தன் பெயரை முதலாவதாகப் பதித்த கப்டன் மில்லரை வளர்த்தெடுத்த பெருமைக்கும் உரியவள் இவளே.

இராசேந்திரம் பூமணி தம்பதிகளின் அருந்தவப் புதல்வனாக சசிகரன், கண்ணன் எனும் செல்லப் பெயருடன் 16.12.1973 இல் அவதரித்தான். அன்னை அரவணைப்பிலும் தந்தையின் வழிகாட்டலிலும் வளர்ந்து வரும் நாளில்.....

பாரினில் தமிழ் வீரனாய் வீறுநடை போடும் விடுதலைப் போராட்டத்தில் 1989 ஆம் ஆண்டு தன்னை இணைத்துக் கொண்டான். அன்று முதல் இவன் அருணா / அருணன் என அழைக்கப்பட்டான்.

தினேஸ்-11 பயிற்சி முகாமில் தனது ஆரம்பப் பயிற்சியை முடித்து பல துறைகளிலும் செயற்பட்டு வரும் நாளில் 1991ஆம் ஆண்டு ஆ.க.வெ சமரிற்கு இவன் தலைமையில் 30 பேர் கொண்ட அணி அனுப்பப்பட்டது. எதிரியுடன் ஆவேசத்துடன் போரிட்டுக் கொண்டிருந்த வேளை இவனது அக்கா கப்டன் லீமா வீரச்சாவடைந்த செய்தி இவன் செவிகளுக்கு எட்டிற்று. இரண்டு கண்களில் இருந்தும் நீர்ப்பூக்கள் மாலையாக உருவெடுத்து அக்காவிற்கு அணிவித்து மன உத்வேகத்துடன் போராடினான். பின்னர் கட்டைக்காட்டிலிருந்து புல்லாவெளி நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த இராணுவத்தினரை வழிமறிப்பதில் இவனுடைய அணி ஈடுபட்டிருந்த வேளை இவன் தலைப் பகுதியில் காயமுற்றான். மணலாற்றுப் பகுதியை முற்றுகையிடும் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததை அறிந்தவன் தானும் போர்க்களத்திற்கு சென்று போரிட எண்ணி, பொறுப்பாளரிடம் அனுமதி கேட்டான். பூரணமாகக் குணமடைந்த பின் களத்திற்கு செல்லலாம் என பொறுப்பாளர் கூறினார். அதற்கு "எனக்கு காயம் மாறிவிட்டது" எனக் கூறி அனுமதி வேண்டினான். இச்சண்டைக்கும் 30 பேர் கொண்ட அணி இவன் தலைமையில் அனுப்பப்பட்டது. 25 நாட்கள் இச்சமர் நடைபெற்றது. இவனும் இவனுடைய அணியும் ஆவேசத்துடன் செயற்பட்டனர். இச்சமரின் போது மீண்டும் இவன் விழுப்புண் அடைந்தான்.



இவனது திறமையையும், துணிச்சலையும் சுறுசுறுப்பையும் கண்ட பொறுப்பாளர் இவனை 1993ஆம் ஆண்டு வடமராட்சிக் கோட்டப் பொறுப்பாளராக நியமித்தார். தன் கடமையைச் சிரமேற்கொண்டு திறம்படச் செயற்பட்டான். இங்குள்ள சிறு குழந்தைகளின் உள்ளங்களிலே இவனது அன்பு வேரூன்றிவிட்டது. இங்கு வாழும் மக்களின் மனங்களில் அழியாத இடத்தைப் பெற்று அவர்களின் அன்புக்குரியவன்ஆனான்.

வடமராட்சிக் கோட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிக்கெனத் தெரிவு செய்யப்பட்டவர்களில் இவனும் ஒருவனாக இருந்தான். தன் திறமைகளை அங்கும் வெளிக்காட்டி நன்நிலை அடைந்தான்.

1995ஆம் ஆண்டு பலாலிப் பகுதியில் இவன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட மோட்டார்த் தாக்குதலின்போது, எதிரியின் எறிகணை ஒன்றினால் தன் கால் ஒன்றினை இழந்தான். எனினும் மனந்தளரவில்லை. தொடர்ந்து யாழ்மாவட்ட நிர்வாக வேலைகளைத் திறம்படச் செய்தான். "சூரியக்கதிர்" நடவடிக்கையின்போது பின்தள வேலைகளை வினைத்திறனுடன் செய்து முடித்தான். இதன் பின் வன்னிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணப் பகுதியில் நிற்கும் போராளிகளுக்கான உணவு மற்றும் விநியோகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான்.

1996ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கடலன்னையுடன் விளையாட விரும்பி கடற்புலி அணியில் தன்னை இணைத்துக் கொண்டான். கடலிலே வரும் அந்நியனின் கலங்களை கதிகலங்கிடச்செய்யும் போர் முறைகளிலே தேர்ச்சி பெற்றான். இவனது துணிவும், மன வுறுதியும், செயற்பாடுகளும் இவனை ஓர் கடற்புலித் தளபதியாக பல அணிகளை வழிநடாத்தும் ஓர் வீரனாக உருவாக்கியது.

22.09.1998 அன்று காலைக்கதிரவன் கதிர்களைப் பரப்பி இருளை ஒழித்து ஒளிபரப்பும் நேரம். அதிகாலை 5.30 மணி. எதிரியின் கலங்கள் "நான்" என்ற அகங்காரத்தில் அணிவகுத்து முல்லைக் கடற்பரப்பில் வந்து கொண்டிருந்தன. அவ்வேளை அருணாவின் அணியின் கலங்கள் கண்களைத் திறந்து கொண்டன. எதிரியின் படகுகளை சிதறி ஓடும்படி செய்தன. பின்நோக்கிச் சென்ற படகுகளை இடைமறித்துத் தாக்குவதற்காக அருணா அணியின் படகுகள் மிக வேகமாக, உற்சாகமாகச் சென்று கொண்டிருந்த வேளை எதிரியின் கலத்திலிருந்து ஏவப்பட்ட ரவை ஒன்று அருணாவை எம்மிடமிருந்து பிரித்தது. சுதந்திரத் தமிழீழக் காற்றை சுவாசிப்பதற்காக பத்து ஆண்டுகளாக எம்முடன் கலந்திருந்தவன், இன்று... கடலன்னை மடியில் தலை வைத்து மீளாத்துயில் கொள்கின்றான்.

**போராளி லீமா**
**தலைமைச் செயலகம்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மட்டக்களப்பில் தொடரும் சிங்கள அரசபயங்கரவாதம்


பூபாலபிள்ளை சிறிகாந்தன்


கனகசபை கருணாரன்

மட்டக்களப்பு மாவட்டதிலுள்ள ஆரையம்பதியில் கடந்த 12.09.2000 அன்று சிறீலங்கா அதிரடிப்படை மறைந்திருந்து கண்மூடித்தனமாகச் சுட்டதில், இரண்டு அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். 24 வயது கனகசபை கருணாகரன், 23 வயது பூபாலபிள்ளை சிறிகாந்தன் ஆகிய இருவருமே இனவெறிச் சிங்களப் படையால் படுகொலை செய்யப்பட்டோராவர். இவர்கள் இருவரும் மரணவீடொன்றிற்குச் சென்று திரும்பிய வேளையிலேயே இவ்வாறு பரிதாபகரமாக மரணத்தைத் தழுவ நேரிட்டுள்ளது. இவர்களைப் படுகொலை செய்த படையினர் இருவரது சடலங்களையும் விடுதலைப் புலிகளது சடலங்கள் எனக்கூறி மட்டக் களப்பு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். ஆனால் இவ்விளைஞர்களின் உறவினர்கள் அதிரடிப்படையினரின் கூற்றை வன்மையாக மறுத்துள்ளதோடு எவருக்கும் தீங்கிழைக்காத தமது உறவுகளை அநியாயமாக அதிரடிப்படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர் எனக் குமுறுகின்றனர். சிறீலங்கா அரசாங்கங்களினால் தொடர்ச்சியாகத் தமிழீழப் பகுதிகள் மீது அமுல்ப் படுத்தப்பட்டு வரும் அவசரகாலச் சட்டத்தின் கீழேயே இக்கொலைகளையும் சிங்கள அதிரடிப் படையினர் புரிந்துள்ளனர்.

## கொழும்புக் குண்டுத்தாக்குதல்



சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் 15.09.2000 அன்று காலை 10.05 மணிக்கு குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. கொழும்பு கண் ஆஸ்பத்திரிக்கு முன்னே காவற்கடமையில் ஈடுபட்ட படையினர் வீதியால் சென்ற ஒருவரைப் பரிசோதனை செய்ய முற்பட்ட வேளையில் அந்நபரால் குண்டொன்று வெடிக்க வைக்கப்பட்டது. கொழும்பு கண் வைத்தியசாலையின் முன்புறத்தில் இடம்பெற்ற இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சிறீலங்காப் பாதுகாப்புப் படையினைச் சேர்ந்தவர்கள் உட்பட 8 பேர் கொல்லப்பட்டு, 29 பேர் காயமடைந்தனர். இவர்களில் பத்துப் பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாக கொழும்பு மத்திய மருத்துவமனை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கண் வைத்திய சாலையின் முன்புறமும் இத்தாக்குதலில் சேதமடைந்துள்ளது. இதன்போது சிறீலங்கா அரசபடைகளின் ஜீப் ஒன்றும் குண்டுத் தாக்குதலுக்குள் அகப்பட்டு பாரிய சேதத்திற்குள்ளாகியுள்ளது. குண்டுத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து கொழும்பு கண் வைத்திய சாலை, மற்றும் சுகாதார அமைச்சு அலுவலகம் என்பன அமைந்திருந்த டீன் வீதி காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக சிறீலங்காப் பாதுகாப்பமைச்சு அறிவித்துள்ளது.

## உலங்குவானூர்தி விபத்தில் அமைச்சர் அஸ்ரப் பலி



16.09.2000 அன்று காலை 9.30 மணிக்கு, சிறீலங்கா பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் பிரதான பங்காளரும் துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான எம்.எச்.எம்.அஸ்ரப் சிறீலங்கா விமானப்படையின் எம்.ஐ-17 உலங்குவானூர்தி மர்மமான முறையில் வீழ்ந்து நொருங்கியதில் பலியானார். கொழும்பிலிருந்து கல்முனைக்கு தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றிற்கு உலங்குவானூர்தியில் சென்ற வேளையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. கொழும்பிலிருந்து 110 கிலோமீற்றர் கிழக்கே கேகாலை மாவட்டத்தின் அரனாயகே பகுதியில் உலங்குவானூர்தி வீழ்ந்து நொருங்கியுள்ளது. உலங்குவானூர்தியின் விமானி உட்பட அமைச்சரும் அவரது பாதுகாவலர்களுமாக 14 பேர் இச்சம்பவத்தில் பலியாகினர். இவ்அமைச்சரின் மரணத்தினால் சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் வெற்றியும் கேள்விக்குறியாகியுள்ளது. இதனிடையே அமைச்சர் அஸ்ரப் தான் தேர்தல் பிரச்சாரத்திற்கு கல்முனைக்கு உலங்குவானூர்தியில் செல்வதற்கு முன்னர், சந்திரிகா தலைமையிலான சிறீலங்கா அரசுடன் வரும் தேர்தலில் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்று அறிக்கை விட்டுச் சென்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. முஸ்லீம்களை சிறீலங்கா அரசியலில் அசைக்கமுடியாத சக்தியாக உருவாக்கிய அஸ்ரப்பின் மரணத்தில் அரசின் கொலைக்கரங்கள் மறைந்திருக்கின்றது. இந்தச் சந்தேகத்தினை சிறீலங்கா அரசில் அங்கம் வகிக்கும் இன்னொரு முஸ்லீம் அமைச்சர் பௌசி எழுப்பியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## கண்ணிவெடித் தாக்குதலில் 24 படையினர் பலி

திருகோணமலை யாழ் வீதியில், கன்னியாவிற்கும் வெண்வேலிக்கும் இடையில் ரோந்து சென்ற சிங்கள இராணுவ வண்டி மீது விடுதலைப் புலிகளால் கடந்த 19.09.2000 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் கண்ணிவெடித் தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டது. கடந்த பத்தாம் திகதி மொறவேவ இராணுவ பொலிஸ் கூட்டு முகாம் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவடைந்த மேஜர் நக்கீரன் உட்பட நான்கு மாவீரர்கள் நினைவாக, மேற்கொள்ளப்பட்ட இவ்வெற்றிகரத் தாக்குதலில் இரு லெப்டினன் தர அதிகாரிகள் உட்பட 24 சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகளுக்கு இழப்பேதுமற்ற இத்தாக்குதலில் பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




### 04.08.00

பி.ப 5.45 மணியளவில் வவுனியா சாஸ்திரிகூழாங்குளப் பகுதியில் ரோந்து வந்த சிறீலங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் பலியாகினர். இருவர் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதியில் உழவு இயந்திரத்தில் ரோந்து வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 9 படையினர் படுகாயமடைந்தனர்.

### 09.08.00

வவுனியா பெரிய தம்பனைப் பகுதியில் அமைந்திருந்த சிங்களப் படையினரின் முன்னணிக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 9 படையினர் கொல்லப்பட்டனர். 12 பேர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை கடற்படைத் தளத்தில் இருந்து சிங்களக் கடற்படையினரை ஏற்றிய பேரூந்து உட்துறைமுக வீதிக்கு வந்த வேளையில் விடுதலைப் புலிகளின் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்கானதில் 3 கடற்படையினர் கொல்லப்பட்டனர். 6 பேர் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்புச் சித்தாண்டிப் பகுதியில் சிங்களப்படை கண்மூடித்தனமாகச் சுட்டதில் சீவல்த்தொழிலாளியான 29 வயது தியாகராஜா ஞானராஜா என்பவர் பரிதாபகரமாக மரணத்தைத் தழுவினார்.

### 10.08.00

சிறீலங்கா அரசு தமிழருக்கு எதிரான போருக்கு வரலாற்றில் முன்னெப்போதையும் விடப் பெருந்தொகை நிதியாக இவ்வாண்டிற்கு 800 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. ஏற்கனவே 600 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிகமாக 200 கோடி ரூபா தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான பிரேரணை பாராளுமன்றில் சந்திரிகா அரசினால் சமர்ப்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வட மேற்கு எல்லைப் பகுதியான மாணிக்கம் கண்டப் பகுதியில் வயலுக்குக்காவலுக்கு நின்ற 17 வயது இளைஞரான தியாகராசா சின்னராஜா வெலிகந்த முகாமைச் சேர்ந்த சிறீலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரோடு வயல்க்காவலில் ஈடுபட்ட 9 தமிழ் விவசாயிகளும் சிங்களப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டனர்.

### 16.08.00

வவுனியா நகரசபை மண்டபத்திற்கு முன்னால் பிற்பகல் 5.00 மணிக்கு தற்கொடைத் குண்டுத் தாக்குதலில் வவுனியா மாவட்ட நிரந்தர வதிவிட அனுமதிப் பத்திரம் வழங்கும் பகுதிக்குப் பொறுப்பானவராக விளங்கியவரும் சிறீலங்கா புலனாய்வுத்துறையில் முக்கிய அதிகாரியாக விளங்கியவருமான லெப்டினன் திலக் பாலசூரியா படுகாயமடைந்த நிலையில் கொழும்பில் சிகிச்சையளிக்கப்பட்ட போதும் மூன்றாவது நாள் மரணமானார். இவரோடு வாகனச் சாரதியான சிங்களச் சிப்பாயும் பலியானார்.

### 03.08.00



சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் அரசமைப்பு சீர்திருத்தத்திற்கு எதிராக பாராளுமன்றத்திற்கு உள்ளே ஐ.தே.கட்சியினர் பாராளுமன்ற நிகழ்வுகளைக் குழப்பியதோடு, நிகழ்ச்சி ஒழுங்குப் பத்திரத்தைக் கொழுத்தி தமது எதிர்ப்பை வெளியிட்டனர். பாராளுமன்ற முன்றலில் அரசிற்கெதிராக ஜே.வி.பி யினர் மிகப் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினை நடத்தினர்.




கொழும்பு மருதானைப் பிரிவேனாவில் சிஹகல உறுமயவின் அமைப்பாளர் சம்பக ரணவக்க தலைமையில் சிங்களக் கடும் போக்காளர்களின் சந்திரிகாவின் தீர்வுப் பொதிக்கெதிரான கண்டனக் கூட்டமும் நடைபெற்றது.

### 08.08.00

சிறீலங்காப் பாராளுமன்றில் சந்திரிகா அரசு சமர்ப்பிக்க இருந்த தீர்வுத் திட்டத்தை மூன்றில்இரண்டு பெரும்பான்மை இன்மையால் காலவரையன்றி பின்தள்ளி வைத்தது.

மட்டக்களப்பு வந்தாறுமூலை உப்போடை வீதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார்.

### 09.08.00



சித்தாண்டி முருகன் ஆலயத்திற்குப் பின்னாலுள்ள மணல்பிட்டி என்னுமிடத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த 20 வயதேயான அருளம்பலம் சந்திரமோகன் என்பவர் சிங்களப் படையால் கத்தியால் வெட்டிப் படுகொலைசெய்யப்பட்டார். கோரமான முறையில் இவரை படுகொலைசெய்த இராணுவம் இவரின் தலையை சொப்பிங் பாக்கினுள் எடுத்துச் சென்றது.

### 18.08.00



மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஸ்ணமிசன் பாடசாலை க.பொ.த (உ/த) மாணவனான மாணிக்கவேல் விஜயதர்சன் களுவாங்கேணியில் வைத்து சிறீலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். மேலும் ஒரு மாணவன் காயமடைந்தார்.

### 20.08.00



மட்டக்களப்பு மாவட்டத்தின் கொம்மாந்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த சிங்களப் படையினரால் 45 வயதான, வந்தாறுமூலையைச் சேர்ந்த கந்தசாமி தவராஜா என்ற விவசாயி சுட்டுக் கொல்லப்பட்டார்.

**பிழைதிருத்தம்**

சென்ற ஓகஸ்ட் இதழில் மீள்பார்வைப் பக்கத்தில் தவறுதலாக கிளி. எலும்புக்கூடுகள் மீட்புச் சம்பவம், 28.07.00 அன்று இடம்பெற்றதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 31.07.00 அன்றுதான் இச்சம்பவம் இடம்பெற்றது என்பதே சரியானதாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# “கண்கள் கூறும் வார்த்தைகள்”

www.tamilarangam.net

**காணும் கண்களே, கூறும் வார்த்தை என்ன? அஞ்சல் ஊடாக எரிமலைக்கு...**





**எரிமலை**
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*FRANCE.*

குறிப்பு: உங்கள் ஆக்கங்களை பத்து வரிகளுக்கு மேற்படாமல் அமையவும்.



## ஜுலைக்கான...

எங்கள் வானமும் மண்ணும்
எழிலோடும் மிகத் தெளிவோடும்!
எத்தனை அவலம்- துயரம் வந்த போதும்
மூப்போடு பிணி வருத்திய போதிலும்
விடியலுக்கு விலை கொடுக்க
மிகமிகத் தெளிவாக, மனிதங்கள்.
வேரோடும், வேரடி மூலத்தோடும்
தொடர்பறுத்த கிளைகளோ
உலக மாயையை உதறிவிட இயலாமல்
வசதிகளின் அனுபவிப்பால் வதைபடும்

**ந.கேமராஜ்**
**இலண்டன்**

வெறிகொண்ட வேடனின் அம்புபட்டு
வதை பட்ட, விம்பமோ?
வெறிச்சோடிப் போன வாழ்நாள்
இன்று உன் சொந்தமோ?
சுற்றம் சூழ நின்று உன் கரம் பிடித்தவளும்
நாடுவரை வந்து வழியனுப்பும் சொந்தமும் இன்று
உனக்கு கனவாகிப் போனதோ?
சுற்றிவர யாரும் இல்லா வெட்ட வெளிப்பாதையில்
தட்டத்தனியாக நடக்கையில் சுட்டெரிக்கும்
சூரியனும் உன்னை விடுவதாயில்லையோ?
வாழ்வின் இந்த இறுதி விளிம்பில் வளமான
வாழ்வொன்றைக் கண்டறிந்தாயோ?
வான் நோக்கிப் பாய்ந்து சீறிடும் சிறுத்தையின்
களம் நோக்கிக் கால்கள்
நடப்பதே உயர்வென்று உணர்ந்தறிந்தாயோ?
சுகமான வாழ்வும் இனி உன் பையில் தானோ?
சுதந்திர தேசமும் இனி எம் கையில் தானோ?

**சா.சிவகௌரி ஐடே -நோர்வே**

நிலம் பார்க்கும் கண்களே...
நீர் நினைக்கும் நினைவுகளென்ன...?
நீண்டதூரப் பயணத்திலே.....!
நினைவுகளும் நீளுகின்றதோ.?
நீதி இல்லா உலகத்திலே.
நீர் வாழ்ந்த நிலமுமில்லை- ஆனால்
நீருக்கு மட்டும் பஞ்சமில்லை.
நினைவுகளை நீரில் கரைத்துவிட்டு,
நிலையான தமிழீழத்தை நினைவில் நிறுத்தி
விடு
நினைவெல்லாம்........இனி....சுகமாகும்

**திருமதி. பிரபாகரன் கலைச்செல்வி**
**லுகானோ -சுவிஸ்**

நீண்டு விரிந்த நீலவானம்
பச்சைப் பசேலென்ற மரங்கள் பயிர்கள்
பயிர்களை மெல்லத் தாலாட்டும் இளம் தென்றல்
தாமரை பூத்து மிதக்கும் சின்னக்குளங்கள்
இத்தனையும் அழகின் அழகுகள்தான்- ஆனாலும்
அத்தனையும் அன்னியனின் காலடியில்
அழகிழந்து கிடப்பதால்
சொந்த மண்ணிலே கால்போன போக்கில்
வேறிடம் நடக்கும் இவனின்
சோகம் தீரும் நாள் விரைவினிலே வந்தே தீரும்

**வல்வை ச.ச.முத்து**
**டென்மார்க்**

தள்ளாத வயதில் தனிமை சுமந்து
சுள்ளிடும் வெயிலில் மனமும் வெந்து
அள்ளிடும்- தாயகத்தின் கொள்ளை அழகை
எள்ளளவேனும் ரசிக்க மனமின்றி
வெள்ளையுடுத்துப் போவதெங்கே?
பொல்லாத சந்திரிகா அரசின்
சொல்லொணா அரக்கத்தனத்தில்
வாழ்வாங்கு வாழ்ந்த உன் வாழ்வு போலவே
பாழாகிப் போன உன் வீட்டைப் பார்க்கவா?

**சந்திரவதனா செல்வக்குமரன்**
**ஸ்வெயிஸ்ஹால்-ஜேர்மனி**

**அநேக வாசகர்களின் ஆக்கங்கள் இடப்பற்றாக்குறையால் இடம்பெறவில்லை. தொடர்ந்தும் எழுதுங்கள். எரிமலை பிரசுரிக்கும். உங்கள் ஆதரவுக்கு நன்றிகள்.**

என் முகவரி தேடி ஒவ்வொரு ஊராய்,
என் உடமைகள் தேடி ஒவ்வொரு ஊராய்,
என் உரிமைகள் தேடி ஒவ்வொரு ஊராய்,
என் வாழ்க்கையைத் தேடி ஒவ்வொரு ஊராய்,
என் கால்கள் அலைகின்றன- ஏனென்றால்
நான் தமிழன்!

**த.இளங்கோவன்**
**மதுரை-தமிழ்நாடு**

ஒரு தனிமை
தன்னை ஜனனம் செய்த
சின்னக் கிராமத்துக்கு.....
மீண்டும்-
“ஐயோ!” அங்கே ஆமிக்காரர்
எந்தக் கூக்குரலும்
எரிக்கும் வெய்யிலும் கூட
திசையை நிறுத்த முடியவில்லை
ஆதலால்- அவன்- தமிழன்.

**லேற்றன் மைக்கல்**
**பிரித்தானியா**

புறப்பட்டு விட்டார் பொடி நடையாய்
வயதைப் பற்றி வருத்தப்படாமல்
விரைகிறார் தமிழீழம் நோக்கி....
சொந்த ஊரின் சுகத்தை விட்டு
ஈழ எல்லைக்குச் சென்று கயவனை வெட்டி
வீரச்சாவு சாவதே மேல் என்று.........
வெயிலையும் பொருட்படுத்தாது
புறப்பட்டு விட்டார், புயல்போல் கை வீசி....

**மே.கா.கிட்டு**
**மேட்டூர் அணை-தமிழ்நாடு**

செம்மணல் வீதிவழியே
செல்லும் என் உறவே! நீ
செல்லும் இடம் எங்கோ!

உன் ஊர் புகுந்த பகை
உயிருடன் இன்றில்லை
உலாவி வா! உன் ஊர்!

தள்ளாடும் வயதிலே!
தவிக்காதே! தம்பி அவன்!
தமிழீழம் வென்றிடுவான்!

**க.சிவா**
**சூரிச்-சுவிற்சர்லாந்து**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்பான வாசகர்களே! உணர்வுப்பாலமாக உறவுப்பாலமாக வெளிவரும் எரிமலை இதழ்,

உலகமெலாம் பரவி வாழும்
நம்மவர் எல்லோரையும்
சென்று எட்ட வேண்டும்
என்பது எமது ஆவல்.
உங்களை வந்தடையும்
எரிமலை
உங்கள் உறவுகளை,
நண்பர்களை
சென்றடைகின்றதா?
இல்லையெனில்...
அது உங்கள் பணி
நாளையே அவர்களும்
எரிமலை வாசகர்கள்
ஆகட்டும்!




## மாதம் ஒருமுறை எரிமலை நாடிவர நாடுங்கள்

**சுவிற்சர்லாந்து**
T.E.C.C
Postfach 2274
8031 Zurich
Tel:(41) 127 33 407

**இங்கிலாந்து**
U.T.O
202 Long Lane
London SE1 4QB
Tel:(44) 207 403 45 54

**ஜேர்மனி**
T.C.C
Postfach 101613
46016 Oberhausen
Tel:(49) 208 205 991 03

**பிரான்ஸ்**
T.C.C
341 Rue Des Pyrenees
75020 Paris
Tel:(33) 1 43 58 11 42

**இத்தாலி**
T.C.C
Via Paolo Balsamo -11
90100 Palermo
Tel:(39) 091 61 62 804

**நெதர்லாந்து**
T.C.C
P.O.Box 18600
2502 EP Den Haag
Tel:(31) 070 346 1963

**டென்மார்க்**
L.T.T.E
P.O.Box 47
7400 Herning
Tel:(45) 97 21 76 49

**நோர்வே**
T.C.C
P.O.Box 1699,Vika
0110 Oslo
Tel:(47) 22 35 09 80

**சுவிடன்**
T.C.C
Glomminge Grand-25
3rd Floor,
16362 Spanga

**கனடா**
W.T.M
64 Eaton Ave, Toronto
Ontario M4J 2Z5
Tel:(1) 416 46 15 991

**அவுஸ்திரேலியா**
T.C.C
P.O.Box 375
Preston
Victoria 3072
Tel:(61) 03 95 47 83 00

**அமெரிக்கா**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica
New York 11432
Tel:(1) 718 657 94 63

எரிமலை இதழ் சார்ந்த தொடர்புகளுக்கும், உங்கள் நாடுகளில் தொடர்பு முகவரிகள் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ERIMALAI
C/O T.C.C -France
341 Rue Des Pyrenees
75020 Paris
FRANCE.

Fax: (33) 1 43 58 11 91
Email: erimalai@freesurf.fr

**வாசகர்களே! எழுத்தாளர்களே!**
உங்கள் மேலான கருத்துக்களை, ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை எரிமலையை ஊக்கப்படுத்தும். அதன் தரத்தை மேலும் உயர்த்தும். இது உங்களின் எரிமலை.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

